இஸ்லாமிய நீதிக் கதைகள்

போர்வை
பாயிஸ் ஜிப்ரி

இஸ்லாமிய நீதிக் கதைகள்

போர்வை பாயிஸ் ஜிப்ரி

அச்சிட்டோர்:
ஏ.ரீ. பிரின்டர்ஸ்
2-1/3, ஸர் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை,
கொழும்பு – 02.
தொலைபேசி : 2320206

அமுதூட்டி
அறிவூட்டி என்னை
ஆளாக்கிய அன்பு
உம்மாவுக்கும்
வாப்பாவுக்கும்
இந்நூல்
சமர்ப்பணம்

– ஆசிரியர் –

முன்னுரை

போர்வை பாயிஸ் ஜிப்ரி என்ற பெயரில் நீண்டகாலமாக கவிதைகள், கதைகள், கட்டுரைகள் எழுதிவரும் ஜனாப் எம்.யூ.எம். பாயிஸ் ஜிபிரி அமைதியான இலக்கியப்பணியை மேற்கொண்டுவருபவர். கவிதைத்துறையில் மிகச்சிறப்பான பங்களிப்பைச் செய்துள்ள இவர் சிறந்த பாடகருமாவார். தற்போது அரசகரும மொழிகள் திணைக்களத்தில் தமிழ் போதனாசிரியராக கடமை புரிகிறார்.

ஜனாப் பாயிஸ் ஜிப்ரி மித்திரன் வாரமலரில் தொடர்ச்சியாக எழுதிய இஸ்லாமிய நீதிக்கதைகளின் தொகுப்பாக இந்நூல் உள்ளது. இஸ்லாமிய சிறுவர் இலக்கியத்துறைக்கு ஒரு சிறந்த பங்களிப்பாக இது கருதப்படலாம்.

சிறுவர்களின் ஆளுமை வளர்ச்சியில் ஒழுக்க பண்பாட்டு வளர்ச்சி மிக முக்கிய இடம் பெறுகிறது. இதில் அறநெறிக்கதைகள் முக்கிய பங்கு வகிக்கிறது. இது எல்லா கீழைத்தேய மொழகளிலும் நாம் காணும் பொதுப்பண்பாடாகும். தமிழ் மொழியில் இஸ்லாமிய சிறுவர் இலக்கியத்துறையில் போதிய கவனம் செலுத்தப்படாமை ஒரு முக்கிய குறைபாடாகும். போர்வை பாயிஸ் ஜிபிரியின் இஸ்லாமிய நீதிக்கதைகள் என்னும் இந்நூல் இந்த வெற்றிடத்தை நிரப்புவதில் ஒரு சிறந்த பங்களிப்பாககொள்ளலாம்.

இத்தொகுப்பில் உள்ள கதைகள் நபிமார்கள், முஸ்லிம் ஆட்சியாளர்கள், அறிஞர்கள், இறைநேசர்களின் வாழ்வில் நிகழ்ந்த சம்பவங்களை தழுவியனவாக உள்ளன. ஒவ்வொரு சம்பவமும் ஒரு ஒழுக்கப் போதனையை புகட்டும் வகையில் உள்ளது. உதாரணமாக ஜனாதிபதியின் ஏழ்மை நிலை என்ற கதை ஹஸரத் உமர் (ரலி) அவர்களின் வாழ்வில் ஒரு நிகழ்வை மையமாக வைத்து எளிய வாழ்வின் மாண்பைப் போதிக்கின்றது. இமாம் ஸஃதியின் வாழ்வின் ஒரு சம்பவத்தை தழுவிய கதை பிறரில் குறைகாணும் தன்மையைத் தவிர்த்துக்கொள்வதின் பெருந்தன்மைப் பற்றிய நற்பண்பினை புலப்படுத்துகிறது.

பாடசாலை மாணவர்களுக்கு ஒரு பயனுள்ள தொகுப்பாக இந்நூல் உள்ளது. ஜனாப் பாயிஸ் ஜிப்ரி அவர்களின் இந்த ஆக்கத்தை சிங்கள மொழியில் பெயர்க்கும் முயற்சி மேற்கொள்ளப்படின் சிங்கள மொழி மூலம் கல்வி பயிலும் மாணவர்களுக்கும் மிகப் பயனுள்ளதாக அமையும்..

அல்லாஹ் அவரது இம்முயற்சியை அங்கீகரிப்பானாக.!

கலாநிதி எம் ஏ எம் சுக்ரி
பணிப்பாளர்
ஜாமியா நளீமியா கலாபீடம்

த.பெ. இல: 01
பேருவல.

பாராட்டுரை

போர்வை பாயிஸ் ஜிப்ரி ஒரு நாடறிந்த எழுத்தாளர், மும்மொழிகளிலும் ஆழ்ந்த புலமை படைத்தவர் மேலான பண்பாளர், மனிதகுல நேயர் பல தசாப்தங்களாக எழுத்துப்பணியாற்றி வருபவர்.

இவரது ஆக்கங்கள் பல்வேறு சஞ்சிகைகளிலும் அவ்வப்போது முகிழ்ந்துள்ளன. வாசகர் வட்டாரத்தில் கமழ்ந்துள்ளன. பாராட்டுதல்களையும் வரவேற்பையும் ஈட்டியுள்ளன. அழகு தமிழ், ஆற்றொழுக்கு நடை பாணியில் எளிமை, தெளிவு.

இவர் சமயக்கட்டுரைகள் வடித்துள்ளார். சமூக வியாசங்கள் தீட்டியுள்ளார். தத்துவ ஆக்கங்கள் இயற்றியுள்ளார். கவிதைகளும் படைத்துள்ளார். தனது ஆக்கங்கள் மூலமாக ஊருக்கும், பெயருக்கும் வாசகர் உலகில் உன்னத இடங்களை ஈட்டியுள்ளார்.

1994ம் ஆண்டு முதல் சுமார் இரண்டு ஆண்டுகள்வரை இவரது இஸ்லாமிய நீதிக்கதைகள் மித்திரன் வாரமலரில் தொடர்ந்து வெளிவந்தன. வாழ்க்கைத்தத்துவம், பண்பாடு, மரபுவழி, சமூக சமய நெறி ஆகியன உட்பட நானாவித அம்சங்களையும் இந்த ஆக்கங்கள் தெளிவு படுத்தின. சிந்தனைக்கு விருந்தளித்தன. படிப்பினைகளை ஊட்டின.

இக்கதைகளைக் கொண்ட தொகுப்பொன்றை வெளியிட இன்று இவர் முன்வந்துள்ளார். சமூகச் சீரழிவுகள் மிகுந்துவரும் இக்கால கட்டத்தில் இத்தொகுப்பு வெளிவரவுள்ளது. இளைய சந்ததியினரின் மனதை இத்தொகுப்பு பெரிதும் பண்படுத்தும், நேரிய வழியைச் சுட்டிக்காட்டும், சீர்மைக்கு வித்திடும், இதில் ஐயமில்லை. நூலாசிரியருக்கு எம் வாழ்த்துக்கள், தொடர்க அவர் பணி.

185, கிராண்டபாஸ் வீதி,
கொழும்பு 14.

செ. நடராசா
வீரகேசரி
பிரதம ஆசிரியர்

அணிந்துரை

என்னிடம் ஆரம்பக்கல்வி பெற்ற எனது அபிமான மாணாக்கர் ஒருவரின் ஆக்கத்திற்கு அணிந்துரை வழங்க கிடைத்தமை குறித்து நான் பெருமிதம் கொள்கிறேன். பாலப்பருவம் முதல் கலைத்துறையில் ஆர்வம் காட்டிய அல்ஹாஜ் போர்வை பாயிஸ் ஜிப்ரியின் இந்நூல் பலரும் படித்துப் பயன் பெறக் கூடிய தத்துவ முத்தாகும்.

ஆசிரியர் பொலிஸ் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் கடமையாற்றி தற்போது அரசகரும மொழிகள் திணைக்களம், அரசகரும ஆணைக்குழு ஆகியவற்றில் போதானாசிரியராகப் பதவியேற்று தமது பணியுடன் வேறு பல ஆக்கங்களிலும் பங்கு கொண்டு தனது அறிவை வளம்படுத்தியுள்ளார். தினகரன், வீரகேசரி, தினக்குரல், மித்திரன் வாரமலர் ஆகிய தேசிய பத்திரிகைகளில் பலகாலமாக சிறந்த ஆக்கங்களை தந்துள்ள ஆசிரியர், மித்திரன் வாரமலரில் சுமார் ஒன்றரை வருடகாலமாக தொடர்ந்து வெளியிட்ட இஸ்லாமிய வரலாற்றில் ஓர் ஏடு என்ற இஸ்லாமிய நீதிக்கதைகளின் தொகுப்பே இந்நூல் ஆகும்.

நபிமார்கள், நபித்தோழர்கள, தாபிஈன்கள், இமாம்கள் மற்றும் இறைநேசச்செல்வர்களின் வாழ்வில் நடந்த உண்மை நிகழ்வுகளை இஸ்லாமிய இதயங்கள் நல்லுணர்ச்சி பெறும் வகையில் ஆசிரியரின் ஆக்கங்கள் இரத்தினச்சுருக்கமாக எளிய நடையில் இந்நூலில் இடம்பெற்றுள்ளமை குறிப்படத்தக்கது.

உண்மையில் இந்நூல் இன்றைய கால கட்டத்தில் தமிழ் பேசும் சகலரும் வாசித்துப்பயன் பெறக் கூடிய வரலாற்றுச்சம்பவங்களாகும். விசேடமாக மாணவர்கள் இதனைப்படித்து பயன் பெறத்தக்கவையுமாகும்.

ஒவ்வொரு இஸ்லாமிய இல்லங்களிலும், பள்ளிக் கூடங்களிலும் இந்நூல் இருக்க வேண்டுமென்பதே எனது வேண்டுகோளாகும். இந்நூலாசிரியின் ஏனைய ஆக்கங்களும் இவ்வாறு வெளிவர வேண்டுமென உரிமையோடு வேண்டுவதுடன். அல்லா(ஹ்) அவருக்கு ஈருலக பாக்கியங்களையும் அருளவேண்டுமென வேண்டி நிசப்தமாகிறேன்.

வஸ்ஸலாம்

அல்ஹாஜ் ஏ.எம்.எம். உவைஸ் ஜே.பீ.
(முன்னாள் அதிபர்)

41, முஹம்மத் ஒழுங்கை,
வெலிகம.

என்னுரை

அனைத்துப் புகழும் அல்லா(ஹ்) ஒருவனுக்கே!

ஒரு நூல் படிப்பதற்கு சுவையானதாகவும், படிப்பினைக் குரியதாகவும் அமைய வேண்டுமென்ற எண்ணத்தில் என்னால் தொடர்ந்து ஒன்றரை வருடகாலமாக பிரதிவாரமும் மித்திரன் வாரமலரில் எழுதி வந்த இஸ்லாமிய வரலாற்று நிகழ்வுகளின் தொகுப்பை வாசக நேயர்கள் பலரின் வேண்டுகொளுக்கிணங்க இஸ்லாமிய நீதிக்கதைகள் என்ற பெயரில் நூலுருவில் உங்கள் முன் சமர்ப்பிப்பதில் மகிழ்வுறுகிறேன். அல்ஹம்து லில்லாஹ்!

இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய ஜாமியா நளீமியா கலாபீடப் பணிப்பாளர் கலாநிதி அல்ஹாஜ் எம். ஏ. எம். சுக்ரி மதிப்புரை வழங்கிய எனது மதிப்பிற்குரிய ஆசான் அல்–ஹாஜ் ஏ எம் எம் உவைஸ் வாழ்த்துரை வழங்கிய வீரகேசரி பத்திரிகை பிரதம ஆசிரியர் திரு செ. நடராசா ஆகியோருக்கு நான் என்றும் கடமைப்பட்டுள்ளேன்.

மேலும் எனது இவ்வாக்கங்கள் பத்திரிகையில் வெளிவர உறதுணையாகவிருந்த மூத்த பத்திரிகையாளர் அல் ஹாஜ் எம். ஏ. ஸீ முஹம்மத், எழுத்துத் துறையில் எனக்கு ஆர்வமூட்டிய முன்னாள் தினகரன் பத்திரிகை உதவி ஆசிரியர் மர்ஹூம் அல் ஹாஜ் எம் எஸ் முஹம்மத் எனக்கு நிதமும் ஆலோசனைகளை வழங்கி வழிகாட்டி வரும் முன்னாள் பாராளுமன்ற ஹன்சாட் ஆசிரியர் அல்–ஹாஜ் எம் ஸீ எம் ஸாயிறு இந்நூலை ஒப்பு நோக்கிய எனது நண்பர் ஏ.எச்.எம். அஸ்ஹர், போதனாசிரியர், அரசகரும திணைக்களம் மற்றும் இதனை சிறந்த முறையில் அச்சிட்டுத்தந்த ஏ. ரீ. பிரின்டர்ஸ் உரிமையாளர் கே. எம் ஸிராஜ் ஆகியோருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

வாசக நெஞ்சங்கள் இதனைப்படித்து நல்லுணர்ச்சிபெறின் அதுவொன்றே எனது மனத்திருப்திக்கு போதுமானதாகும். இதில் ஏதும் தவறுகள் இருப்பின் தயவு செய்து அறிவியுங்கள். அடுத்த பதிப்பில் திருத்திக் கொள்ளலாம்.

வஸ்ஸலாம்!

நுஸ்ரா
35/24, பாத்திமா கார்டன்,
மாகொல வடக்கு

போர்வை பாயிஸ் ஜிப்ரி

நெஞ்சங்கள் பேசுகின்றன

மித்திரன் வாரமலரே!

♥ நாடறிந்த எழுத்தாளர் போர்வை பாயிஸ் ஜிப்ரியின் இஸ்லாமிய வரலாற்றுச் சம்பவங்கள் இன்றைய தலை முறையினர்க்கு வழிகாட்டும் கலங்கரை விளக்காகும்.

06–01–94 அப்துல் ஹக் – காலி

மித்திரனே!

♥ இஸ்லாமிய நெஞ்சங்களில் இறையுணர்வை ஏற்படுத்தும் சம்பவங்களை வரலாற்றில் ஓர் ஏடாய் நீ வழங்குவதால் உன் புகழ் மேலும் ஓங்கி நிற்கிறது.

03–04–94 ரனீஸா யாஸீன்
நீரெல்ல – அக்குறணை

♥ போர்வை பாயிஸ் ஜிப்ரியின் இஸ்லாமிய வரலாற்றில் ஓர் ஏடு எம் சிந்தனையைச் சீர்ப்படுத்துகின்றன.

16–07–95 ரிஸ்வானா ஹமீட்
ஏத்தாலை

அன்பு மலரே!

♥ மமதை கொண்ட ஆட்சியாளர்க்கு கலீபாவின் அதிரடி என்ற கடந்தவார இஸ்லாமிய வரலாற்றில் ஓர் ஏடு என் நெஞ்சை நெகிழவைத்துவிட்டது.

27–10–95 எம். ஜே. சல்மான் பாரிஸ்
அல் மஸ்லம் வீதி, நிந்தவூர்

♥ போர்வை பாயிஸ் ஜிப்ரி தொடர்ந்து எழுதி வரும் வரலாற்றில் ஓர் ஏடு மிக அருமை

கவிமகள் என்.எம். மஸாஹிரா
வெலிமடை

பொருளடக்கம்

29 தீங்கு செய்தவர்களையும் மன்னிக்க வேண்டிய அருள் உள்ளம்
30 அநியாயத்துக்கு அடிபணிய மறுத்த இமாம்
31 முதியவருக்கு தாகத்துக்கு நீர் கொடுத்த போது
32 மாடியில் ஒட்டகத்தைத் தேடிய கிராமவாசி
33 அம்பலத்துக்கு வந்த கொலைச் சதி
34 அழுத பிள்ளைக்கு பாலூட்ட தாய் தயங்கியது ஏன்?
35 பழத்தின் சுவை அறியா பழத்தோட்டக் காவலர்
36 பெற்ற மகனுக்கும் சலுகை தர மறுத்த நாட்டுத் தலைவர்
37 அடிவாங்கிய அடிமைப்பெண் சிரித்தது ஏன்?
38 திருடனை வியக்க வைத்த தீர்ப்பு
39 மது அருந்துபவரை மன்னர் மடக்கிப் பிடித்தபோது
40 கொள்ளையர் தலைவனை வெட்கப்பட வைத்த சிறுவன்
41 ஆடு மேய்க்கும் இடையனிடம் ஒரு சோதனை
42 பழரசத்தில் ஞானரசம்
43 விவாகரத்துக்கு அனுமதி கேட்கப் போனவருக்கு அதிர்ச்சி
44 அறிவில் சிறந்தவரின் அடக்கமான பதில்
45 புதுச்சட்டை ஆளுநர் மகளுக்கு இல்லை
46 நாச வேலை செய்தவனிடம் ஏற்பட்ட மனமாற்றம்
47 உழைக்கும் கரங்களுக்கு கிடைத்த பெருமை
48 வாயில்லா ஜீவனை ஏமாற்றியது அவருக்கு பொறுக்கவில்லை
49 வேலையாளைப் பிரமிக்க வைத்த மாமன்னர்
50 தோழர்களுக்கு உதவ விறகுவெட்டப் போன அண்ணலார்
51 அண்ணலாரின் பாதத்தில் சிறு முள் கூட தைப்பதைச் சகியாத தோழர்கள்.
52 ஊனங்கள் உள்ளதாக கூறப்பட்ட பெண் குறையற்ற அழகியாக மாறியது எப்படி?
53 கடன் கொடுத்தவனின் தகாத நோக்கம்
54 மரநிழலில் நிம்மதியாக உறங்க மாமன்னருக்கு எப்படி முடிந்தது?

55 மரணப்பிடியில் சிக்கிய கொடிய அரசனை மன்னித்து விடுவித்த கருணை வள்ளல்

56 தாம் பசித்திருந்து தம் உணவை ஏழைக்கு அளித்து மகிழ்ந்த தம்பதியர்

57 தன்னலம் கருதா மன்னர் பெருமை।

58 பெருமானாரின் பல் உடைந்ததை அறிந்ததும் தன் பற்களை உடைத்தெறிந்த பெரியார்।

59 பற்றாக் குறைத் துணியில் அரசர் ஆடை தைத்துக் கொண்டது எப்படி?

60 ஏழையின் கன்னத்தில் அறைந்த மன்னரை மன்னிப்புக் கேட்க வைத்த கலீபா।

61 எதிரியைக் கொல்ல எளிதாக சந்தர்ப்பம் கிடைத்தும் கலீபா அவனை மன்னித்தது ஏன்?

62 அசுத்தம் செய்தவனை மன்னித்து தாமே சுத்தம் செய்த அன்பு நபி

63 தவறுக்கு பிராயச்சித்தமாக தன்னைத் தானே சாட்டையால் அடித்துக் கொண்ட மன்னர்

64 கல்லால் அடித்து இழிவு செயதவர்களையும் அழிவில் இருந்து காத்த காருண்ய நபி

65 மன்னரிடம் இருந்த ஒரேயொரு மேலாடை

66 பாவத் தொழிலுக்கு அனுமதியா? தவறை உணர்த்திய அண்ணலார்

67 அந்தத் தோழருக்கு காலை வேளைகளில் ஏன் அத்தனை அவசரம்

68 பிறரிடம் குறை காணாதே

69 கொடிய தேள் கொட்டிய நிலையிலும் ஹதீஸ் போதனையை நிறுத்தாத அன்பாளர்।

70 மமதை கொண்ட ஆட்சியாளருக்கு கலீபா அவர்கள் தந்த அதிரடி

71 அன்னைக்கு நீர் அருந்தக் கொடுக்க விடியும் வரை காத்து நின்ற அன்பு மகன்।

72 வாளை உருவியவரை நோக்கி ஆட்சித் தலைவர் வாஞ்சையுடன் மொழிந்த அருள் வார்த்தை

முதற்பதிப்பு :

ஹிஜ்ரி 1425 ஷஃபான்
2004 ஒக்டோபர்

பாலில் நீர் கலக்க மறுத்த மகள்.

இஸ்லாத்தின் இரண்டாவது கலீபா ஹஸரத் உமர் (ரலி) அவர்களின் ஆட்சிக்காலம் இஸ்லாமிய வரலாற்றில் பொற்காலம் என வர்ணிக்கப்படுகிறது. நீதியின் உறைவிடமான உமர் (ரலி) அவர்கள் இரவு காலங்களில் மாறு வேடம் பூண்டு நகர்வலம் வருவது வழக்கம். மக்கள் குறைகளை அறிந்து உடன் நிவாரணமளிப்பார்கள்.

ஒரு முறை கலீபா அவர்கள் நகர் வலம் வரும் போது ஒரு வீட்டில் தாயும் மகளும் அளவளாவிக் கொண்டிருப்பது அவர்களின் செவிக்கு எட்டியது. பால் வியாபாரம் செய்து ஜீவனம் நடாத்தும் அந்த ஏழைத்தாய் தன் மகளிடம் இன்றைக்கு வாடிக்கையாளர்களுக்கு பகிர்ந்து கொடுப்பதற்கு பால் பற்றாக் குறை காரணமாக தண்ணீரை பாலில் கலக்குமாறு தனது மகளைப் பணிக்கிறார். மகளோ இது பாவச்செயல் என்று கூறி மறுக்கிறார்.

அப்போது அந்தத்தாய், "நீ ஏன் பயப்படுகிறாய்? கலீபா தான் இங்கு இல்லையே" எனக் கூற மகள் "உண்மைதான், கலீபா இங்கு இல்லாவிடினும் அல்லாஹ் நம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறானல்லவா? அவனுக்கு மறுமையில் பதில் சொல்ல வேண்டுமே" என தாயாரை எச்சரிக்கிறாள். இதைச் செவியுற்ற கலீபா அவர்கள் நேர்மையின் சின்னமான அப்பெண்ணை தன் அன்பு மகன் ஆஸிமுக்கு மண முடித்துக் கொடுக்கிறார்கள். இவர்களின் வழித்தோன்றலே இரண்டாவது உமர் என இஸ்லாமிய உலகம் போற்றும் உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்களாவர்.

பகைவர்கட்கும் இரங்கிய ஏந்தல்

யமாமா நாட்டுத் தலைவர் இஸ்லாமிய போர்வீரர்களோடு போர்தொடுத்து தோல்வி கண்டதால் முஸ்லிம் படைவீரர்கள் அவரைக் கைது செய்து அண்ணல் நபி (ஸல்) அவர்கள் முன் நிறுத்தினர். பகைவர்கட்கும் இரக்கம் காட்டும் ஏந்தல் நபிகளார் அவரைத்தன் விருந்தினராக ஏற்று உபசரித்தார்கள். ஏழ்மையிலே வாழ்ந்த அண்ணலார் அவருக்கு எதுவித குறைவுமின்றி சகல வசதிகளையும் செய்து கொடுத்தார்கள். சில நட்களின் பின் அவருக்கு விடுதலை கிடைத்தது. நாயகத்தின் நற்பண்புகளால் ஈர்க்கப்பட்ட அத்தலைவர் ஈற்றில் இஸ்லாத்தைத் தழுவினார்.

இறுதியில் தன் நாடு திரும்பிய அத்தலைவர் மக்காவின் குறைஷிக்காபிர்கள் பெருமானார் (ஸல்) அவர்களை இம்சைப்படுத்தி வந்ததால் மக்காவுக்கு வழக்கமாக அனுப்பி வந்த உணவுப் பொருட்களை இனி அனுப்புவதில்லையென முடிவு செய்தார். மக்காவில் பஞ்சம் ஏற்படவே மக்காவாசிகள் இது பற்றி பெருமானார் (ஸல்) அவர்களுக்கு மதினாவுக்கு தூது அனுப்பினார்கள்

உடனே பெருமானார் (ஸல்) யமாமா தலைவருக்கு பின்வருமாரு செய்தி அனுப்பினார்கள். "அவர்கள் நமது விரோதிகளாயினும் உணவுப் பொருட்களை அனுப்பாமல் தடை செய்வது குற்றமாகும். நாம் எவரையும் நிர்ப்பந்தப்படுத்தி இஸ்லாத்தில் சேர்க்கும் கொள்கை உடையவர்கள் அல்லோம். எனவே வழக்கம் போல் உணவுப் பொருட்களை மக்காவுக்கு அனுப்புங்கள்."

உடனே தலைவர் உணவுப் பொருட்களை மக்காவுக்கு மீண்டும் அனுப்பிவைத்தார்கள்.

நீதியின் முன் அனைவரும் சமம்

ஒரு முறை உயர் குலப் பெண்ணொருத்தி திருட்டுக்குற்றத் திற்காக பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்திற்கு கொண்டு வரப்பட்டாள்.

திருட்டுக் குற்றம் புரிந்தவரின் கையைத் துண்டிப்பது இஸ்லாமிய நீதிமுறை. எனினும் இப்பெண் உயர்குலத்தைச் சேர்ந்தவள் என்பதால் இவளைக் காப்பாற்றி தண்டனையிலிருந்து விடுதலை பெற பலர் முயற்சித்தனர்.

எனவே பெருமானார் (ஸல்) அவர்களோடு நெருங்கிய தொடர்பு கொண்ட ஹஸரத் உஸாமா (ரலி) அவர்களின் உதவியை நாடினர்.

இது பற்றி பெருமானாரிடம் எடுத்துரைத்து அப்பெண்ணைக் காப்பற்றக் கோரினர். உஸாமா (ரலி) அவர்களும் இது பற்றி அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் இதமாக எடுத்துக் கூறினார்கள்.

அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் "உஸாமாவே செல்வந் தர்களுக்கு ஒரு ந்தி, வறியவர்களுக்கு ஒரு நீதி என பாரபட்சம் காட்டியதாலே எமது முன்னைய சமுதாயம் அழிந்தொழிந்தது. நீதியின் முன் அனைவரும் சமம். எனது அன்பு மகள் பாத்திமா திருடியிருந்தாலும் அவருடைய கையை வெட்ட நான் தயங்க மாட்டேன்." என்று கூறி அப்பெண்ணுக்கு தண்டனை வழங்கி இஸ்லாமிய நீதியை நிலை நாட்டினார்கள்

நீதிக்கொரு தலைவர் அண்ணல் நபீ (ஸல்) அவர்களிடம் பாிந்துரை பேச வந்த உஸாமா (ரலி) வெட்கிதலைகுனிந்து பெருமானாரிடம் மன்னிப்புக்கோரினார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்களிடம் ஒருவர் வந்து "யாரசூலுல்லாஹ் எனது குடும்பம் வறுமையால் வாடுகிறது. எனக்கு ஏதாவது உதவி செய்யுங்கள்" என யாசகம் கேட்டு நின்றார்.

அதற்கு பொருமானார் (ஸல்) அவர்கள் "உமது வீட்டில் ஏதாவது பொருடுகள் இருக்கின்றனவா?" என வினவினார்கள்.

அம்மனிதரோ "தண்ணீர் அருந்துவதற்கான பாத்திரமொன்றும் போர்வையும் தான் இருக்கின்றன" என்றார்.

அண்ணலார் அப்பொருட்களை எடுத்து வரச் சொல்லி தனது தோழர்கள் மத்தியில் அப்பொருட்களை ஏலம் விட்டார்கள். நபித்தோழர் ஒருவர் அதை வாங்கி பணத்தை பெருமானாரிடம் கொடுக்கவே அவர்கள் அதை அந்த ஏழையின் கையில் கொடுத்து "இந்தப் பணத்தில் பாதியை உனது உணவுத் தேவைக்காக உபயோகப்படுத்தும். எஞ்சிய பணத்திற்கு கடைத் தெருவுக்குப் போய் கோடாரி ஒன்று வாங்கி காட்டுக்குப் போய் விறகு வெட்டி விற்று உனது வாழ்க்கையை நடாத்தும். அல்லா(ஹ்) உனக்கு அருள் புரிவான்" என்று உபதேசித்து, பிறரிடம் யாசிக்காமல் உழைத்து உண்ணும் வழியை பெருமானார் அந்த ஏழைக்கு உணர்த்தினார்கள். அந்த மனிதரும் அன்று முதல் யாசிப்பதை விட்டு உழைப்பால் உயர்வு பெற்றார்.

குடிசையைத் தன் வசிப்பிடம் ஆக்கிய அரசர்!

இஸ்லாமிய சரித்திர ஆசிரியர்களால் இரண்டாவது உமர் என வர்ணிக்கப்படும் கலீபா உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்களின் ஆட்சியை இன்றும் முஸ்லிம்கள் நினைவு கூருகின்றனர். அன்னார் எளிமையான வாழ்வையே மேற்கொண்டார்கள்.

ஒரு முறை ஒரு வயோதிப மாது கலீபா அவர்ளைக் காண பக்தாத் நகருக்கு வருகிறார். பக்தாத் தெரு வழியே வானளாவ உயர்ந்திருக்கும் மாடமாளிகைகளைப் பார்த்து வியந்து அவ்வம்மையார் கலீபா அவர்களின் மாளிகை எதுவாக இருக்கும் என அறிவதற்காக தெருவின் ஓரத்தில் இருந்த குடிசையில் இருந்த பெண்ணொருத்தியிடம் கலீபாவின் மாளிகை எதுவென வினவுகிறார். அப்பெண் மணியோ சிரித்துவிட்டு கலீபாவின் மாளிகை இதுதான். என கலீபாவின் குடிசையைக் காட்டுகிறாள்!

வயோதிப அம்மையாரோ என்ன கிண்டலா! பண்ணுகிறாய் என அப்பெண்மணியை கடிந்து கொண்டார். அச்சமயம் அங்கு வந்த கலீபா அவர்கள் அந்த வயோதிபப் பெண்ணை விசாரித்த போது தான் தொலைவிலிருந்து வருவதாகவும் வறுமையில் வாடுவதாகவும் கலீபா அவர்களைக் கண்டு உதவி ஏதும் பெற வந்ததாகவும் கூறுகிறார்.

கலீபா அவர்கள் உடன் அப்பெண்ணுக்கு உணவுப் பண்டங்களும், உடை, பணம் முதலியனவும் போதுமளவு கொடுத்து ஊருக்கு அனுப்பிவைத்தார்கள். ஒட்டுப்போட்ட உடையுடன் குடிசையில் வாழ்ந்த கலீபா அவர்களின் எளிய கோலத்தைக் கண்ட அவ்வம்மையாரின் வியப்பு நீங்க வெகு நேரம் பிடித்தது.

கலங்க வைத்த அந்த வாசகங்கள்.........

கலீபா ஹாருன் அல் ரசீத் தன் ஆட்சிக்காலத்தில் மாபெரும் மாளிகையொன்றைக் கட்டத் திட்டமிட்டார். பெரும் செல்வந்தரான கலீபா மாளிகையை நிர்மாணிப்பதில் பெரும் தொகையான பணத்தை செலவழித்தார். ஆடம்பரமான அம்மாளிகை அழகே உருவாக காட்சியளித்தது. தனது மாளிகை பற்றி பூரிப்படைந்த கலீபா எல்லோரிடமும் அதுபற்றிப் பேசி பெருமைப்பட்டார். மாளிகையை மக்களனைவரும் கண்டுகளித்தனர்.

இந்த அற்புத மாளிகையை கலீபாவின் தம்பி இறைநேசச் செல்வர் ஹஸரத் பஹ்ருல் (ரஹ்) என்பவரும் வந்து பார்வயிட்டு சுவரில் ஏதோ எழுதிவிட்டுச் சென்று விட்டார். மாளிகைக்கு வந்த மாமன்னருக்கு சுவரில் எழுதியிருந்த வாசகங்கள் நெஞ்சில் ஈட்டி போல் குத்தியது.

ஹாருன்! நீ மண்ணை உயர்த்தி மதத்தைத் தாழ்த்தி விட்டாய். நீ இப்படி வீண் விரயம் செய்தது உனது சொந்தப்பணமானால் அல்லாஹ் வீண் செலவு செய்வோரை நேசிக்க மாட்டான் எனும் இறைவாக்கை நினைவில் கொள்.

நீ செலவு செய்தது பொதுச்சொத்தாக இருப்பின் நிச்சயமாக நீ அக்கிரமம் செய்தவனாவாய். அக்கிரமம் செய்வோரை அல்லா(ஹ்) நேசிக்க மாட்டான் என்ற மறை மொழியை நினைவு படுத்திக் கொள்!

இந்த வாசகங்களைப்பார்த்த கலீபாவின் கண்கள் கலங்கின. நெஞ்சம் உருகிற்று. மறுமை வாழ்வு பற்றிய சிந்தனை அவரை ஊமையாக்கியது.

பொய் சொல்வதை விட்ட பலன்

ஒரு முறை பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்திற்குப் புதிதாக இஸ்லாத்தைத் தழுவிய ஒருவர் வந்து அல்லாஹ்வின் தூதரே! என்னிடம் நான்கு கெட்ட பழக்கங்கள் இருக்கின்றன. திருடுதல், சூதாடுதல், மது அருந்துதல், பொய் பேசுதல் ஆகியன அக்கொடிய பழக்கங்களாகும். இவற்றில் நான் எதை முதலில் தவிர்த்துக் கொள்வது? என விநயமாய் வேண்டி நின்றார். பெருமானார் (ஸல்) அவர்களோ பொய் பேசுவதை விட்டு விடும் என அந்நபருக்கு உபதேசித்தார்கள். அவரும் இனி என் வாழ் நாளில் பொய்யே உரைக்க மாட்டேன் என உறுதிமொழி கூறிச் சென்று விட்டார்.

பின்னர் அவர் அன்றிரவு திருடுவதற்கு வெளியே செல்ல ஆயத்தமானார். எனினும் திருடிவிட்டு திருநபியின் சமூகத்தில நான் எப்படி திருடவில்லை எனப் பொய்யுரைப்பது என்று எண்ணியவாறே எல்லாத்தீய செயல்கட்கும் அன்று முதல் முற்றுப்புள்ளி வைத்து நல்ல மனிதராய் மாறிவிட்டார்.

பொய்யே எல்லாத்தீய செயல்களுக்கும் காரணமாக அமைகிறது. பொய் சொல்வதைத் தவிர்த்துக் கொள்வதால் பாவங்கள் நம்மை விட்டு அகன்று விடுகின்றன.

வியக்க வைத்த அந்த மாணவன்!

இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள் சிறந்த மார்க்க மேதையாவார்கள் பிரசித்தி பெற்ற நான்கு இமாம்களில் இவரும் ஒருவர். இவர் மதினா நகரிலே ஹதீஸ் வகுப்புக்களை நடத்திக் கொண்டிருந்தார். இவரிடம் ஸ்பெய்ன் நாட்டைச் சேர்ந்த யெஹ்யா என்ற மாணவரும் கல்வி கற்றுக் கொண்டிருந்தார்.

இமாம் அவர்கள் பாடம் நடத்திக்கொண்டிருந்தபோது ஒரு நாள் தெருவழியே யானை ஒன்று சென்று கொண்டிருந்தது. மாணவர்கள் அனைவரும் யானையைப் பார்க்க வெளியே வந்து விட்டனர். ஆனால் யெஹ்யாவோ தன் இடத்தில் உட்கார்ந்து பாடத்தில் கவனம் செலுத்திக் கொண்டிருந்தார்.

இமாம் அவர்களுக்கு இந்நிகழ்ச்சி வியப்பாக இருந்தது. அவர் அம்மாணவரை நோக்கி யெஹ்யா! உமது நாட்டிலும் யானை கிடையாதே, நீரும் அந்த யானையைப் பார்த்திருக்கலாமே! என்றார்கள் அதற்கு அந்த மாணவர், இமாம் அவர்களே, நான் அவ்வளவு தொலைவிலிருந்து யானையைப் பார்க்க இங்கு வரவில்லை. தங்களிடம் மார்க்க சம்பந்தமான நல்ல விஷயங்களைக் கற்றுக்கொள்ளவே இங்கு வந்துள்ளேன்.! என்றார்.

தனது மாணவரின் அருமையான பதிலைக் கேட்டு இமாமவர்கள் மகிழ்ந்தார்கள். மதிநுட்பமுள்ள மாணவன் என வாழ்த்தினார்கள். இவரே பிற்காலத்தில் ஸ்பெய்ன் நாட்டில் மாமேதையாக திகழ்ந்தார்.

பழங்களை தனியாக புசித்த காரணம்

பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு நாள் தமது தோழர்களுடன் அளவளாவிக் கொண்டிருந்த பொழுது வயது முதிர்ந்த பெண்மணியொருவர் வந்து திராட்சைப் பழக்குலையொன்றை அன்பளிப்பாகக் கொடுத்தார்கள். அண்ணலவர்கள் அந்தப் பழங்களைப் புசிக்கலானார்கள். தனது தோழர்களுக்கு பகிர்ந்து கொடுக்காமல் அத்தனைப் பழங்களையும் வழக்கத்திற்கு மாறாக பெருமானார் (ஸல்) அவர்கள் தனியாக உண்டது தோழர்களுக்கு வியப்பாக இருந்தது. அப்பெண்மணியோ அப்பழங்கள் அத்தனையையும் பெருமானாரே சாப்பிட்டதில் அளவற்ற மகிழ்ச்சி கொண்டு வீடு சென்று விட்டார்.

பின்னர் தோழர்கள் பெருமானாரை நோக்கி தாங்கள் எந்த அன்பளிப்புப் பொருட்கள் வந்தாலும் எமக்கு பகிர்ந்து கொடுப்பீர்களே இன்று மட்டும் ஏன் வித்தியாசம்? என வினவினார். அண்ணலார்கள் புன் முறுவலுடன் அந்த மாது கொண்டு வந்த பழங்கள் அனைத்தும் புளிப்பாக இருந்தன. உங்களுக்கு நான் அதைக் கொடுத்தால் சாப்பிட்டு விட்டு பழங்கள் புளிக்கின்றன என்று சொல்வீர்கள். அப்போது அம்மாதுவின் மனம் வேதனைப்படும்.

அப்பழங்களை அன்பளிப்புச் செய்த அந்த அம்மையாரின் மனதைப் புண்படுத்த நான் விரும்பவில்லை. எனவே தான் எல்லாப் பழங்களையும் நானே புசித்தேன். என நவின்றார்கள் எவர் மனதையும் நோகச் செய்ய விரும்பாத அண்ணலெம் பெருமானவர்கள்.

ஒரு பூனைக்குட்டிக்கு இரங்கியதற்காக

இறை நேசச் செல்வர் ஷிப்லி (ரஹ்) அவர்கள் மரணித்ததும் அவரின் சீடர்களில் ஒருவர் அன்னாரை கனவில் கண்டார். சுவர்க்கலோகத்தில் மகிழ்ச்சியாக அழகான ஆடை அலங்காரத்துடன் அவர் காணப்பட்டார்.

உங்கள் வெற்றிக்கு காரணமென்ன? என சீடர் அவரிடம் வினவவே அவர் எனது வணக்கத்தின் காரணமாக எனக்கு இந்த உயர் பதவியை அளித்து அல்லா(ஹ்) என்னை மன்னித்தான் என நினைத்தேன். ஆனால் இதற்குக் காரணம் எனது ஒரு சிறிய நற்செயலே என அன்னார் விளக்கமளித்தார்.

ஒரு நாள் நான் பக்தாத் நகர தெருவழியே சென்று கொண்டிருந்தேன். கடுங்குளிர்காலம் குளிர் தாங்க முடியாது ஒரு சிறிய பூனைக் குட்டி நடுங்கிக் கொண்டிருந்தது. அதன் மேல் இரக்கங்கொண்ட நான் அதன் குளிரைப் போக்குவதற்காக அதனை என் போர்வைக்குள் வைத்துக் கொண்டேன். அந்தப் பூனைக்கு இரக்கங்காட்டியதன் காரணத்தால் அல்லா(ஹ்) எனக்கு இரக்கங்காட்டினான். என்று அன்னார் கூறினார்.

எனவே, நாம் எல்லா உயிர்களிடத்திலும் இரக்கங்காட்ட வேண்டும். பூமியிலுள்ளவர்கள் மீது நீங்கள் இரக்கங்காட்டுங்கள் வானத்திலுள்ளவர்கள் உங்கள் மீது இரக்கங்காட்டுவார்கள். இது அண்ணல் நபியின் அமுத வாக்காகும்

பிறருக்கு உபதேசம் செய்யுமுன்

ஒரு நாள் பெருமானார் (ஸல்) அவர்களின் திருச்சமூகத்திற்கு ஒருவர் தனது சிறு வயது மகனைக் கூட்டிக்கொண்டு வந்து அல்லாஹ்வின் தூதரே! இவன் அதிகமாக இனிப்புச் சாப்பிடுகிறான். இனிப்பு அளவுக்கதிகமாகச் சாப்பிடுவது உடம்புக்கு ஆகாதென இவனுக்கு புத்திமதி கூறுங்கள் என வேண்டி நின்றார்.

பெருமானாரோ இன்று போய் நாளை வாருங்கள் என அந்த நபரை அனுப்பிவைத்தார்கள்.

இரண்டாம் நாளும் அவ்வாறே அவர்களை திருப்பி அனுப்பிவிட்டு மூன்றாம் நாள் அவர்கள் வந்ததும், மகனே! இனிப்பு அதிகமாகச் சாப்பிடுவது உடம்புக்கு கேடுவிளைவிக்கும். எனவே இனிப்பு சாப்பிடுவதைக் குறைத்துக் கொள். என அந்தச் சிறுவனுக்கு புத்திமதி கூறினார்கள்.

அப்போது அச்சிறுவனின் தந்தை நாயகமே! இதை நீங்கள் முதல் நாளே சொல்லியிருக்கலாமே, இதற்காக நாம் மூன்று முறை வந்து விட்டோம் எனக் கூறினார்.

பெருமானர்ா (ஸல்) அவர்கள் புன்முறுவலித்து, ஆம் உண்மைதான். நானும் இனிப்பை விரும்பி சாப்பிடுகிறேன். முதலில் நான் அதைக் கட்டுப்படுத்தியபின்னரல்லவா பிறருக்கு உபதேசம் செய்யவேண்டும். அதனால்தான இத்தனைத் தாமதம். மன்னியுங்கள் என்றார்கள் மாநபிகளார்.

ஈன்ற தாயின் கடனுக்கு எது ஈடாகும்

ஒரு முறை ஒரு மனிதர் தனது வயது முதிர்ந்த தாயைத் தோளில் சுமந்தவாறே புனித கஃபாவை வலம் வந்து கொண்டிருந்தார். அதனைக் கண்ட பெரியார் ஒருவர் அம்மனிதரை நோக்கி இது யார்? உனது தாயென்று நினைக்கின்றேன் என்றார்.

அதற்கு அம்மனிதர் ஆம் இது என் தாயார் தான். கடந்த பல வருடங்களாக இவ்வாறே எனது தாயைத் தோளில் சுமந்து எல்லா இடங்களுக்கும் செல்கிறேன் என்று கூறி நான் என் தாயாருக்கு செய்ய வேண்டிய கடமைகளை நிறைவேற்றியவனாக ஆகிவிட்டேனா? என அந்த பெரியாரிடம் வினவினார்.

அதற்கு அப்பெரியார் நீர் ஆயிரம் வருடங்கள் உலகில் வாழ்ந்து உனது ஆயுள் முழுவதும் உனது தாயைச் சுமந்து திரிந்தாலும் உன்னை உனது தாய் அவரின் கர்ப்பத்தில் ஓரிரவு சுமந்திருந்ததற்கு சமமாகாது. அத்தோடு அவளின் மார்பிலிருந்து நீர் ஒரு முறை குடித்த பாலுக்கு இதனை விட மேலான பணிவிடைகளைச் செய்தாலும்கூட சமமாகாது எனக் கூறினார்.

அம்மனிதர் அழுதவராக அவ்விடத்தை விட்டும் அகன்றார். இதனாலேயே அண்ணல் நபிகளார், உனது தாயின் காலடியின் கீழ் தான் சுவர்க்கமிருக்கிறது என நவின்றார்கள்.

எளிய வாழ்விலும் இணையற்ற நேர்மை

இஸ்லாத்தின் முதல் கலீபா அபூபக்கர் (ரலி) அவர்களின் ஆட்சிக்காலத்தில் அரச நிதியிலிருந்து (பைத்துல் மால்) அவர்களுக்கு ஒரு சிறு தொகை உதவிப்பணமாக வழங்கப்பட்டது. இதனைக் கொண்டே அவர்கள் வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

ஒரு சமயம் அவரின் அன்பு மனைவியார் தனக்கு இனிப்புப்பண்டம் சாப்பிட ஆசையாக இருப்பதாக கலீபா அவர்களிடம் விநயமாக வேண்டி நின்றார்.

நமது அன்றாட வாழ்க்கையை ஓட்டுவதற்கே கிடைக்கும் வருவாய் போதாமல் இருக்கும் போது இனிப்புப் பண்டம் செய்ய பணத்திற்கு எங்கே போவது என்ற எண்ணத்துடன் கலீபா அவர்கள் பதிலேதும் கூறாமல் மௌனமாக இருந்து விட்டார்கள்.

சில நாட்களின் பின் அன்னாரின் மனைவியார் இனிப்புப்பண்டங்கள் சில செய்து கலீபா அவர்கள் முன்வைத்து உண்ணும்படி வேண்டி நின்றார்கள். கலீபா அவர்களோ, உமக்கு இனிப்புப்பண்டம் செய்ய ஏது பணம் என வினவ, மனைவியோ பெருமிதத்துடன், தாங்கள் செலவிற்குத்தரும் பணத்தில் மிச்சம் பிடித்து இதனைச் செய்தேன் என்று கூறினார்கள். உடனே கலீபா அவர்கள் அரச நிதிக்காப்பாளருக்கு பின்வருமாறு கடிதம் எழுதினார்கள்.

எனக்கு வழங்கும் சம்பளப் பணத்தில் கணிசமான தொகையை குறைத்து இனிமேல் எனக்கு வழங்கவும். ஏனெனில் எனது அத்தியாவசிய தேவைக்கு மேலதிகமாக அரச நிதியிலிருந்து பணம் பெற நான் விரும்பவில்லை.

என்னே அன்னாரின் நேர்மை.

சபைக்கு வந்த ஏழை தனித்து நின்றது ஏன்?

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஒரு முறை மஸ்ஜிதுன் நபவியில் தோழர்களின் மத்தியில் உபதேசம் செய்து கொண்டிருந்த போது கந்தலுடையுடன் ஓர் ஏழை அங்கு வந்து கூட்டத்தினருடன் சேர்ந்து உட்காராமல் புறம்பாக கூச்சப்பட்டவராக நின்று கொண்டிருந்தார்.

இதனைக் கண்ணுற்ற பெருமானார் (ஸல்) அம்மனிதரை நோக்கி நண்பரே! நீவிர ஏன்? சபையில் உட்காராமல் தனித்து நிற்கிறீர் என வினவினார்கள்? அதற்கு அம்மனிதர் அல்லாஹ்வின் தூதரே! நானோ பரம ஏழை என்னுடையும் தங்கள் மேலான சபையில் அமர்வதற்கு அருகதையற்றது எனக்கூறினார்.

அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் எழுந்து வந்து அந்த ஏழையை அணைத்தவராக, அன்பரே! அல்லாஹ்வின் முன்னிலையில் எல்லோரும் சமமே. நானும் ஒரு ஏழைதான். உலர்ந்த ரொட்டியையும் பேரீச்சம் பழத்தையும் உண்டு வாழ்ந்த ஓர் ஏழைத்தாயின் வயிற்றில் பிறந்தவன் நான் என்று கூறி அந்த ஏழையைத் தன் பக்கத்திலே அமரவைத்தார்கள் காருண்ய நபியவர்கள்.

இழிவு செய்தவர்மீதும் எத்தனை இரக்கம்

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தினமும் அதிகாலை பள்ளிக்கு தொழுகைக்காகச் செல்லும் வேளையில் ஒரு யூத வயோதிப மாது பெருமானார் (ஸல்) மீது குப்பைகளைக் கொட்டி ஏளனம் செய்வதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தாள், பொறுமையின் சின்னமான நபிகளார் புன்முறுவலுடன் பள்ளியை நோக்கி நடப்பார்கள்.

ஒரு நாள் பெருமானார் மீது குப்பை விழவில்லை. ஆச்சரியமடைந்த அண்ணலவர்கள் பள்ளியிலிருந்து வீடு வரும் வழியில் கிழவியின் பக்கத்து வீட்டில் விசாரித்ததில் அவள் கடும் சுகயீனம் காரணமாகப் படுக்கையில் இருப்பதை அறிந்தார்கள்.

உடனே நோய் விசாரிக்க கிழவிட்டம் சென்ற பெருமானார் அவர்கள் தாயே! உங்களுக்கு என்ன நோய் அல்லா(ஹ்) தான் தங்களுக்கு நல்ல சுகத்தைத் தர வேண்டும் என வேண்டி நின்றார்கள்.

இத்தனை அன்புள்ளம் கொண்ட நல்லவர் மேனி மீதா நான் குப்பைகளைக் கொட்டி வந்தேன் என தன்னையே நொந்து கொண்ட அவ்வயோதிக மாது வெட்கித் தலைகுனிந்து மா நபியே மன்னியுங்கள் என்று பணிவாக வேண்டி நின்றாள். அத்தோடு புனித இஸ்லாத்தையும் ஏற்றுக் கொண்டாள் அந்த மாது.

எதிரியை நடுங்க வைத்த அந்த வார்த்தை

ஒரு முறை பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு போரின் போது ஓய்வெடுப்பதற்காக ஒரு மர நிழலை நோக்கிச் சென்றார்கள். மரக்கிளையொன்றில் தனது வாளைத் தொங்கவிட்டுச் சிறிது கண்ணயந்தார்கள். அப்போது எதிரில் வந்த எதிரியொருவன் மரத்தில் தொங்கிய வாளைக்கையில் எடுத்து அதைப் பெருமானாரின் நெஞ்சில் வைத்து முஹம்மதே! இப்போது உன்னைக் காப்பாற்றுபவர் யார்? எனக்கேட்டான்.

பெருமானார் (ஸல்) அவர்கள் அல்லா(ஹ்) என்றார்கள். அவன் நடுங்கியபடியே வாளைக் கீழே போட்டு விட்டான்.

பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த வாளைக் கையிலேந்தி இப்போது உன்னைக் காப்பாற்றுபவர் யார்? எனக் கேட்டார்கள்.

அதற்கு அவன் நீங்கள் தான் என்றான் அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் உன்னையும் என்னையும் காப்பாற்றக் கூடியவன் அந்த அல்லா(ஹ்) வைத் தவிர வேறு யாருமில்லை என்று கூறி எதிரியைக் கூட மன்னித்து அனுப்பினார்கள்.

பெற்ற மகளுக்கும் நீதி ஒன்றுதான்.

பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு முறை போரில் கிடைத்த கனீமத் பொருட்களைத்தன் தோழர்கள் மத்தியில் பங்கு வைத்துக் கொண்டிருந்தார்கள், அவ்வேளை அங்கு வந்த அன்னாரின் அன்பு மகளார் அன்னை பாத்திமா (ரலி) அண்ணலாரிடம், என் அன்புத் தந்தையே! வீட்டு வேலைகளைச் செய்வதற்கு மாத்திரம் எனக்கு ஒரு அடிமைப் பெண்ணைத் தாருங்கள். இதனால் என் வேலைப்பளு குறையும் என்றார்கள்.

இதனைக் கேட்ட அண்ணலவர்கள், அன்பு மகளே! இங்கு குவிக்கப்பட்டிருக்கும் பொருள்களும், அடிமைகளும் எனக்குச் சொந்தமானவைகளல்ல. போரில் பங்கு பற்றியவர்களுக்கே சொந்தம். நான் போரில் பங்கு பற்றியிருந்தால் என் பங்கில் உனக்கு ஒரு அடிமைப் பெண்ணைத் தந்திருக்கலாம். அல்லது உன் கணவர் அலி (ரலி) பங்கு பற்றியிருந்தாலும் உனக்கு இப்பொருள்களில் உரிமையுண்டு. நாமிருவரும் இப்போரில் பங்கு பற்றாமல் எப்படி நாம் இதற்கு உரிமைகோர முடியும்.

எனவே! மகளே உன் வேலைகளை நீயே செய்து கொள். தன் வேலைகளை தானே செய்து கொள்வதுதான் நல்லதும், திருப்தியானதுமாகும். அல்லாஹ் உனக்கு நல்ல உடல் வலிமையை தருவானாக...! என்று வாழ்த்தி வீட்டுக்கு அனுப்பி வைத்தார்கள். நீதியின் நாயகர் நபிநாதர் அவர்கள்.

மூட்டை சுமந்த முடிமன்னர்

கலீபா ஹஸரத் உமர் (ரலி) அவர்கள் வழக்கம் போல் ஒரு நாள் இரவு தனது தோழரோடு நகர்வலம் வந்து கொண்டிருந்தார். பக்கத்தில் ஒரு குடிசையில் குழந்தைகளின் அழு குரல் கேட்கிறது. கலீபா அவர்கள் குடிசைக்குள் எட்டிப்பார்க்கிறார். ஒரு பெண் பாத்திரமொன்றை அடுப்பில் வைத்து எதையோ வேக வைத்துக் கொண்டிருக்கிறாள். பிள்ளைகளோ உணவு கேட்டு அழுது கொண்டிருக்கின்றார்கள்.

கலீபா அவர்கள் அப்பெண்ணை விசாரித்ததில் அவள் ஒரு விதவையென்றும் பசி தாங்காது குழந்தைகள் அழுவதால் வெறும் தண்ணீரை அடுப்பில் வைத்து உணவு தயாராகிக் கொண்டிருக்கிறன்றது என அவர்களைப் பொய் சொல்லி சமாதானப்படுத்துவதாகவும் கூறுகிறாள்.

கலீபாவின் கண்கள் குளமாகின்றன. எனது ஆட்சியில் இந்த அவல நிலையா? என ஏங்கிய அவர்கள், அவசரமாக தமது இல்லம் வந்து கோதுமை மாவும் மற்றும் சில உணவுப் பொருள்களையும் தானே தனது தோளில் சுமந்தவராக அப்பெண்ணின் வீடு திரும்புகிறார்.

வழியில் அவரது தோழர் உணவுப் பொதிகளை தான் சுமப்பதாகக் கூறவே கலீபா அவர்கள் மறுமையில் எனது பாவச்சுமைகளை நீ சுமப்பாயா? என்று கூறி அதற்கு மறுத்து தானே அதை சுமந்து சென்று தானே அதில் உணவு சமைத்து அப்பெண்ணுக்கும் பிள்ளைகளுக்கும் உண்ணக் கொடுக்கிறார்கள். அத்தோடு மாதா மாதம் அரச களஞ்சிய சாலையிலிருந்து அப்பெண்ணுக்குத் தேவையான பொருட்களை வழங்கும் படியும் உத்தரவு விடுகிறார். இதனாலே இஸ்லாமிய சரித்திர ஆசியர்கள் இவரை மூட்டை சுமந்த முடிமன்னர் என வர்ணிக்கின்றனர்.

வியக்க வைத்த துறவி

அறிஞர் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்களைக்காண வந்த ஒருவர் வழியில் ஒரு அழகான பழத்தோட்டத்தைக் கண்டு இது யாருடையது என விசாரித்தார். அப்பழத் தோட்டம் அறிஞர் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவ்களுடையது என்பதை அறிந்த அவர்கள் வியப்புற்றவராக அறிஞர் ஜீலானிதான் ஒரு துறவியாயிற்றே என்று கூறியவாறு பயணத்தைத் தொடர்ந்தார்.

வழியில் பெரியதொரு மாளிகை தென்படவே அதுபற்றி விசாரித்து அம்மனிதர் அதுவும் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்களுக்கு சொந்தமானதென கூறவே அவர் ஆச்சரியப்பட்டவராக காணுவதெல்லாம் இத்துறவிக்கு சொந்தமாகவல்லவோ இருக்கிறது. இவர் எப்படி இறை நேசச் செல்வராக இருக்க முடியும் என ஐயமுற்றவராக அறிஞர் ஜீலானியை சென்று சந்தித்து இதுபற்றி வினவினார்.

அறிஞரோ! புன்முறுவல் பூத்தவராக அம்மனிதரை நோக்கி, நண்பரே பூமியில் உள்ளவையாவும் பூமியிலே தானிருக்கின்றன. அவைகள் என் உள்ளத்தில் இல்லை. என் உள்ளத்தில் அல்லா(ஹ்)வைத் தவிர வேறு எவருக்கும் எந்தப் பொருளுக்கும் இடமில்லை, என நவின்றார்கள்

இரட்டிப்பு இலாபம் பெற்றவருக்கு அதிர்ச்சி

ஒரு பெரியார் தானிய வியாபாரம் செய்து வந்தார். அவர் ஒரு நாள் தனது தானியங்களை விற்று வருமாறு தனது செயலாளரை ஈராக் நாட்டிற்கு அனுப்பி வைத்தார். அந்நாட்டில் அவ்வேளை தானியப் பொருட்கள் மலிவாக இருப்பதைக் கண்ட அச்செயலாளர் அவற்றை உடனடியாக விற்காது சில நாட்கள் கழித்து விற்று இரட்டிப்பு லாபத்தைப் பெற்றுக் கொண்டார்.

தமது திறமையை எஜமான் மெச்சவேண்டுமென எண்ணிய செயலாளர் அது பற்றி பெரியாரிடம் கூறி பெருந்தொகை பணத்தையும் கொடுத்தார்.

இறையச்சம் கொண்ட அப்பெரியார் கோபமடைந்தவராக அப்பணத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தார். பொருள்களை பதுக்குபவன் கள்வனாவன். பதுக்கல் வேலை செய்பவர் முழு மனித சமுதாயத்தையே அழித்தவன் என்ற நாயக வாக்கியத்தை நிவைு படுத்திய அப்பெரியார் அப்பணம் முழுவதையுமே தர்மம் செய்து விட்டர். இனிமேல் இவ்வாறன பாபச் செயல்களில் ஈடுபட வேண்டாமென தனது செயலாளரையும் எச்சரித்தார்.

இதனாலே ஹஸரத் அலி (ரலி) ஒருவன் தானியங்களை வாங்கி நாற்பது நாட்கள் வரை பதுக்கி வைப்பானாயின் அவனது உள்ளம் இருளடைந்து விடும் என கூறியுள்ளார்கள்.

உயிராபத்தான வேளையிலும் குலையாத கருணை உள்ளம்

இஸ்லாத்தின் நான்காவது கலீபா ஹஸரத் அலி (ரலி) அவர்களின் ஆட்சிக் காலம். பெரும் வீரரான அவரைக் கொல்ல முல்ஜிம் என்பவன் திட்டமிடுகிறான். நேரில் கலீபாவுடன் மோத தைரியமற்ற அக்கோழை கலீபா அவர்கள் தன்னை மறந்த நிலையில் அல்லாஹ்வை தொழும் சமயத்தில் கொல்ல எண்ணுகிறான். அதற்காக நஞ்சு தோய்த்த வாளொன்றையும் தயார் செய்கிறான்.

இந்த விடயத்தைக் கேள்விப்பட்ட கலீபாவின் தோழர்கள் இது பற்றி கலீபாவிடம் முறையிட்டு அந்த நயவஞ்சகனைக் கொல்ல அனுமதி கேட்டு நின்றனர். அதற்கு கலீபா அவர்கள், தோழர்களே! ஒருவன் ஒரு குற்றத்தைச் செய்யுமுன்னர் எவ்வாறு அவனுக்கு தண்டனை வழங்கமுடியும்? அவன் என்னைக் கொல்லும் முயற்சியை விட்டு மனம் மாறி விட்டால் அநியாயமாக ஒரு நிரபராதியைக் கொன்ற குற்றத்திற்கு நாம் ஆளாகுவோம். எனவே பொறுமையாக இருங்கள். அந்த எதிரியின் கையினால் தான் நான் மடிய வேண்டும் என்பது ஆண்டவனின் கட்டளையென்றால் என்னைப் படைத்த இறைவனைத் தவிர வேறு எவரால் அதை மாற்றமுடியும் என்று கூறி தோழர்களை சமாதானப் படுத்தினார்கள்.

ஈற்றில் அந்த எதிரியின் வாளுக்கே அந்தக் கடமை வீரர் பலியானார்கள்.

சேவகனின் தூக்கத்தை கலைக்க விரும்பாத மன்னர்

கலீபா உமர் (ரலி) அவர்களின் ஆட்சிக் காலம் இஸ்லாமிய உலகின் பொற்காலம் என வர்ணிக்கப்படுகிறது. மதீனாவிலிருந்து நல்லாட்சி செய்த கலீபா அவர்களின் ஆட்சியின் போது மக்கள் பசி பட்டினி இன்றி நலமுடன் வாழ்ந்தனர். அத்தோடு உலகின் சகல பாகங்களிலும் இஸ்லாம் பரவியது. இவர்கள் காலத்திலேயே இலங்கையிலும் இஸ்லாம் பரவியதாக சரித்திர ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

ஒரு முறை கலீபா அவர்களைக் காண ஒரு வெளிநாட்டுப்பிரதிநிதி அவரின் இல்லத்துக்கு இரவு நேரத்தில் வந்தார். இருவரும் அளவளாவிக் கொண்டிருந்த வேளையில் எரிந்து கொண்டிருந்த விளக்கு எண்ணெய் இல்லாமல் அணையத் தயாரானது. அவ்வேளை கலீபா அவர்கள் எழுந்து சென்று விளக்கிற்கு எண்ணெய் ஊற்றி விளக்கைப் பிரகாசமாக எரிய வைத்தார்கள்.

இதனை அவதானித்துக் கொண்டிருந்த பிரதிநிதி, கலீபா அவர்களை நோக்கி கலீபா அவர்களே விளக்கிற்கு எண்ணெய் ஊற்றி எரியச் செய்ய உங்கள் ஏவலாளரை ஏவியிருக்கலாமே? தாங்கள் ஏன் சிரமப்பட வேண்டும்? என்றார்.

இதனைக் கேட்ட கலீபா அவர்கள் அன்பரே! பாவம் அந்த ஏவலாளர் பகலெல்லாம் உழைத்து வீட்டு இரவில் நிம்மதியாக உறங்கும் வேளை நாம் ஏன் அவனின் தூக்கத்தை கலைக்க வேண்டும்? நான் விளக்கிற்கு எண்ணெய் ஊற்றி எரிய வைத்த போதும் உமராகத்தான் இருந்தேன். தற்போதும் அதே உமராகத்தான் இருக்கிறேன். இதில் என்ன வித்தியாசம் இருக்கிறது? என்றார்.

நாடாளும் மன்னரின் விளக்கத்தை கேட்ட தூதுவர் வாயடைத்துப் போனார். நாட்டின் ஆளுகைக்கு இவ்வாறான தலைவர்களன்றோ உலகிற்கு தேவை. என அவர் மனதில் எண்ணிப் பூரிப்படைந்தார்.

பஞ்சம் பறந்தது எப்படி?

கலீபா ஹஸரத் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்களின் ஆட்சிக்காலம் நாட்டில் திடீரென் உணவுப் பஞ்சம் ஏற்படுகிறது. மக்கள் கலீபா அவர்களிடம் வந்து முறையிடுகின்றனர்.

கலீபா அவர்களோ மக்களை பொறுமையாக இருக்கும் படியும் அல்லா(ஹ்) விரைவில் பஞ்சத்தை தீர்த்துவைப்பான் என்றும் ஊர் மக்களிடம் கூறி சமாதானப் படுத்துகிறார்.

அவ்வேளை நூறு ஒட்டகங்களில் ஹஸரத் உதுமான் (ரலி) அவர்களுக்குச் சொந்தமான உணவுப் பொருள்கள் மதினா நகரை வந்தடைகின்றன. வியாபாரிகள் போட்டியிட்டு கொண்டு உணவுப் பொருட்களை வாங்க முயல்கின்றனர். சிலர் இரண்டு சதவீத லாபம் தருவதாகவும் இன்னும் சிலர் நான்கு சதவீத லாபம் தருவதாகவும் கூறி பொருட்களைக் கொள்வனவு செய்ய ஆயத்துமாகின்றனர். ஹஸரத் உதுமான் (ரலி) அவர்களோ எனக்கு பத்து வீத லாபம் எவர் தருகிறாரோ அவருக்கே உணவுப் பொருட்களைத் தருவதாகக் கூறுகிறார்.

பத்து வீத லாபம் எவ்வாறு தர முடியும் எனக் கூறி வியாபாரிகள் பொருட்களை அந்த விலைக்கு வாங்க மறுக்கின்றனர். அப்போது உதுமான் (ரலி) அவர்கள் அவர்களைப் பார்த்து பத்து வீத லாபம் உங்களால் எனக்குத் தர முடியாது என்பது எனக்குத் தெரியும்.

என்னைப் படைத்த அல்லா(ஹ்)வினால் மாத்திரமே அது முடியும் எனக்கூறி அத்தனை பொருட்களையும் தர்மம் செய்து விடுகிறார். அத்தோடு எவன் ஒரு நன்மையான காரியத்தைச் செய்கிறானோ அவனுக்கு பத்து மடங்கு கூலியுண்டு. என்ற குர்ஆன் வசனத்தையும் ஓதிக் காட்டுகிறார்கள் அந்த உத்தம ஸஹாபி. நாட்டில் பஞ்சம் பறந்தோடுகிறது. மக்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் குதூகலிக்கின்றனர். கலீபா ஹஸரத் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்கள் அல்லா(ஹ்) வைத்துதித்து வள்ளல் உதுமான் (ரலி) அவர்களை வாழ்த்துகிறார்கள்.

கண்ணீரை வரவழைத்த பதில்

இஸ்லாத்தின் நல்லாட்சியாளருள் தலை சிறந்தவரான கலீபா ஹஸரத் உமர் (ரலி) அவர்கள் தனது குடும்பச் செலவுக்காக சிறு தொகைப்பணத்தை மாதா மாதம் பொது நிதியிலிருந்து பெற்று வந்தார்கள்.

ஒரு முறை கலீபா அவர்களுக்கு அவசரத்தேவைக்காக நூறு திர்ஹம்கள் பணம் தேவைப்படுகிறது. எனவே அரச நிதிக்காப்பளருக்கு பின்வருமாரு கடிதமெழுதினார்கள்.

அரச நிதிக்காப்பளருக்கு, எனது சொந்த தேவைக்காக நூறு திர்ஹம் பணம் தேவைப்படுகிறது. எனது அடுத்த மாதச்சம்பளத்தில் அதைக்கழித்துக் கொள்ளுங்கள் முற் பணமாக தயவு செய்து குறிப்பிட்ட தொகையை அனுப்பி வையுங்கள்

நிதிக்காப்பளரிடமிருந்து கலீபா அவர்களுக்குப் பதில் வந்தது.

அன்புள்ள கலீபா அவர்களுக்கு, தங்களின் கடிதம் கிடைத்தது. தாங்கள் அடுத்த மாதம் வரை உயிரோடிருப்பதாக எனக்கு உறுதியளிப்பின் தாங்கள் குறிப்பிட்ட தொகையை உடனடியாக அனுப்பி வைக்கிறேன்.

கலீபா அவர்களின் கண்கள் குளமாகின, மரணம் எந்த நிமிடத்தில் வரும் என யாருக்குத்தான் கூற முடியும். அல்லா(ஹ்) வைத்தவிர. நிதிக்காப்பாளாரிடம் தன் தவறுக்காக மன்னிப்பை வேண்டி நின்றார்கள் அந்த மாமன்னர் கலீபா உமர் (ரலி) அவர்கள்.

அம்மா நீ அறிவாயா ?

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஒரு நாள் வழியிலே சென்று கொண்டிருந்த போது ஒரு கிழவி பெரிய மூட்டை ஒன்றை தலையில் சுமந்தவாறே சிரமத்தோடு நடப்பதை அவதானித்தார்கள். காருண்ய நபி அவர்கள் உடனே கிழவியை அணுகி அம்மா உங்களுக்கு நான் உதவி செய்யலாமா? நீங்கள் இவ்வளவு சிரமப்பட்டுக் கொண்டு மூட்டை முடிச்சுகளுடன் எங்கு செல்கிறீர்கள் என்று கூறி அந்தப் பொதிகளை தானே சுமந்து கிழவிக்குப் பின்னாலே சென்றார்கள்.

கிழவியோ பின்னே மூட்டை சுமந்து வருபவர் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் என அறியாது, இந்த ஊரிலே முஹம்மது என்றொருவர் வந்து புதிய மார்க்கமொன்றை மக்களிடையே புகுத்துகிறார். எமது பழைய மார்க்கத்தைப் பொய் என்றுக் கூறி ஏகதெய்வக் கொள்கையே சரி என்கிறார். அதனால் அந்த முஹம்மதின் முகத்தில் கூட விழிக்கக் கூடாது என்பதற்காக இந்த ஊரை விட்டே வெளியேறுகிறேன் என்று கூறுகிறாள்.

ஊர் எல்லை வந்ததும் கிழவி தனது மூட்டைகளை அண்ணலவர்களிடமிருந்து வாங்கிக் கொண்டு இவ்வளவு நல்லவராய் நீ இருக்கிறாயே உனக்கு என்ன உதவி வேண்டும். உன் பெயரென்ன? என வினவுகிறாள்.

பெருமானாரோ புன் முறுவலித்தவர்களாக அம்மா நீங்கள் யாரை வெறுத்து ஊரை விட்டே செல்கிறீர்களோ। அந்த முஹம்மத் நான் தான் என்று கூறுகிறார்கள்.

இதனைக் கேட்ட கிழவி ஐயோ நான் மோசம் போய் விட்டேனே இத்தனை நல்ல குணங்கள் படைத்த தங்களை வெறுத்தா நான் ஊரை விட்டே செல்கின்றேன்? என்னை மன்னியுங்கள் என்று கூறி புனித இஸ்லாத்தைத் தழுவுகிறாள்.

பெருமானாரின் பெருநாள் பரிசு

அன்று நோன்புப் பெருநாள். மதீனா நகரவீதிகளிலே மக்களின் ஆரவாரம். சிறு பிள்ளைகள் புத்தாடை பூண்டவர்களாக வீதிகளிலே விளையாடிக் கொண்டிருக்கின்றனர். அந்த சிறுசுகளின் வதனத்திலே மகிழ்ச்சி பொங்குகிறது. புனித நோன்பை நோற்று முடித்து அதற்குப் பரிசாகக் கிடைத்த புனித ஈகைத் திருநாளல்லவா இன்று.

இவற்றையெல்லாம் உற்று நோக்கியவனாக ஏக்கப் பெருமூச்சுடன் மேனியெல்லாம் புழுதிபடிந்த நிலையில் தெருவோரத்தில் கண்கள் குளமாக காட்சியளிக்கின்றான் கந்ததலுடையுடன் ஓர் ஏழைச்சிறுவன். அவனை யாரும் கவனித்ததாகத் தெரியவில்லை.

அவ்வழியே அண்ணலெம் பெருமானார் (ஸல்) அவர்கள் வருகிறார்கள். அநாதவராக நிற்கும் அந்தச் சிறுவனை காண்கிறார்கள். அச்சிறுவனின் தலையை அன்புடன் தடவியவாறே ஏன் அழுகிறாய் மகனே! என வினவுகிறார்கள், சிறுவனோ, அழுதவனாக எனக்கு அம்மாவும் இல்லை அப்பாவும் இல்லை. இந்தப் பெருநாள் தினத்தில் அவர்கள் உயிரோடிருந்தால் என்னை இவ்வாறு அநாதரவாக விட்டிருப்பார்களா? என ஏக்கத்தோடு கூறுகிறான்.

கருணை நபிகளாரின் கண்கள் கலங்குகின்றன. மகனே! அழாதே நீ இன்று முதல் அநாதையல்ல. நான் உனக்கு அப்பா எனது மனைவி ஆயிஷா உனக்கு அம்மா! எனக்கூறி அந்தச்சிறுவனை தன் வீடு அழைத்துச் சென்று அவனுக்குப் புத்தாடை அணிவித்து இனிப்புப் பண்டங்கள் கொடுத்து மகிழ்விக்கிறார்கள். அந்தச் சிறுவனும் கவலை மறந்து மற்றச் சிறுவர்களோடு சேர்ந்து விளையாடி மகிழ்கிறான். பெருநாள் பரிசாகக் கிடைத்த அந்த அநாதைச் சிறுவனை அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள். அன்போடு ஏற்றுக் கொள்கிறார்கள்.

பிரசவ வேதனையில் மன்னர் அவசர உதவி

மன்னர் கலீபா ஹஸரத் உமரே பாருக் (ரலி) அவர்கள் இரவு நகர் வலம் வந்து கொண்டிருந்தார்கள். ஒரு ஒழுங்கையினூடாக அவர்கள் செல்கையில் ஒரு குடிசையில் பெண்ணொருத்தியின் முனகல் சத்தம் கேட்கிறது. அப்பெண்ணின் கணவனோ வீட்டிற்கு வெளியே கையைப் பிசைந்தவாறு நின்று கொண்டிருக்கிறார்.

கலீபா அவர்கள் காரணத்தை வினவவே தனது மனைவி பிரசவ வேதனையால் அவதியுறுவதாகவும் உதவிக்கு பெண் துணை ஒருவருமில்லையெனவும் கூறுகிறார்

அவருக்கு ஆறுதல் கூறிவிட்டு உடன் தன் வீடு திரும்பிய கலீபா அவர்கள் தன் மனைவியுடன் ஏழையின் வீட்டிற்கு வருகிறார். கலீபாவின் மனைவி பிரசவ வேலையைக் கவனிக்கிறார். கலீபா அவர்களோ தானே அடுப்பு எரித்து தேவையான வெந்நீரை ஏற்பாடு செய்கிறார்.

அவ்வேளை குழந்தையின் அழும்குரல் கேட்கிறது. கலீபாவின் மனைவியார் வெளியே வந்து கலீபா அவர்களிடம் விசுவாசிகளின் தலைவரே! உங்கள் நண்பருக்கு ஆண் குழந்தையொன்று பிறந்துள்ளது என்ற நற்செய்தியை சொல்லுங்கள் என்கிறார்

தன் மனைவிக்கு பிரசவம் பார்த்தது நாடாளும் கலீபா அவர்களின் துணைவியார் என்பதை அறிந்து கொண்ட அந்த ஏழையின் கண்களில் கண்ணீர் பெருகுகிறது. கலீபா அவர்களின் கையைப் பற்றிப் பிடித்து நன்றி கூறுகிறார்.

மக்களைத் தேடிச் சென்று அவர்களின் குறைகளை நிவர்த்தி செய்பவரே நல்லாட்சிக்கு உகந்தவர் என அவ்வேழையின் வாய் முணு முணுக்கிறது.

மன்னரை விழிக்கச் செய்த வழிப்போக்கன்.

இப்றாஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்கள் பல்க் நாட்டை ஆட்சி செய்த காலமது. ஆடம்பரமான அவரது மாளிகைக்குள்ளே திடீரென்று ஒரு வழிப்போக்கன் நுழைகின்றான். இதனைக் கண்ட காவலாளர்கள் அவனைத் தடுத்து நிறுத்தி அனுமதியில்லாமல் மாளிகைக்குள் நுழைந்த காரணத்தை வினவுகின்றனர்.

வழிப்போக்கனோ அலட்டிக் கொள்ளாமல் சத்திரத்திற்கு நுழைய எவரிடமும் அனுமதி தேவையில்லையே? என சாவதானமாக கூறுகிறான்.

காவலர்கள் வழிப்போக்கனைப் பிடித்து அரசன் முன் நிறுத்தி நடந்த விடயத்தைக் கூறுகின்றனர். அரசனோ கோபத்தோடு எனது அழகான பிரமாண்டமான மாளிகையைப் பார்த்து சத்திரமென்று இழிவாக நினைத்தாயா உன்னை என்ன செய்கிறேன் பார் என்று உறுமினார்.

வழிப்போக்கனோ அமைதியாக அரசரே! உங்களுக்கு முன்னால் இந்த மாளிகையில் வாழ்ந்தவர் யார்? என வினவ அரசர் என் தந்தை, தந்தைக்கு முன் பாட்டன், பாட்டனுக்கு முன் முப்பாட்டன், என்று பதில் சொன்னார்

அதற்கு வழிப் போக்கன் அரசரே! பாருங்கள், இங்கு எவருமே நிரந்தரமாக வாழவில்லை. ஒருவர் வர ஒருவர் செல்ல இருப்பது சத்திரமல்லாமல் அரண்மனையாக எப்படி இருக்க முடியும். அதனால் தான் இதனை சத்திரம் என்றேன். இது தண்டனைக்குரிய குற்றமல்லவே என்றான்

மன்னரின் அகக்கண்கள் திறந்து கொண்டன. வழிப்போக்கனை விடுதலை செய்து சிந்தனையில் ஆழ்ந்தார்.

பின்னர் அவர் அரசு துறந்து இறைதியானத்தில் தன் வாழ் நாளை கழிக்கலானார்.

தீங்கு செய்தவர்களையும் மன்னிக்க வேண்டிய அருள் உள்ளம்

உஹுத் யுத்தக்களத்தில் பெருமானார் (ஸல்) அவர்களின் கட்டளையை நபித்தோழர்கள் சிலர் தவறுதலாக நிறை வேற்றத்தவறியதால் போரில் புறமுதுகு காட்டி பின்வாங்கிய எதிரிப்படையினர் மீண்டும் களத்தில் குதித்து முஸ்லிம் படைவீரர்களை தாக்கத்துவங்கினர். இதனால் அண்ணல் நபியவர்களின் பல்லொன்று உடைந்ததோடு உடலிலும் காய மேற்பட்டது.

அவ்வேளை அருகிலிருந்த தோழர்கள் உங்களை இந்த நிலைமைக்கு ஆளாக்கிய அந்தக் காபிர்களை சபியுங்கள் என்றார்கள். அதற்கு அண்ணலவர்கள், தோழர்களே! அல்லா(ஹ்) என்னை சபிப்பதற்காக இவ்வுலகிற்கு அனுப்பவில்லை எனக் கூறியதுடன் இந்த மக்கள் அறியாதவர்கள் இவர்கள் தெரியாத்தனமாகச் செய்த இந்த தீங்குகளை மன்னிப்பாயாக! இவர்களுக்கு நேர்வழி காட்டுவாயாக! என இரு கரமேந்தி இறைவனை பிரார்த்தித்தார்கள்.

ஏனெனில் எப்போதாவது இவர்கள் திருந்தி இஸ்லாத்தில் இணைவார்கள். அல்லது இவர்களது சந்ததியினராவது இஸ்லாத்தை தழுவுவார்கள் என்பதை அண்ணலவர்கள் அறிந்து வைத்திருந்தார்கள். இதனால் எவர் என்ன கொடுமை இழைத்த போதும் எவரையும் ஏந்தல் நபியவர்கள் தனது வாழ் நாளில் சபித்ததாக சரித்திரமே இல்லை. இதனாலே இஸ்லாம் எனும் அணையா விளக்கு அகிலமெங்கும் இன்றும் ஒளிபரப்பிக் கொண்டிருக்கிறது.

அநியாயத்துக்கு அடிபணிய மறுத்த இமாம்

ஹதீஸ்கலை வல்லுநர் இமாம் புஹாரி (ரஹ்) அவர்களை புகாரா நாட்டு ஆளுநர் தனது மகனுக்கு வீடுவந்து ஹதீஸ் கலை கற்றுக் கொடுக்குமாறு பணித்தார். அதற்கு இமாமவர்கள் கல்வியைத் தேடி வந்து பெற வேண்டுமே தவிர கல்வியைக் கற்றுக் கொடுப்பவர் மாணவரின் வீடு சென்று கற்றுக் கொடுப்பது கல்விக்கு இழுக்கை ஏற்படுத்துவதாகும் என்று மறுத்துரைத்தார்கள்.

ஆளுநர் அவர்கள் அப்படியானால் பள்ளியில் பிரத்தியேகமாக தனது மகனுக்கு கல்வி கற்றுக் கொடுக்கும்படி பணித்தார்.

இமாமவர்களோ அதற்கும் இணங்க வில்லை கல்வி கற்றுக் கொடுப்பதில் மாணவர்கட்கிடையே பாரபட்சம் காட்டுவது ஆசிரியனுக்கு அழகல்ல என ஆளுநருக்கு எடுத்துரைத்தார்கள்.

இதனால் கடும் சினம் கொண்ட ஆளுனர் இமாமவர்களை நாடு கடத்தும்படி உத்தரவிட்டார். கல்வியின் சிறப்பை அறியாத ஆளுனர் ஆட்சிசெய்யும் ஊரில் வாழ்வதை விட பரந்து விரிந்த இந்த உலகில் பரதேசியாக வாழ்வது மேலானது என எண்ணிய இமாமாவர்கள் நாட்டை விட்டு உடன் வெளியேறினார்கள்.

அல்-குர் ஆனுக்கு அடுத்தபடியாக இந்த இமாமவர்கள் தொகுத்த நபி மொழிகள் (ஹதீஸ்) இடம் பெறுகிறது.

முதியவருக்கு தாகத்துக்கு நீர் கொடுத்த போது

நபி இபுராஹிம் (அலை) அவர்கள் பாலை வனத்தில் தனது கூடாரத்தில் பரிவாரங்களோடு அமர்ந்திருக்கிறார்கள். அப்போது கடும் வெய்யிலில் மேனியெல்லாம் புழுதி படிந்த நிலையில் ஒரு வயோதிகர் ஒட்டகத்தில் அமர்ந்தவராக கூடாரத்தை நெருங்கி குடிப்பதற்கு நீர் கேட்கிறார். நபி இபுறாஹிம் அவர்கள் ஒரு குவளையில் நீர் கொடுக்கிறார்.

நீரைப் பெற்றுக் கொண்ட முதியவர் முதலில் தனது ஒட்டகத்திற்கு நீர் புகட்டிவிட்டு, சூரியனை வணங்கும் மதத்தினரான அவர் தண்ணீரை கைகளில் ஊற்றி சூரியனுக்கு அபிஷேகம் செய்கிறார்.

இதனைக் கண்ட நபி இபுறாஹிம் அவர்கள் வயோதிகர் கையிலிருந்த தண்ணீர் குவளையைப் பறித்தெடுக்கிறார். அத்தோடு சூரியனுக்கு அபிஷேகம் பண்ணவா உனக்கு நீர் கொடுத்தேன். என அந்தக் கிழவரையும் கடிந்து கொள்கிறார்
கைக்கெட்டியது வாய்க்கெட்டாத நிலையில் வயோதிகர் மனம் வெதும்புகிறார்.

அவ்வேளை அல்லா(ஹ்) வானவர் மீக்காஈல் மூலம் நபி இபுறாஹிமை கடிந்து கொள்கிறான்: ஏ! இபுறாஹீமே! உமது செயலை நான் கண்டிக்கிறேன். இத்தனை வருட காலமாக நான் உணவும், நீரும், அந்த மனிதருக்கு கொடுத்து வருகிறேனே, அந்த மனிதர் சூரியனை வணங்குபவர் என்பதை நான் அறியாதவனென்றா நினைக்கிறீர்? எனது அருட்கொடை களிலிருந்து அந்த மனிதருக்கு உமக்கு ஒரு மிடறு தண்ணீர் கொடுக்க முடியவில்லையே. அந்த மனிதரின் தயாள குணத்தைப் பார்த்தீரா? தான் தாகத்துடன் இருந்தும் முதலில் தன் ஒட்டகைக்கல்லவா நீர் புகட்டினார். என இறைவன் அறிவித்தான். உடன் நபி இபுறாஹீம் அவர்கள் அந்த மனிதரிடம் மன்னிப்புக்கோரி போதிய உணவும், நீரும் கொடுத்து வழியனுப்பிவைத்தார்கள்.

தன்னை வணங்குவர்களுக்கும், மற்றும் எல்லா ஜீவராசிகளுக்கும் பாரபட்சம் காட்டாது உணவு வழங்கும் வல்ல இறைவனிடம் நபியவர்கள் மன்னிப்பை வேண்டி நின்றார்கள்.

மாடியில் ஒட்டகத்தைத் தேடிய கிராமவாசி

இறை நேசச் செல்வர் இப்றாஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்கள் மன்னராக இருந்தும் இறுதியில் அரசு துறந்து ஆத்மிக ஞானியாக மாறினார்கள். புனித க..பாவினருகே தனது வாழ்நாளை இறைதியானத்தில் கழித்தார்கள். காட்டிற்குச் சென்று விறகு வெட்டி கடைத்தெருவில் விற்று அந்தப் பணத்தைக் கொண்டு மாவு வாங்கி தானே ரொட்டி சமைத்து மற்றவர்களுக்கும் கொடுத்து வாழ்ந்தார்கள்.

இவர்கள் பல்க் நாட்டின் அரசராக இருந்த போது ஒரு முறை அவரின் மாளிகையின் மேல் மாடிக்குள் நுழைந்த ஒரு கிராமவாசி எதையோ அங்கும் இங்கும் தேடிக்கொண்டிருந்தார். இதனைக் கண்ட மன்னர் அவர்கள் எதை நீர் இங்கு தேடுகிறீர் என வினவ கிராமவாசி எனது காணாமல் போன ஒட்டகத்தைத் தேடுகிறேன் என்றான்.

இதனைக் கேட்ட அரசர் ஆச்சரியமடைந்தவராக மாடியில் ஒட்டகத்தைத் தேடுகிறீரே உனக்கு அறிவிருக்கிறதா? என வினவ கிராமவாசி சிரித்தவாறே மாமன்னரே! நீங்கள் இந்த மாடமாளிகையிலிருந்துகொண்டு இறைவனைத் தேடும் போது நான் எனது காணாமல் போன ஒட்டகத்தை தேடக் கூடாதா? என வினவினான்.

அரசரின் அகக்கண்கள் திறந்து கொண்டன. சிந்தனையி-லாழ்ந்த மன்னர் சிம்மாசனத்தை ஒதுக்கிவிட்டு எவரிடமும் ஏதும் கூறாது காட்டிற்குச் சென்று தன்னந்தனியே இறைதியானத்திலாழ்நதார்கள்.

அம்பலத்துக்கு வந்த கொலைச் சதி

உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் தமது ஆட்சிக் காலத்தில் மிக எளிமையான வாழ்க்கையே நடத்தினார்கள். ஏனைய ஆட்சியாளர்களைப் போலல்லாது தன்னைப் பொதுப்பணிக்கு அர்ப்பணித்தார்கள்.

உமையாக்களின் வம்சத்தைச் சேர்ந்த கலீபா அவர்களின் இத்தகு எளிய வாழ்க்கையை ஏனைய அரச பரம்பரையினர் வெறுத்தனர். மதுவும், மங்கையும் தமது குறிக்கோளாக கொண்டிருந்த உமையாக்களில் சிலர் மன்னராட்சி தொலைந்து மக்களாட்சி தலை தூக்குமோ என அஞ்சி கலீபா அப்துல் அஜீஸ் அவர்களைக் கொலை செய்ய சதி செய்தனர்

இதற்கு கலீபா அவர்களின் அடிமையை உடந்தையாக்கிக் கொண்டனர். கலீபாவுக்கு அடிமையின் மூலமாக உணவில் நஞ்சு கலந்து கொடுத்தனர். நஞ்சு கலந்த உணவை உண்ட கலீபா அவர்கள் நோய்வாய்ப்பட்டார்கள்.

உணவில் நஞ்சு கலந்தது தனது அடிமை என உணர்ந்த கலீபா அவர்கள் அடிமையை அழைத்து நீ ஏன் எனது உணவில் நஞ்சு கலந்தாய்? என வினவ அவன் தவறை உணர்ந்து கலீபா அவர்களிடம் தன்னை மன்னிக்கும்படி அழுது வேண்டி நின்றான். ஆயிரம் பொற்கா:சுகளுக்கு ஆசைப்பட்டு உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்ததை அவன் ஒப்புக் கொண்டான்.

உடனே கலீபா அவர்கள், இந்த அற்ப காசுகளுக்காகவா இந்த ஈனச் செயலைப் புரிந்தாய், பரவாயில்லை, எல்லாம் விதிப்படிதான் நடக்கும் என்று கூறி அந்த அடிமையை மன்னித்து விடுதலை செய்து அவனை ஊருக்கு அனுப்பினார்கள். அவன் லஞ்சமாக வாங்கிய ஆயிரம் பொற்காசுகளையும் பொது நிதியில் சேர்த்து தன் இன்னுயிர் நீத்தார்கள் இறை நேசச் செல்வர் கலீபா அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள்.

அழுத பிள்ளைக்கு பாலூட்ட தாய் தயங்கியது ஏன்?

கலீபா ஹஸரத் உமர் (ரலி) அவர்களின் ஆட்சிக்காலத்தில் வசதியற்ற அனைத்து மக்களுக்கும் பொது நிதியிலிருந்து பணமும் பொருளும் வழங்கப்பட்டு வந்தன. இதனால் பிற ஊர்களில் இருந்து கூட மக்கள் மதினா நகர் வந்து பொருட்களை இனாமாகப் பெற்றுச் சென்றனர்.

ஒரு முறை வெளியூரிலிருந்து கலீபா அவர்களிடம் உதவி பெறுவதற்காக ஒரு கூட்டம் மதீனா நகரை வந்தடைந்தது. இரவு நேரத்தில் வந்தடைந்த அக்கூட்டத்தை அன்றிரவு தங்கி அடுத்தநாள் உணவுப் பொருள்களை வாங்கிச் செல்லுமாறு தெரிவித்த கலீபா அவர்கள், அவர்கள் தங்குவதற்கு வசதி செய்து கொடுத்ததோடு அவர்களுக்காக தானே ஏனைய தோழர்கள் சிலரோடு சேர்ந்து இரவுக் காவலும் புரிந்தார்கள்.

நடுநிசி வேளை ஒரு குழந்தை வீறிட்டழும் சத்தம் கேட்டது. பசியினாலேயே அக்குழந்தை அழுகிறது என்பதை கலீபா அவர்கள் உணர்ந்தார்.

தொடர்ந்தும் அக்குழந்தை வீறிட்டலறுவதைக் கேட்ட அவர் அக்குழந்தையின் தாயை அழைத்து, ஏன் இவ்வாறு குழந்தையை அழவைக்கிறீர்? பிள்ளைக்கு பாலைக் கொடுத்து அதை அமைதியடையச் செய்யலாமே. இந்த நடுநிசி இரவில் மற்றவர்கள் தூக்கத்தையும் கெடுக்கிறீரே! என சற்றுக் கடுமையாக கேட்டார்.

அப்பெண் அமைதியாகச் சொன்னாள். கலீபா அவர்களே தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகளுக்குத் தாங்கள் உதவிப்பணம் கொடுப்பதை தடை செய்துள்ளீர்கள். அதனால். நான் குழந்தைக்கு பால் கொடுத்தால் தாங்கள் இக்குழந்தைக்கு உதவிப்பணம் வழங்கமாட்டீர்களே, அதனாலேயே குழந்தை பசியால் அழுதும் நான் அமுதூட்ட வில்லை என்னை மன்னியுங்கள் என்றாள்.

கலீபா அவர்கள் சிந்தனையிலாழ்ந்தார்கள். இன்று முதல் அன்று பிறந்த குழந்தையேயாயினும் உதவிப்பணம் வழங்க வேண்டுமென தனது அதிகாரிகளுக்கு கட்டளை பிறப்பித்தார்கள்.

பழத்தின் சுவை அறியா பழத்தோட்டக் காவலர்

இறை நேசச் செல்வர் இப்றாஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்கள் அரசு துறந்து தனது நாட்டைவிட்டு வெளியேறி ஒரு பழத் தோட்டத்தில் காவற்காரராக கடமை புரிந்து கொண்டிருந்தார்கள்.

ஒரு முறை பழத்தோட்டத்து உரிமையாளர் தோட்டத்திற்கு வந்து சாப்பிடுவதற்கு நல்ல பழமாக பறித்து வருமாறு காவலாளரை வேண்டுகிறார். காவலாளி சில பழங்களைக் கொண்டு வந்து கொடுக்கிறார். ஒரு பழத்தை உண்ண ஆரம்பித்த தோட்டத்து உரிமையாளர் அப்பழம் புளிப்பதால் வேறு மரத்தில் பழம் பறித்து வருமாறு காவற்காரரை வேண்டுகிறார்.

அவரும் சளைக்காது வேறு சில பழங்களைக் கொண்டு வந்து கொடுக்கிறார். அதுவும் புளிப்பாக இருக்கவே கோபங்கொண்ட தோட்டத்து சொந்தக்காரர் இந்த தோட்டத்தில் காவல்காக்கும் உமக்கு எந்தப்பழம் புளிக்கும், எந்தப் பழம் சுவைக்கும் என்பது கூட தெரியாதா? என காவலாளியை கடிந்து கொள்கிறார்.

காவலாளியோ அமைதியாக நான் இந்த தோட்டத்தில் காவலாளியே தவிர நிலத்தில் விழுந்திருக்கும் ஒரு பழத்திற்கு கூட உரிமையாளனல்லன். இது வரை நான் எந்த ஒரு பழத்தையேனும் சுவைத்ததுப் பார்த்ததில்லை. எனவேதான். எந்த மரத்தின் பழம் புளிக்கும் எது இனிக்கும் என அறியாதவனாக உள்ளேன்.

இத்தகைய நேர்மையாளர் இப்றாஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்கள்தான் என இனம் கண்டு கொண்ட தோட்ட உரிமையாளர் எவ்வளவோ வேண்டியும் அதை மறுத்து காவல் வேலையை விட்டு இறை வழியில் தன் வாழ் நாளைக் கழித்தார்கள் அந்த ஆத்மஞானி.

பெற்ற மகனுக்கும் சலுகை தர மறுத்த நாட்டுத் தலைவர்

கலீபா உமர் (ரலி) அவர்கள் ஒரு நாள் தனது மகன் அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்களுடன் சென்று கொண்டிருந்தார்கள். சிறிது தூரத்தில் தனது மகனின் வீட்டருகே விளையாடிக் கொண்டிருந்த ஒரு சிறுமி திடீரென மயக்கமுற்று கீழே விழுவதை கலீபா அவர்கள் அவதானித்தார்கள்.

அவசரமாக அவ்விடத்தை அடைந்த கலீபா அவர்கள் சிறுமியின் முகத்தில் தண்ணீர் தெளித்து மயக்கம் தெளிந்ததும் காரணத்தை வினவுகிறாகள். பசி பொறுக்க முடியாத நிலையில்தான் தனது பேத்தி மயக்கமுற்றாள் என்பதை அறிந்து கொண்ட கலீபா அவர்கள் தனது மகனை கடிந்து கொள்கிறார்கள்

மகனோ, அன்புத்தந்தையே! தாங்கள் எனது குடும்பச் செலவுக்கென பொது நிதியத்திலிருந்து தரும் பணம் எமது உணவுக்குக் கூட போதவில்லை. போதுமான ஆகாரமில்லாததாலே அக்குழந்தை அடிக்கடி மயக்கம் போட்டு விழுகிறது. எனவே சிறிது பணத்தைக் கூட்டித்தரும்படி கேட்கிறேன். என்றார்

நீதியின் தலைவர் ஹஸரத் (உமர்) ரலி அவர்கள் கூறுகிறார்கள். அன்பு மகனே! நான் நாட்டின் தலைவன், நீர் எனது தனயன் என்பதற்காக எந்தவிதமான விசேட சலுகையும் நான் உனக்கு புரிய முடியாத நிலையில் உள்ளேன். எனது பார்வையில் அனைத்து மக்களும் சமம். நான் எனது குடும்பத்தினருக்கு சலுகையளித்து நாளை மறுமையில் அல்லா(ஹ்)விடம் குற்றவாளியாக நிற்க விரும்பவில்லை. ஏனைய பொது மக்களுக்கு வழங்கும் பணத்திற்கு மேலதிகமாக ஒரு அரைக்காசு கூட என்னால் உனக்கு வழங்க முடியாது மகனே. என்றார்கள். அந்த நீதியின் காவலர்

அடிவாங்கிய அடிமைப்பெண் சிரித்தது ஏன்?

மகான் இப்ராஹீம் அத்ஹம் (ரஹ்) அவர்கள் பல்க் நாட்டை ஆட்சி செய்து வந்தார்கள். அவர்கள் மலர் தூவப்பட்ட பஞ்சணையில்தான் உறங்குவது வழக்கம். ஒரு முறை அன்னாரின் அடிமைப்பெண் பஞ்சணையில் மலர்களைத்தூவி விட்டு அசதியின் காரணமாக தன்னை அறியாமல் அதில் உறங்கி விட்டாள்

மாளிகையினுள் வந்த அரசருக்கு இக்காட்சியைக் கண்டதும் கடும் கோபம் ஏற்பட்டது. உடன் சவுக்கால் அடிமைப்பெண்ணை அடித்தார். திடுக்கிட்டு விழித்துக்கொண்ட அடிமைப்பெண் வேதனையைப் பொறுத்துக் கொண்டு வாய்விட்டுச் சிரிக்க ஆரம்பித்தாள்.

அரசரின் கோபம் பன்மடங்காகியது. ஆத்திரம் தீர அவளைப்பல முறை அடித்தும் அவள் சிரிப்பு அடங்கவில்லை

நான் இவ்வளவு அடித்தும் நீ ஏன் சிரித்துக் கொண்டேயிருக்கிறாய்? என அடிமைப்பெண்ணிடம் அரசர் வினவினார்.?

அப்பணிப்பெண் பதில் சொன்னாள் :-
அரசர் அவர்களே! நான் தங்கள் பஞ்சணையில் சிறிது நேரம் தவறுதலாக தூங்கியதற்காக எனக்கு சவுக்கால் அடித்து தண்டனை வழங்கினீர்கள். இந்த ஆடம்பரமான மாளிகையில் மலர்கள் தூவப்பெற்ற இந்த மஞ்சத்தில் காலமெல்லாம உறங்கும் தங்களுக்கு நாளை மறுமையில் வல்ல இறைவனால் வழங்கப்படும் தண்டனையை தாங்கள எப்படித்தான் பொறுத்துக் கொள்வீகளோ என்பதை எண்ணித்தான் நான் சிரித்தேன். என்று அந்த அடிமைப்பெண் இடித்துரைத்தாள்.

அரசரின் சிந்தனை சுழன்றது. அன்று முதல் பஞ்சணையில் மலர்கள் தூவப்படவில்லை, ஆடம்பர வாழ்க்கையை அவர் வெறுத்தார், ஈற்றில் இறைநேசச் செல்வராக மாறினார்.

திருடனை வியக்க வைத்த தீர்ப்பு

ஹஸரத் அலி (ரலி) அவர்களின் போர்க்கவசத்தை ஒரு முறை யூதனொருவன் களவெடுத்துவிட்டான். இதனை அறிந்த அலி (ரலி) அவர்கள் யூதனிடம் வினவவே, போர்க்கவசம் தனதெனக் கூறி கவசத்தைத் திருப்பிக் கொடுக்க மறுத்துவிட்டான். எனவே யூதனுக்கெதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

யூதன் கவசம் தன்னுடையதுதான் என வாதாடினான். அலி (ரலி) அவர்களும் உண்மையாகவே கவசம் தன்னுடையதுதான் என நீதிபதியிடம் எடுத்துரைத்தார்கள். நீதிபதி சாட்சிகளை ஆஜர்படுத்துமாறு ஹஸரத் அலி (ரலி) அவர்களை வேண்டினார்.

அலி (ரலி) அவர்கள் தனது அடிமையையும், மகன் ஹஸன் (ரலி) அவர்களையும் சாட்சிகளாக நீதிமன்றம் கூட்டிவந்தார்கள்

வழக்கை விசாரித்த நீதிபதி அடிமையினதும், மகன் ஹஸன் (ரலி) அவர்களினதும் சாட்சியத்தை தன்னால் ஏற்றுக்கொள்ள முடியாதென மறுத்து வழக்கைத் தள்ளுபடி செய்தார். கவசத்தை யூதனிடம் திருப்பி கொடுத்தார்.

யூதனுக்கோ ஆச்சரியமாக இருந்தது. இஸ்லாத்தின் கலீபா அலி (ரலி) அவர்களுக்குச்சாதகமாகத்தான் தீர்ப்பை நீதிபதி வழங்குவார் என அவன் எதிர்பார்த்தான். எனினும் இஸ்லாமிய நீதி அரசனுக்கும் ஆண்டிக்கும் ஒன்றென உணர்ந்த அந்த யூதன் உடன் இஸ்லாத்தில் இணைந்தான். அலி (ரலி) அவர்களிடம் மன்னிப்பை வேண்டிய அவன் கவசத்தை அலி (ரலி) அவர்களிடம் ஒப்படைத்தான்.

மது அருந்துபவரை மன்னர் மடக்கிப் பிடித்தபோது

கலீபா உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களின் ஆட்சிகாலம். இஸ்லாத்தின் சிறந்த ஆட்சியாளர் என உலகம் போற்றும் கலீபா அவர்களுக்கு ஒருவர் தினமும் மது அருந்துவதாக தகவல் கிடைத்தது.

அவரைக் கையும் மெய்யுமாக பிடித்து தண்டனை வழங்கவேண்டுமென எண்ணங்கொண்ட கலீபா அவர்கள் ஒரு நாள் அந்நபரின் வீட்டு மதில் ஏறிக் குதித்து பின் கதவு வழியாக வீட்டிற்குள் நுழைந்தார். குடித்துக் கொண்டிருந்த நபர் வகையாக மாட்டிக் கொண்டார்.

எனது ஆட்சியில் நீர் மதுபானம் அருந்துவதா? என கலீபா அவர்கள் கர்ச்சித்தார்கள். மது அருந்திக்கொண்டிருந்தவர் அமைதியாக பதில் சொன்னார்: கலீபா அவர்களே! நான் ஒரு குற்றம் தான் செய்தேன். ஆனால் தாங்களோ மூன்று குற்றங்களைத் தொடர்ச்சியாக செய்துள்ளீர்கள். இது நியாயமா?

கலீபா அவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. நான் செய்த குற்றங்கள்தான் என்ன என்று கேட்டார்

மது அருந்தியவர் பதில் சொன்னார்

ஒருவரின் வீட்டிற்குள் நுழையும் முன் ஸலாம் கூறி வீட்டு சொந்தக்காரனின் அனுமதி பெற்றுத்தான் நுழையவேண்டுமென இஸ்லாம் கூறுகிறது. நீங்களோ என் அனுமதியின்றி என் வீட்டினுள் உத்தரவின்றி நுழைந்தீர்கள். அடுத்து வீட்டினுள் நுழையும் போது முன்பக்க வாசலால் நுழைய வேண்டுமென்பது இஸ்லாத்தின் கட்டளை தாங்கள் பின் கதவால் நுழைந்து குற்றம் புரிந்துள்ளீர்கள். இறுதியாக ஒரு மனிதனின் அந்தரங்கத்தை வெளிப்படுத்தி அந்த மனிதனை அவமானப் படுத்தக் கூடாதென புனித இஸ்லாம் கூறுகிறது. தாங்களோ அதையும் மறந்து விட்டீர்கள்.

கலீபா அவர்கள் சிந்தனையில் ஆழ்ந்தார்கள் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டார்கள். இந்தச் சம்பவத்தை நான் எவரிடமும் கூற மாட்டேன் என அம்மனிதரிடம் உறுதி கூறி வீடு திரும்பினார்கள்.

(தொடர்ச்சி 47ம் பக்கம்)

கொள்ளையர் தலைவனை வெட்கப்பட வைத்த சிறுவன்

ஞானமகான் அப்துல் காதிர் ஜீலான் (ரஹ்) அவர்கள் சிறுவயதினராய் இருந்த போது அன்னாரை மார்க்கக் கல்வி கற்பதற்காக தாயார் வெளியூருக்கு அனுப்பினார். செலவுக்காக நாற்பது பொற்காசுகளையும் கொடுத்தனுப்பினார்.

தமது மகன் காட்டு வழியில் பயணம் செய்ய வேண்டியிருப்பதனால் வழிப்பறிக் கொள்ளையர்களின் அட்டகாசம் அவ்வேளை மிகுதியாக இருந்ததாலும் தாயார் பொற்காசுகளை மகனின் உடையில் வைத்து தைத்து அனுப்பினார். அத்தோடு உயிர் போனாலும் உண்மையே பேசு என் தன் மகனுக்கு உபதேசித்து அனுப்பினார் அந்த அன்புத் தாய். வெளியூர் செல்லும் வியாபாரக் குழுவினருடன் சேர்ந்து அப்துல காதிர் ஜீலானி பயணமானார்.

இடையில் கொள்ளைக் கூட்டத்தினர் வியாபாரக் குழுவினரை வழிமறித்து அவர்களின் பொருட்களைக் கொள்ளையடித்தனர். இறுதியில் கொள்ளைக் கூட்டத் தலைவன் அந்த சிறுவனை நெருங்கி நீ என்ன வைத்திருக்கிறாய்? என்று அதட்டிக் கேட்டான் சிறுவர் அப்துல் காதிர் ஜீலானி எது வித பதற்றமுமின்றி தன்னிடம் 40 பொற்காசுகள் இருப்பதாகவும் அதை தனது ஆடையில் வைத்து தைத்துள்ளதாகவும் கூறினார்.

வியப்படைந்த கொள்ளைக் கூட்டத் தலைவன் சிறுவனே! நீ சொல்வது உண்மைதானா? என வினவ சிறுவர் பொற்காசுகளை கையில் எடுத்து கொள்ளைக் கூட்டத் தலைவனுக்கு கொடுத்தார்.

தலைவனோ சிறுவனை நோக்கி நானோ பல கொள்ளைகள், கொலைகள் புரிந்தவன் எனினும் இதுவரை எவரும் என்னிடம் உண்மை கூறியதில்லை உன்னைத் தவிர என்றார். அதற்கு சிறுவர் எனது தாய் உயிர் போனாலும் உண்மையே பேசு என எனக்கு போதித்துள்ளார்கள். அதனால் நான் ஒரு போதும் பொய் பேசமாட்டேன் என்றார்

கொள்ளைக்காரனின் மனம் மாறியது. ஒரு சிறுவனுக்கு இருக்கும் பண்பு கூட எமக்கில்லையே என அவன் வெட்கபட்டான். கொள்ளையடித்த பொருட்கள் அனைத்தையும் திருப்பிக் கொடுத்து விட்டு, அவனும் அவனது கூட்டத்தினரும் அன்று முதல் திருந்தி வாழ்ந்தார்கள்.

ஆடு மேய்க்கும் இடையனிடம் ஒரு சோதனை

கலீபா ஹஸரத் உமர் (ரலி) அவர்கள் ஒரு முறை ஓர் அலுவல் காரணமாக காட்டு வழியே பயணம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. இடையில் ஒரு மனிதன் ஆடு மேய்த்துக் கொண்டிருந்ததைக் கண்ட கலீபா உமர் (ரலி) அவர்கள் அந்த மனிதனை அணுகி அன்பரே! எனக்கு இந்த ஆடுகளில் ஒன்றை இனாமாகத் தர முடியுமா என வினவினார்.

ஆட்டிடையன், நண்பரே! இது என்னுடைய ஆடுகளல்ல. ஆட்டுச் சொந்தக்காரனின் அனுமதியில்லாமல் அவ்வாறு எனக்குச் செய்ய முடியாது எனக் கூறினார்

கலீபா அவர்கள் அம்மனிதனிடம் அப்படியானால் ஒன்று செய். நீ எனக்கு ஒரு ஆட்டைத்தா, சொந்தக்காரன் விசாரித்தால் ஆட்டை ஓநாய் பிடித்துச் சென்றது என்ற சொல், அவர் நம்புவார் என்றார்.

இடையன் பதில் சொன்னான்:

ஆட்டை ஓநாய் பிடித்துச் சென்றது என்று நான் சொன்னால் எனது எஜமான் நம்புவார். எனினும் எனக்கும் தங்கட்கும் எஜமானனாக இருக்கும் அல்லா(ஹ்) இவற்றை எல்லாம் அவதானித்துக் கொண்டிருக்கிறானே? அவனை ஏமாற்ற முடியுமா?

படிப்பு வாசனையே இல்லாத அந்த ஆட்டிடையனின் இறை நம்பிக்கையை அறிந்த கலீபா அவர்கள் அவனை அப்படியே ஆரத்தழுவிக் கொண்டார்கள். அன்பரே! உம்மைப் பரிசோதிக்கவே நான் அவ்வாறு உன்னிடம் வினவினேன். உண்மையிலே நீர் இறையச்சம் கொண்ட உத்தமன். என அந்த ஆட்டிடையனை கலீபா அவர்கள் வாழ்த்தினார்கள்.

பழரசத்தில் ஞானரசம்

தத்துவஞானி இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் ஒரு நாள் தனது வீட்டில் தோடம்பழம் ஒன்றை சுவைத்தவராக அமர்ந்திருந்தார். அவ்வேளை அன்னாரைச் சந்திக்க அவரின் மாணவனொருவன் வந்தான்.

அவனை அமரச்செய்த இமாம் அவர்கள் ஒரு தோடம்பழத்தை அம்மாணவனிடம் கொடுத்து உண்ணச் சொன்னார். இந்த தோடம்பழம் எனது வீட்டுத் தோட்டத்தில் பறித்தது. இது மிகவும் சுவையானது என அப்பழத்தைப் பற்றி மாணவனிடம் புகழ்ந்து பேசினார். பழத்தை கையிலெடுத்த மாணவன் அதை உண்ணாது ஆசிரியவர்களே! இந்தப் பழம் இனிக்கும் என்று எவ்வாறு உறுதியாக கூறுகிறீர்கள்? என்று வினவினார்.

இமாமவர்கள், இந்தப் பழம் என் தோட்டத்துப் பழம். நான் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் இப்பழம் இனிக்கிறது. எனவே உனக்குத் தந்த அதே மரத்துப் பழம் இனிக்காமலிருக்குமா? இதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது. என்றார்.

அதற்கு மாணவன் இமாமவர்களே! ஒரே மரத்தில் எல்லாம் இனிப்பாக இருக்க வேண்டுமென்ற நியதியில்லையே. இது புளிப்பாகவும் இருக்கலாமே. என்றான். இமாமவர்கள் மாணவனை நோக்கி உனக்குச் சந்தேகம் என்றால் இதோ என் கையில் இருக்கும் பழத்தின் சுளையொன்றை சாப்பிட்டுப் பாரும். இனிமையாக இருக்கும். என்றார்.

மாணவன் சொன்னான் ஒரே பழத்தின் சுளையாக இருந்தாலும் எல்லாவற்றையும் படைத்த அல்லா(ஹ்)வால் அதன் சுவையை மாறுபடுத்த முடியாதா? இமாமவர்களின் சிந்தனை சுழன்றது. என் மாணவன் என்னையே மட்டந்தட்டி விட்டானே. என்று வியப்புற்ற அவர்கள் இறைவனிடம் வேண்டினார்கள். யா அல்லாஹ், நான் தான் அறிவாளி என்று எண்ணங் கொண்டிருந்த என்னை என் மாணவன் மூலமே படிப்பினை பெறச் செய்து என்னைப் பெருமை கொள்வதிலிருந்து காப்பாற்றிய வல்லவனே! உனக்கே எல்லாப் புகழும், புகழ்ச்சியும் என்று கூறியவராக அல்ல(ஹ்)வை சிரம் பணிந்தார்கள்

விவாகரத்துக்கு அனுமதி கேட்கப் போனவருக்கு அதிர்ச்சி

கலீபா ஹஸரத் உமர் (ரலி) அவர்களின் ஆட்சிக்காலம்.
ஒரு மனிதர் தமது மனைவியுடன் ஏற்பட்ட பிணக்கால் அவளை மண விலக்குப்பெற கலீபா அவர்களிடம் அனுமதி கோரி வந்தார். எனினும் கலீபா அவர்கள் பள்ளியில் இல்லாத காரணத்தால் அவர்களைத் தேடி வீட்டுக்குச் சென்றார்.

அவர் அங்கு சென்ற சமயம் வீட்டினுள்ளே கலீபா அவர்களுக்கும் அவர் மனைவிக்குமிடையே பெரிய வாய்ச் சண்டை. அன்னாரின் மனைவியாரின் கடுஞ்சொற்களக்கு கலீபா அவர்கள் தாழ்ந்த குரலில் பதில் கூறிக் கொண்டிருந்தார்.

வந்தவருக்கோ தர்மசங்கடமான நிலை கலீபா அவர்களின் வீட்டிலும் இதே பல்லவி தானா? என அங்கலாய்த்தவராக திகைத்து நின்ற அவர் திரும்பிச் செல்ல முற்பட்டபோது கலீபா அவர்கள் வீட்டினுள்ளிருந்து வெளியே வந்தார்கள்.

வாசலருகே நின்று கொண்டிருந்த மனிதரிடம் வந்த காரணத்தை வினவவே அம்மனிதர், கலீபா அவர்களே எனது வீட்டுக்குழப்பத்தைக் கூறி என் மனைவியிடமிருந்து மணவிலக்குப் பெறலாமென தங்களிடம் வந்தால் தங்கள் வீட்டிலும் இதே பிரச்சினையா? எனக்கு ஒரே குழப்பமாக இருக்கிறது. என்றார்.

கலீபா அவர்கள் பதில் சொன்னார்கள்: நண்பரே। பொறுமையைக் கடைப்பிடியும் பொறுமையாளரே உண்மையான வீரர் ஆவார். எல்லா வீட்டிலும் இப்படியான பிரச்சினைகள் உருவாகுவது சகஜம்.

என் மனைவியைப் பாருங்கள். அவள் எனது உடுதுணிகளை துவைத்துத்தரும் சலவைக்காரியாக, எனக்கு உணவு சமைத்துத்தரும் சமையற்காரியாக, எனது பிள்ளைகளை பராமரிக்கும் வேலைக்காரியாக, எல்லாவற்றிற்கும் மேலாக நான் தவறான வழியில் செல்லாது எனது அபிலாஷைகளைத் தீர்த்துவைக்கும் அன்பு மனைவியாக எவ்வளவு தியாகங்களை எமக்காகச் செய்கிறாள். இத்தனையும் தனது கடமையென உணர்ந்து செய்யும் மனைவிமாரின் சிறு குற்றங்களை நாம் மன்னிப்பது நமது கடமையன்றோ.

எனவே நண்பரே! உமது எண்ணத்தைக்கைவிடும் நீர் வீடு சென்று மனைவியுடன் சமாதானமாக வாழ்க்கை நடத்தும். குடும்ப வாழ்க்கை இப்படித்தான். கொஞ்சம் சமாளித்துக் கொள்ளும். அம்மனிதரும் மகிழ்வோடு இல்லம் நோக்கி நடந்தார்.

அறிவில் சிறந்தவரின் அடக்கமான பதில்

இமாமுல் அ∴லம் ஹஸரத் அபூஹனிபா (ரஹ்) அவர்கள், ஹனபீ மத்ஹபின் ஸ்தாபகராவார். தலை சிறந்த அறிஞரும் மார்க்க விற்பன்னருமாவார். அவர்கள் ஒரு நாள் கடை வீதியால் சென்று கொண்டிருந்த போது ஒரு நாய்க்குட்டி நான்கு கால்களையும் நிலத்தில் ஊன்றியவாரே சிறு நீர் கழிப்பதை கண்ணுற்று வியப்படைந்தார். ஏனெனில் நாய் எப்போதும் பின்காலொன்றை தூக்கியவாறல்லவா சிறு நீர் கழிக்கும்.

பக்கத்தில் இதை அவதானித்துக் கொண்டிருந்த செருப்புத்தைக்கும் தொழிலாளி ஒருவர் இமாமவர்களிடம் இமாமவர்களே! இதில் வியந்து பார்ப்பதற்கு என்ன இருக்கிறது. பருவமடைந்த நாய் தான் பின் காலைத் தூக்கி சிறு நீர் கழிக்கும். இது தங்களுக்குத் தெரியாதா என கிண்டலாகக் கேட்டான்

இமாமவர்கள் சொன்னார்கள் : நண்பரே அறிவென்பது ஒரு கடல் அதில் நான் கற்ற அளவு ஒரு துளி மட்டுமே. உலகில் எல்லோருக்கும் எல்லாம் தெரிந்து விட முடியாது. எல்லாம் அறிந்த வல்லவன் அல்லா(ஹ்) ஒருவன் மட்டுமே. நான் உம்மிடமிருந்து இந்த அறிவைக்கற்கக் கிடைத்ததைப் பெருமையாகக் கொள்கிறேன்.

அறிவைத்தேட வெட்கப்படுபவனும், தான் அறிவாளி என பெருமை கொள்பவனும் ஒரு நாளும் அறிவைப் பெற முடியாது. மரணம் வரை நாம் எல்லோரும் மாணவர்கள்தாம் என்றார்கள்.

புதுச்சட்டை ஆளுநர் மகளுக்கு இல்லை

ஈராக் நாட்டின் ஆளுநராக கடமைபுரிந்த உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்கள் தனது இறுதிமூச்சுவரை எளிமையான வாழ்க்கையை நடாத்தி வந்தார்கள்.

ஒரு பெருநாள் தினம், ஆளுநரின் மனைவி பாத்திமா நம்பிள்ளைகளுக்கு நல்ல நாளிலாவது அணிய புதிய சட்டையில்லை. மற்றப்பிள்ளைகள் எல்லாம் அழகாக உடுத்திருக்க, ஆளுநரின் மகள் அழுக்கு உடையை அணிவதா? அரச நிதியிலிருந்து முற்பணமாக சிறிது பணம் வாங்கி மகளுக்கு புதுச்சட்டை தைதுக்கொடுங்கள். என்று தனது கணவனை வேண்டி நின்றார்.

ஆளுநரும் புன்னகைத்தவராக தன் மனைவியை நோக்கி பாத்திமாவே நான் எனது மாத ஊதியத்தைத் தவிர்த்து வேறு பணத்தை எக்காரணத்தைக் கொண்டும் அரச நிதியிலிருந்து பெற விரும்பவில்லை. நான் எடுத்த பணத்தை திரும்பக் கொடுக்குமுன் பதவி துறக்கப் படுவேனோ, உயிருடன் இருப்பேனோ என்பதில் என்ன நிச்சயமிருக்கிறது. எனவே எப்படியாவது சமாளித்துக்கொள்ளும் என மனைவியைக் கேட்டுக்கொண்டார்.

மனைவியாரும் தமது வீட்டிலிருந்த பழைய விரிப்பொன்றைக் கிழித்து அதில் மகளுக்கு பெருநாள் சட்டை தைத்து கொடுத்தார்கள்.

இஸ்லாமிய நல்லாட்சியாளருள் உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்கள் பிரபலமானவர்கள். இவர்கள் மரணிக்கும் போது இவர்களிடம் இரண்டே இரண்டு உடைகள் தான் இருந்தனவாம். இஸ்லாத்தின் இரண்டாவது கலிபா ஹஸரத் உமர் (ரலி) அவர்களின் பரம்பரையில் உதித்த இவர்கள் இஸ்லாமிய சரித்திர ஆசிரியர்களால் இரண்டாவது உமர் என வர்ணிக்கப்படுகிறார்கள்.

நாச வேலை செய்தவனிடம் ஏற்பட்ட மனமாற்றம்

ஹஸரத் அம்ரிப்னு ஆஸ் (ரலி) அவர்கள் எகிப்தின் ஆளுனராக ஆட்சிசெய்த காலமது. முஸ்லிம்களுக்கும் ஏனைய சமூகத்தினருக்கும் இடையில் பூசலை ஏற்படுத்த நினைத்த ஒரு குழப்பவாதி அச்சமூகத்தினரின் சிலையொன்றின் மூக்கை உடைத்து விட்டான்

இதனால் நாட்டில் இனப்பூசல் தலைதூக்க ஆரம்பித்தது. முஸ்லிம்கள் தான் இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறார்கள் என்ற வதந்தி நாடெங்கும் பரவியது. இதனைக் கேள்விப்பட்ட ஆளுநருக்கு ஆத்திரம் தாள முடியவில்லை. இந்தப் பொல்லாத செயலை செய்தவனைக் கைது செய்து அவனின் மூக்கைத் துண்டித்து விடுவதாக அவர் உறுதியளித்தார். அதற்கு ஒரு நாள் அவகாசமும் கேட்டார்.

எனினும் அந்தக்காரியத்தை செய்தவனை கண்டு பிடிக்க முடியவில்லை. அமைதியடைந்திருந்த பிற மதத்தினர் மீண்டும் பூசலைக் கிளப்பி விட்டனர்.

உடனே ஆளுனர் அம்ரிப்னு ஆஸ் அவர்கள் அறிக்கையொன்றை வெளியிட்டார். இந்தச் செயலை முஸ்லிம்கள்தான் செய்திருக்க வேண்டும் என நீங்கள் நினைப்பின் அந்தச்சிலையின் மூக்கிற்குப் பதிலாக எனது மூக்கை துண்டித்துக்கொள்ள நான் தயார் என்று கூறி தனது மூக்கை துண்டித்துக்கொள்ள தயாரானார்கள்.

அவ்வேளை கூட்டத்தில் இருந்த ஒருவன் ஓடிவந்து அந்தச் செயலைத் தானே செய்ததாகவும் இரு மதத்தினரிடையேயும் பூசலை ஏற்படுத்தவே தான் அந்தச் செயலை செய்ததாகவும் ஒப்புக்கொண்டான்.

அத்தோடு கலீபா அவர்களின் நேர்மையைக் கண்ட அந்தக்குழப்பவாதி மன்னிப்புக் கோரி உடன் இஸ்லாத்தைத் தழுவினான். அவனைத் தொடர்ந்து பலர் இஸ்லாத்தில் இணைந்தனர். இந்நிகழ்ச்சி வரலாற்றுப் புகழ்மிக்கது. இன ஒற்றுமைக்கு வித்திடும் இஸ்லாம் இனத்துவேஷத்தை அடியோடு வெறுக்கிறது.

சில நாட்கள் கடந்தன கலீபா அவர்களின் சபையில் அம்மனிதரை திடீரென ஒரு நாள் கண்ட கலீபா அவர்கள் அவரை தனிமையில் அழைத்து நண்பரே! அன்று நடந்த சம்பவத்தை நான் எவரிடமும் கூறவில்லை என்றார்கள். அம்மனிதரும் கலீபா அவர்களே நான் அன்று முதல் மது அருந்துவதை நிறுத்திக் கொண்டேன் என்றார்கள். மகிழ்ச்சி மேலீட்டதால் கலீபா அவர்கள் அம்மனிதரை ஆரத்தழுவிக் கொண்டார்கள்

உழைக்கும் கரங்களுக்கு கிடைத்த பெருமை

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மஸ்ஜிதுல் நபவியின் தமது தோழர்களோடு மார்க்க சம்பந்தமான விடயங்களைப் பற்றி அளவளாவிக் கொண்டிருந்தார்கள். இடையில் ஓர் காட்டரபியும் வந்து அச்சபையில் உட்கார்ந்து பெருமானாரின் போதனைகளை கேட்டுக் கொண்டிருந்தார்.

போதனை முடிந்தது. அந்தக் காட்டரபி பெருமானரின் இருகரங்களையும் பிடித்து ஸலாம் கூறி விடைப் பெற்றுக் கொண்டார்.

அந்தக் காட்டரபியின் இரு கரங்களும் சொர சொரப்பாக இருப்பதை உணர்ந்த உத்தம நபியவர்கள், நண்பரே! உங்கள் கைகள் ஏன் இவ்வளவு கடினமாக இருக்கின்றன? என வினவவே, அந்த அரபி யாரசூலுல்லாஹ்! எனக்கு விவரம் தெரிந்த காலம் தொட்டே எனது இரு கரங்களினாலும் விறகு வெட்டி விற்று வாழ்க்கை நடத்தி வருகிறேன். அதனால்தான் எனது கைகள் கடினமாக இருக்கின்றன. என பதிலுரைத்தார். உடனே நபியவர்கள் அக்கரங்களை முத்தமிட்டார்கள்.

வழமைக்கு மாறாக அண்ணலார் அந்த மனிதரின் கைகளை முத்தமிட்டதோடு அவரை ஆரத்தழுவிக் கொண்டதை அவதானித்த அண்ணலாரின் அன்புத் தோழர்களுக்கு இக்காட்சி புதுமையாக இருந்தது. பெருமானரிடம் இது பற்றி வினவியபோது அவர்கள் கூறினார்கள். தோழர்களே! உழைக்கும் கரங்களே மேலானது, எனக்கு விருப்பமானது, அதனால்தான் அக்கரங்களை முத்தமிட்டேன். என்றார்கள்.

வாயில்லா ஜீவனை ஏமாற்றியது அவருக்கு பொறுக்கவில்லை

அல்குர் ஆனுக்கு அடுத்தபடியாக இன்று உலக முஸ்லிம்கள் இமாம் புஹாரி(ரஹ்) அவர்களின் ஸஹீஹுல் புகாரி எனும் கிரந்தத்தை மதிக்கின்றனர். இது பெருமானார் (ஸல்) அவர்களின் பொன்மொழிப் பேழை.

இமாமவர்கள் பெருமானாரின் பொன்மொழிகளைச் சேகரிக்க பல நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டார்.

ஒரு முறை இமாமவர்கள் பெருமானாரின் பொன்மொழிகளான ஹதீஸை சேகரிப்பதற்காக ஒரு ஊருக்குச் சென்றார். அவ்வூரிலுள்ள பெரியாரொருவரிடம் நிறைய ஹதீஸ்கள் இருப்பதாகக் கேள்விப் பட்டதால் சந்தோஷத்தோடு சிரமங்களையும் பொருட்படுத்தாது அப்பெரியாரின் வீட்டை அடைந்தார்.

இமாமவர்கள் பெரியாரின் வீட்டை அண்மியபோது அவர் கையில் ஒரு பையை வைத்துக் கொண்டு தமது ஒட்டகத்தை அழைத்துக் கொண்டிருந்தார். பையில் இருக்கும் உணவை உண்ண எண்ணி நெருங்கிய அந்த ஒட்டகம் அது வெற்றுப்பை என்றறிந்ததும் ஏமாற்றத்தோடு திரும்பிச் சென்றது.

இந்தக் காட்சியைக் கண்ட இமாமவர்களுக்கு ஆத்திரம் தாங்க முடியவில்லை. வாயில்லா ஜீவனை ஏமாற்றும் இவர் பெரியாரல்லர், பெரும் ஏமாற்றுக்காரர். இவரிடம் நிச்சயமாக உண்மையான ஹதீஸ்கள் இருக்காது என எண்ணியவர்களாக அவரிடம் எதுவிதமான ஹதீஸ்களையும் பெறாமலேயே வீடு திரும்பினார்கள்.

இதனாலே இமாமவர்களின் புஹாரி எனும் ஹதீஸ் கிரந்தம் உண்மையான பெருமானார் (ஸல்) அவர்கள் பொன்மொழிகள் அடங்கிய கிரந்தமாக முஸ்லிம் பெருமக்களால் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

வேலையாளைப் பிரமிக்க வைத்த மாமன்னர்

அரசராக இருந்தும் மிகவும் எளிமையான வாழ்க்கையையே வாழ்ந்து இஸ்லாத்தின் வழி நடந்த சிறப்பு மிக்க கலீபாக்களுள் ஹஸரத் உமர்பின் அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் பிரபலமானவர்கள். இவர்கள் காலத்தில் ஆடுகளும் ஓநாய்களும் கூட ஒற்றுமையாக வாழ்ந்ததாக சரித்திர ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அன்று இரவு கடும் வெப்பம், கலீபா அவர்கள் உறங்கிக் கொண்டிருந்தார்கள். அன்னாரின் வேலையாள் விசிறியால் காற்று விசிறிக்கொண்டிருந்தான். சிறிது நேரத்தில் வேலையாள் அசதியால் தன்னை அறியாது உறங்கி விட்டான். இடையில் விழித்துக் கொண்ட கலீபா அவர்கள் வியர்த்துக் கொட்ட உறங்கிக் கொண்டிருந்த வேலையாளின் கையிலிருந்த விசிறியை மெதுவாக எடுத்து அவனுக்கு விசிறத் தொடங்கினார்கள்.

சிறிது நேரத்தில் வேலையாள் கண் விழித்தான். கலீபா அவர்கள் தனக்கு விசிறிக் கொண்டிருப்பதைக் கண்டு திடுக்கிட்டான். மாமன்னரான தாங்கள் எனக்கு விசிறுவதா? நான் தெரியாமல் தூங்கி விட்டேன். மன்னியுங்கள். என மன்னரை வேண்டி நின்றான்.

கலீபா அவர்கள் சொன்னார்கள்.: இதோ பார், பதற்றமடையாதே நீயும் என்னைப் போல் ஒரு ஜீவன் தான். வெப்ப மிகுதியால் எனக்கு வியர்த்த போது நீ விசிறினாய். உனக்கு வியர்த்த போது நான் விசிறினேன். இதில் என்ன தவறிருக்கிறது? ஒருவருக்கொருவர் உதவி ஒத்தாசை புரிவதில் எனக்கும் உனக்கும் வேறுபாடிருப்பதை நான் விரும்பவில்லை.

தோழர்களுக்கு உதவ, விறகுவெட்டப் போன அண்ணலார்

பெருமானார் (ஸல்) அவர்கள் தமது தோழர்களை சமமமாகவே நடத்தினார்கள். அவர்களுக்கிடையில எதுவித பாகுபாடும் காட்டமாட்டார்கள். இதனாலே அன்னாரின் அருமைத் தோழாகள் அண்ணலார் மீது தமது உயிரையே வைத்திருந்தார்கள்.

ஒரு முறை அண்ணலார் தமது தோழர்கள் சகிதம் பயணம் மேற்கொண்டிருந்தார்கள். இடையில் சாப்பாடு தயாரிக்க தோழர்கள் ஆயத்தமானார்கள். ஆளுக்கொரு வேலையாக பொறுப்பேற்றுக்கொண்டார்கள்.

ஒரு தோழர் கடைக்குச் சென்று சாமான் கொண்டுவர ஆயத்தமானார். இன்னொருவர் ஆட்டை அறுத்து சமையல் செய்ய ஆயத்தமானார். மற்றவர் ரொட்டி சுடும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். பெருமானார் (ஸல்) அவர்களோ தான் காட்டிற்குச் சென்று விறகு வெட்டி வருவதாகக் கூறி அதற்கு ஆயத்த மானார்கள். தோழர்கள் அதைத்தாங்களே செய்வதாகவும் விறகு வெட்டும் வேலை கடினமானதென்றும் கூறி அண்ணலாரை ஓய்வாக இருக்கும்படி வேண்டிக் கொண்டார்கள்.

எனினும் பெருமானார் (ஸல்) அவர்கள் அதற்கு இணங்கவில்லை உங்களில் ஒருவனாக இருக்கவே நான் விரும்புகிறேன். என் தோழர்களுக்கிடையில் நான் உயர்ந்தவனாக இருக்க விரும்பவில்லை. எனக்கூறி காட்டிற்குச் சென்று விறகு வெட்டி வந்து சமையல் செய்வதற்கு தன் தோழர்களுக்கு உதவினார்கள் காருண்ய நபியவர்கள்.

எளிமையின் நாயகரான நபியவர்கள் எப்பொதும் தமது சகாக்களுடன் தரையில் சமமாகவே அமர்ந்திருப்பார்கள்.

அண்ணலாரின் பாதத்தில் சிறு முள் கூட தைப்பதைச் சகியாத தோழர்கள்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மீது அன்னாரின் அன்புத் தோழர்கள் உயிரையே வைத்திருந்தார்கள். பெருமானாரின் புனித பாதங்களில ஒரு சிறு முள்தைப்பதைக்கூட தோழர்கள் விரும்பவில்லை. அன்னாரைக் காணாவிடின் அன்றைக்கு உணவோ உறக்கமோ கொள்ள மாட்டார்கள் உத்தம ஸஹாபாக்கள்.

ஒரு முறை நபித் தோழர் ஜைத் இப்னு வஸனா (ரலி) அவர்களை அபூசுப்யான் தூக்கிலிட முற்பட்ட போது அன்னாரை நோக்கி உமக்கு விடுதலை அளித்து விட்டு அதற்குப் பதிலாக உமது தோழர் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு தண்டனை அளிப்பதை நீர் விரும்புகிறீரா? என வினவினார். அதற்கு அந்த நபித் தோழர் அல்லாஹ்வின் மீது ஆணையாக ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தனது இருப்பிடத்திலிருக்கும் போது அன்னாரின் மேனியில் ஒரு முள் தைத்தால் கூட நான் என் வீட்டில் சுகமாக இருப்பதை விரும்பமாட்டேன். என்று கூறினார்கள்.

அப்போத அபூ சுப்யான், முஹம்மது (ஸல்) அவர்கள் மீது அவருடைய தோழர்கள் வைத்திருக்கும் அன்பைப்போன்று யாரும் எவர்மீதும் அன்பு வைத்திருக்க நான் கண்டதில்லை. என்றார். இவர் மக்கா வெற்றியின் பின்னர் புனித இஸ்லாத்தைத் தழுவினார்.

இதனாலே அலி (ரலி) அவர்கள் அல்லாஹ்வின் மீது சத்தியமாக அண்ணல் நபி (ஸல்) அவர்கள் எங்களுடைய பொருள்கள், குழந்தைகள், தாய்மார்கள் அனைவரைவிடவும் கடுமையான தாகத்தின்போது கிடைக்கும் குளிர்ந்த நீரை விடவும் எங்களுக்குப் பிரியமானவர்களாக இருந்தார்கள். எனக் கூறியுள்ளார்கள்.

ஊனங்கள் உள்ளதாக கூறப்பட்ட பெண் குறையற்ற அழகியாக மாறியது எப்படி?

பெரியார் அபூஸாலி (ரஹ்) அவர்கள் ஒரு நாள் ஆற்றங்கரையோர மாகச் சென்று கொண்டிருந்தார். களைப்புமிகுதியால் தண்ணீர் அருந்த ஆற்றுக்குச் சென்ற அவர் ஆப்பிள் பழம் ஒன்று ஆற்றில் மிதந்துவருவதைக் கண்டு பசியின் காரணமாக அதை எடுத்து உண்டுவிட்டார்.

பேணுதல் மிகுந்த அந்தப் பெரியார் சொந்தக்காரனுக்குத் தெரியாமல் அவர் அனுமதியின்றி அப்பழத்தைப் புசித்தது பற்றி கவலையுற்று சொந்தக்காரனை நேரில் கண்டு மன்னிப்புக்கோர வேண்டும் என்ற நோக்கத்தோடு ஆற்றின் ஓரமாக நடந்து சென்றார்கள்.

ஆப்பிள் பழத்தோட்டக்காரரைச் சந்தித்த அப்பெரியார் தான் தவறுதலாக ஆற்றில் மிதந்து வந்த ஆப்பிள் பழத்தை பசியின் காரணமாக சாப்பிட்டுவிட்டதாகவும் அதற்குப் பதிலாக தான் எதை வேண்டுமனாலும் செய்யத்தயார் என்றும் தோட்டத்து உரிமையாளரை வேண்டி நின்றார்.

பெரியாரின் நேர்மையை உணர்ந்த தோட்ட உரிமையாளர் தோட்டத்தில் சிறிது காலம் வேலை செய்யும்படி உத்தரவிட்டார். தவணைக் காலம் முடிவுற்றதும் பெரியார் தோட்டத்து உரிமையாளரிடம் விடை கோரி நின்றார். அவருக்கோ இந்த நல்லவரை விட மனமில்லை.

எனவே நீர் செய்த குற்றத்திற்கு இது போதாது. உன்னை நான் மன்னிக்க வேண்டுமெனின் எனது மகளை நீர் மணந்து கொள்ள வேண்டும். ஆனால் என் மகளோ கால், கையற்ற முடம், கண்ணில்லாத குருடி, அத்தோடு வாயும் பேசமாட்டாள். என தோட்டத்துக்காரர் சொன்னார்.

எப்படியாவது இவர் என்னை மன்னித்தால் சரி என்று எண்ணிய அந்தப் பெரியார் அதற்கு உடன்பட்டார். திருமணமும் நடைபெற் றது. எனினும் தனது மாமனார் கூறியது போலல்லாது தனது மனைவி எது வித குறைவுமற்ற அழகியாக இருப்பதைக்கண்ட பெரியவர் வியப்புற்றார். இதுபற்றி மாமனாரிடம் விபரம் கேட்ட போது அவர் சொன்னார்.

மகனே! எனது மகள் தனது கரங்களால் எதுவித தீயகாரியங்களை யும் செய்ததில்லை. கால்களால் எந்த பாவமான காரியங்களு க்காகவும் நடந்து சென்றதில்லை. எனவேதான் அவள் முடமென்று சொன்னேன். அவள் தனது கண்களால் எந்தக்கெட்ட செயலையும் கண்டதில்லை. எனவேதான் அவள் குருடி என்றேன். அவள் தன் வாயால் நல்ல வார்த்தைகளை த்தவிர வேறெதுவும் பேசமாட்டாள். இதனால் தான் அவள் ஊமை என்றேன் இத்தகைய குணமுள்ள ஒருவளை உங்களைப் போன்ற குணசாலிக்கு மணமுடித்து வைத்ததில் எனக்கு பரம திருப்தி எனக் கூறினார் மாமானார். இந்த தம்பதியினரின் அருமைப் புதல்வரே மகான் குதுபுல் அக்தாப் முஹியித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்களாவர்.

கடன் கொடுத்தவனின் தகாத நோக்கம்

பெருமானார் (ஸல்) அவர்கள் ஏழை எளியவர்கட்கு உதவுவதில் எப்போதும் முன்னணியில் நின்றார்கள். அன்னார் இரவு படுக்கைக்குச் செல்லும் போது ஒரு திர்ஹம் கையிலிருந்தாலும் அதை தர்மம் செய்யும் வரை தூங்கவே மாட்டார்கள். தன்னிடம் பொருள் இல்லாவிட்டால் பிறரிடம் கடனாக வாங்கியாவது இல்லாதவர்க்கு கொடுத்துதவுவார்கள்.

ஒரு முறை பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு யூதனிடம் கடன் வாங்கியிருந்தார்கள். கடன் தொகையைத் திருப்பிக் கொடுக்கும் தவணை முடியுமுன்னரே யூதன் பெருமானாரை அவமானப்படுத்தும் நோக்கத்துடன் கடனைத் திருப்பிக் கேட்டு காரசாரமாகப் பேச ஆரம்பித்தான். அமைதியின் பிரபமான அண்ணலார் எதுவும் பேசவில்லை. பக்கத்திலிருந்த தோழர் உமர் (ரலி) அவர்களுக்கு யூதனின் வார்த்தை கோபத்தை ஊட்டியது. அவனைத் தாக்க முற்பட்டார்.

பெருமானார் (ஸல்) அவர்கள் உடனே உமர் (ரலி) அவர்களை நோக்கி உமரே அந்த யூதனுக்கு எந்தவகையிலும் என்னிடம் பணத்தைக் கேட்க உரிமையுண்டு. அந்த யூதரின் பணததை திருப்பிக் கொடுக்கும்படி என்னை நீர் ஏவுவதே சரியான முறை என்று கூறி யூதனை சமாதானப் படுத்தி அனுப்பினார்கள். அண்ணலாரின் இனிய பண்பை உணர்ந்த அந்தக் கடன்காரன் தவணை முடிந்து வருவதாகக் கூறி விடை பெற்றான்.

மரநிழலில் நிம்மதியாக உறங்க மாமன்னருக்கு எப்படி முடிந்தது?

இஸ்லாத்தின் இரண்டாவது கலீபா ஹஸரத் உமர் இப்னு கத்தாப் (ரஹ்) அவர்கள் நீதியின் தலைவராவர். குடிமக்களின் காலடிக்கே சென்று அவர்களின் குறை அறிந்து உடன் நிவாரணம் வழங்குவார். இவரது ஆட்சிக்காலத்தில் மக்கள் மகிழ்ச்சியோடு வாழ்ந்தார்கள்.

ஒரு முறை பிறநாட்டு தூதுவரொருவர் கலீபா அவர்களைக்காண தனது பாதுகாவலர்களோடு மதீனா நகருக்க வந்தார். அவ்வேளை கலீபா உமர் (ரலி) அவர்களோ மரநிழலில் வெறும் தரையில் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தார். கலீபா அவர்களை இனங் கண்டு கொண்ட தூதுவருக்கோ ஆச்சரியம் தாளவில்லை. ஆடம்பரமில்லாத ஒரு முரட்டுத் துணியை அணிந்து கொண்டு எதுவித பாதுகாப்புமின்றி உறங்கும் இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் தலைவனின் ஏழ்மைக்கோலம் தான் தூதுவரின் வியப்புக்குக் காரணமாக அமைந்தது.

விழித்தெழுந்த கலீபா அவர்களைப் பார்த்து தூதுவர் கூறினார்.

அமீருல் முஃமினீன் (விசுவாசிகளின் தலைவரே) நிச்சயமாக நீங்கள் நல்லாட்சியாளர். தாங்கள் நீதியான அரசு நடத்துகிறீர்கள். என்பதற்கு இது ஒன்றே போதுமான சாட்சி. இல்லையெனில் தாங்கள் இவ்வாறு நிம்மதியாக உறங்க முடியாது. உங்களுக்கு எதிரிகள் இருக்க முடியாது. உங்கள் ஆட்சியில் ஊழல்கள் இருந்தால் மக்கள் தங்களை இவ்வாறு நிம்மதியாக இருக்க விடுவார்களா? கலீபா அவர்கள் புன்முறுவல் பூத்தார்கள் நாட்டின் தலைவன் நல்ல முறையில் ஆட்சி செய்வதாயின் அவனுக்கு எதற்கு பாதுகாப்பும் படாடோபமும் என்பதுதான் கலீபாவின் புன்முறுவலின் அர்த்தமோ? இந்தச் சம்பவம் இன்றைய ஆட்சியாளர்களுக்கு ஒரு நல்ல உதாரணமாகும்.

மரணப்பிடியில் சிக்கிய கொடிய அரசனை மன்னித்து விடுவித்த கருணை வள்ளல்

இப்னு ஆஸல் எனும் அரசன் இஸ்லாத்தின் பரம எதிரியாவான். அவ்வரசன் இஸ்லாத்தை பின்பற்றுபவர்களை கொலை செய்தும் கொடுமை செய்தும் வந்தான். அத்தோடு. அண்ணலாரையும் அவதூறுகள் கூறி அவமதித்து வந்தான்.

ஒரு முறை நபித்தோழர்கள் நஜ்து எனும் வழியாக பயணம் செய்து கொண்டிருந்தனர். அவ்வேளை அவ்வரசனை சிறைப்பிடித்து வந்து மதீனா பள்ளியில் தூணொன்றில் கட்டி வைத்து இது பற்றி அண்ணலாருக்கு அறிவித்தனர். இச்செய்தி கேட்டு அங்கு வந்த அண்ணலர் அவ்வரசனை அணுகி நான் உம்முடன் எவ்வாற நடந்துகொள்ள வேண்டுமென நீர் விரும்புகிறீர் என வினவினார்கள்? அதற்கு அவ்வரசன் தாங்கள் என்னைக் கொன்று விட வேண்டுமென விரும்பினால் அது நியாயமானதாகும். அவ்வாறன்றி என்னைத் தாங்கள் மன்னித்து விட்டால் நான் மிக நன்றியுடையவனாக இருப்பேன். என்றான்.

பெருமானார் (ஸல்) அவர்கள் அவ்வரசனை ஒரு கைதியைப் போலல்லாது ஒரு விருந்தாளியைப் போல உபசரித்து தனது கைகளாலேயே அந்தக் கைதியின் கட்டை அவிழ்த்து விட்டனர். பெருமானாரின் மன்னிக்கும் மனப்பான்மையைக் கண்ட அம்மன்னன் உடன் அன்னாரின் கரம்பற்றி புனித இஸ்லாத்தைத் தழுவினான்.

அத்தோடு அண்ணலாரை நோக்கி அல்லா(ஹ்)வின் தூதரே। அன்று எனக்கு வெறுப்பூட்டிய தங்களது திருமுகம் இன்று எனக்கு மிக உவப்பாக இருக்கிறது. தங்களது சாந்தி மார்க்கம் எனக்கு மனச்சாந்தி அளிக்கிறது. என்றான்.

தாம் பசித்திருந்து தம் உணவை ஏழைக்கு அளித்து மகிழ்ந்த தம்பதியர்

ஒரு முறை ஓர் ஏழை மனிதர் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் சமூகத்திற்கு வந்து தனது ஏழ்மை நிலையை விவரித்துக் கூறினார். அன்றிரவு அவருக்கு உணவளிக்க யார் தயார்? என அண்ணலார் தனது தோழர்களை வினவினர். ஒரு நபித்தோழர் அதற்கு ஒப்புக்கொண்டார்.

விருந்தாளியுடன் தனது இல்லம் வந்தடைந்த அந்த நபித்தோழர் தனது மனைவியிடம் சாப்பிடுவதற்கு என்ன இருக்கின்றது என வினவினார். மனைவியோ இரகசியமாக கணவரிடம் இன்று சாப்பிடுவதற்கோ ஒன்றுமில்லை. பிள்ளைகள் இருவருக்கும் மட்டும் ஒரு ரொட்டி இருக்கிறது. வேண்டுமானால் அதை விருந்தாளிக்கு கொடுக்கலாம். என்றார்.

உடன் அந்த நபித்தோழர் தன் மனைவிக்கு ஒரு உபாயம் கூறினார். இருக்கும் ரொட்டி ஒருவருக்கு உண்ணத்தான் போதுமானது. எனவே பிள்ளைகளை சமாதானப்படுத்தி உறங்கவையும். விருந்தாளி தனியாக சாப்பிட மாட்டார். எனவே ஒரு பாத்திரத்தில் ரொட்டியைப் போட்டுத்தாரும். விருந்தாளி சாப்பிட ஆரம்பித்ததும் விளக்கை அணைத்து விடும்.. நான் சாப்பிடுவது போல் பாசாங்கு செய்கிறேன். முழு ரொட்டியையும் விருந்தாளியே உண்ணட்டும் என்றார். அவ்வாறே நபித்தோழரின் மனைவியார் விளக்கை அணைத்துவிடவே விருந்தாளி வயிறு நிறைய உணவு உண்டார். நபித்தோழர் உண்பது போல் பாசாங்கு செய்து எல்லா உணவையும் விருந்தாளிக்கே உண்ணக்கொடுத்தார். அவரும் உண்டு விட்டு நன்றி கூறி விடை பெற்றார்.

தம்பதியர் இருவரும் அன்றிரவு வெறும் தண்ணீரை மட்டும் குடித்துவிட்டு பெருமானாரின் விருந்தாளியை உபசரித்ததில் மன நிறைவு கொண்டு படுக்கைக்குச் சென்றனர். தனது தேவையைவிட தனது சகோதரரின் தேவைக்கு முன்னுரிமை கொடுக்கும்படி இஸ்லாம் எமக்குப் போதிக்கிறது.

தன்னலம் கருதா மன்னர் பெருமை!

ஒரு முறை அரசர் ஹஸரத் உமர் (ரலி) அவர்களின் சமூகத்திற்கு பஹ்ரைன் நாட்டிலிருந்து கொஞ்சம் கஸ்தூரி வந்திருந்தது. அதனை நிறுத்து குடிமக்களுக்கு பங்கிட்டு கொடுக்க யார் தயார்? என அவர்கள் அறிவித்தல் கொடுக்கவே, அவர்களின் மனைவியார் அதற்கு உடன்பட்டு முன் வந்தார்.

எனினும் அதை தனது மனைவி செய்வதை கலீபா அவர்கள் விரும்பவில்லை. மனைவி காரணத்தை வினவியபோது அவர்கள் மனைவியைப் பார்த்து சொன்னார்கள்.

நீ கஸ்தூரியை உன் கையால் எடுத்து தராசில் வைப்பாய். பிறகு அந்தக்கையை உன் உடலிலோ உடையிலோ தடவிக்கொள்வாய். அப்படிச் செய்யும் போது கஸ்தூரியில் என் பங்கு அதிகப்படுகிறது. அப்படி ஏற்படுவதை நான் விரும்பவில்லை.

கஸ்தூரியை எவர் தொட்டாலும் மணக்கவே செய்யும். இது தவீர்க்க முடியாதது. எனினும் தனது மனைவி அதைத் தொடுவதை அன்னார் விரும்பவில்லை. இது அவர்களின் உன்னதமான பேணுதலையே காட்டுகிறது.

இரண்டாவது உமர் எனப் புகழப்படும் உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்களின் ஆட்சியின் போது ஒரு தடவை கஸ்தூரி நிறுக்க வேண்டிய நிலை ஏற்பட்டபோது நாசியை துணியால் இறுகக் கட்டியவர்களாக அதனை நிறுத்தார்கள். வாசனைத்திரவியமான கஸ்தூரியின் மணத்தை நுகர்வதும் அதனால் பெறப்படும் பலனாகும் என அவர்கள் கூறினார்கள்.

பெருமானாரின் பல் உடைந்ததை அறிந்ததும் தன் பற்களை உடைத்தெறிந்த பெரியார்।

ஹஸரத் உவைசுல் கரனி (ரஹ்) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்கள் காலத்தில் வாழ்ந்தாலும் பெருமானாரை காணும் பேற்றை அடையவில்லை. காரணம் அவர்கள் மதீனாவிலிருந்து வெகு தொலைவில் வாழ்ந்ததும் தனது வயது முதிர்ந்த தாய்க்கு அன்னாரைத் தவிர வேறு எவரும் உதவிக்கு இல்லாததுமாகும். எனினும் இவர்கள் அண்ணலார் மீது உயிரையே வைத்திருந்தார்கள்.

ஒரு முறை உஹத் போரின் போது பெருமானாரின் பற்கள் உடைந்ததைக் கேள்விப்பட்ட இப்பெரியார் தனது முன் பற்களை உடைத்துக்கொண்டார். எனினும் பெருமானாரின் எந்தப் பற்கள் உடைந்தது என்பதை இவரால் சரியாக அறிந்து கொள்ள முடியாததால் தனது அத்தனை பற்களையும் உடைத்தெறிந்து விட்டார்கள்.

இவரைப் பற்றி பெருமானார் (ஸல்) அவர்கள் பிரஸ்தாபிக்கையில், உவைஸ் நாயகத்தோழர்களில் சிறந்த தோழர் (கைருத்தாபியீன்) என புகழ்ந்தார்கள். அத்தோடு கலீபா உமர் (ரலி) அவர்கள் மூலமாக அன்னாருக்கு ஸலாமும் கூறி அனுப்பினார்கள்.

தனது தாயாருக்கு பணிவிடை செய்ய வேண்டியிருந்ததால் தன்னைக் காண அன்னாருக்கு வர முடியாத நிலை ஏற்பட்டிருப்பதை அறிந்த அண்ணலார் அவர் மீது அன்புபூண்டு அவருக்கு அருள் புரியுமாறு அல்லா(ஹ்) வை வேண்டினார்கள்.

பற்றாக் குறைத் துணியில் அரசர் ஆடை தைத்துக் கொண்டது எப்படி?

கலீபா ஹஸரத் உமர் இப்னு கத்தாப் (ரலி) அவர்களின் ஆட்சிக் காலத்தில் பொது நிதியத்திற்கு அன்பளிப்பாக சில துணிகள் கிடைத்தன. அதைக் கலீபா அவர்கள் பொதுமக்களுக்கு சமமாக பங்கு போட்டுக் கொடுத்து தானும் அதே அளவு பெற்றுக் கொண்டார்கள். எனினும் பங்கிடப்பட்ட துணி எவருக்கும் ஆடை தைத்துக்கொள்ள போதுமானதாக இருக்கவில்லை.

ஒரு நாள் வெள்ளிக்கிழமை கலீபா அவர்கள் மேடை மீது ஜும்ஆ பிரசங்கம் நிகழ்த்திக் கொண்டிருந்தார்கள். அமைதியாக பிரசங்கத்தை கேட்டுக் கொணடிருந்த மக்கள் மத்தியில் இருந்து ஒருவர் திடீரென எழுந்து கலீபா அவர்களே! உங்கள் பிரசங்கத்தை நிறுத்துங்கள். நீங்கள் நீதியாளரென்றால் என் கேள்விக்குப் பதில் சொல்லுங்கள் என்றார்.

கலீபா அவர்கள் தடுமாற்றமடையவில்லை. தோழரே! உமது கேள்வியென்ன? என அமைதியாக வேண்டினார்கள்.

தோழர் கூறினார். கலீபா அவர்களே தாங்கள் எமக்கு பங்கிட்டுக் கொடுத்த துணி எம்மில் எவருக்கும் உடைதைக்க போதியதாக இல்லாதிருக்கும் போது தாங்கள் மாத்திரம் எவ்வாறு அந்தத் துணியால் முழு உடை தைத்து அணிய முடியும்? அப்படியாயின் எமது பங்கைவிட நீங்கள் கூடுதலாகப் பெற்றிருக்கிறீர்கள் அல்லவா? இது நியாயமல்லவே.

அதற்கு கலீபா அவர்கள், எனது மகன் அப்துல்லாஹ் இப்னு உமர் இதற்குப் பதில் கூறுவார் என்றார்கள்.

கலீபாவின் மகன் அப்துல்லா கூறினார். எனது தகப்பனாருக்கு கிடைத்த துணி உடை தைக்க போதாததால் எனக்குக் கிடைத்த துணியையும் நான் அவருக்குக் கொடுத்து இரண்டையும் சேர்த்து உடை தைத்துக்கொள்ளச் சொன்னேன். இது தவறல்லவே. இதைக் கேட்ட அந்தத் தோழர் திருப்தி அடைந்தார். ஜும்ஆ பிரசங்கம் தொடர்ந்தது.

ஏழையின் கன்னத்தில் அறைந்த மன்னரை மன்னிப்புக் கேட்க வைத்த கலீபா!

புனித ஹஜ்ஜுக்காலம். கலீபா உமர் (ரலி) அவர்களின் கிலாபத் ஆட்சி நடந்து கொண்டிருந்தது. பக்கத்து நாட்டு மன்னர் ஜபலா என்பவரும் ஹஜ்ஜுக்கு வந்திருந்தார்.

மன்னர் ஜபலா, புனித க:.பாவை வலம் வந்துகொண்டிருந்த போது மன்னரின் பின்னால் வந்து கொண்டிருந்த ஏழை மனிதர் ஒருவர் தவறுதலாக மன்னரின் கீழே தொங்கிக் கொண்டிருந்த அங்கியை மிதித்து விடவே திரும்பிப்பார்த்த மன்னர் அந்த ஏழையின் கன்னத்தில் பலமாக அறைந்து விட்டார். உடனே அவ்வேழை இது பற்றி கலீபா அவர்களிடம் முறையிட்டார்.

மன்னரிடம் இது பற்றி விசாரித்தபோது புனித ஸ்தலமானதால் நான் அத்தோடு நிறுத்திக் கொண்டேன். இல்லையெனில் இதைவிட கடுந்தண்டனை கொடுக்கத் தவறியிருக்க மாட்டேன். என்றார் மன்னர் இறுமாப்புடன்.

கலிபா அவர்கள் கூறினார்கள் தவறுதலாக ஏற்பட்ட இந்தச்செயலுக்கு நீங்கள் அந்த நபரின் கன்னத்தில் அறைந்தது குற்றமாகும். எனவே அந்த நபரிடம் நீங்கள் மன்னிப்புக் கேளுங்கள் என்றார்கள்.

மன்னர் இவ்வாறான தீர்ப்பை எதிர்பார்க்கவில்லை. கலீபா அவர்களே நானோ ஒரு நாட்டின் அரசர். இவனோ சாதாரண ஏழை. நீங்கள் தராதரம் பாராது இவ்வாறுதான் நீதி வழங்குவதா? என கோபமாகக் கூறினார். கலீபா அவர்கள் சொன்னார்கள். அரசனுக்கொரு நீதி ஆண்டிக்கொரு நீதி என்ற நியதி .இஸ்லாத்தில் இல்லை. ஆண்டவன் முன் எல்லோரும் சமமே. நீங்கள் அவ்வேழையிடம் மன்னிப்புக் கேட்காவிட்டால், நீங்கள் கொடுத்த அடியை இவனிடமிருந்து திரும்பப் பெற நேரிடும். இது தான் நீதிபதியான எனது தீர்ப்பாகும் என்றார்கள்.

வேறு வழியின்றி மன்னர் ஜபலா அந்த ஏழையிடம் மன்னிப்புக் கோரினார்.

எதிரியைக் கொல்ல எளிதாக சந்தர்ப்பம் கிடைத்தும் கலீபா அவனை மன்னித்தது ஏன்?

ஒரு முறை இஸ்லாத்தின் நான்காவது கலீபா ஹஸரத் அலி (ரலி) அவர்கள் இஸ்லாத்தின் எதிரி ஒருவனுடன் போர் செய்து கொண்டிருந்தார். கடுமையான போர், இறுதியில் எதிரி கீழே விழுந்து விட்டான். அவன் கையிலிருந்த வாளும் நழுவி விட்டது.

அவன் மார்பின் மீது உட்கார்ந்து கொண்ட அலி (ரலி) அவர்கள் அவனை நோக்கி வாளால் ஓங்கியபோது அவன் செய்வதறியாது கலீபா அவர்களின் முகத்தில் காறி உமிழ்ந்தான்.

உடனே கலீபா அவர்கள் அவனை எதுவும் செய்யாது எழுந்து நின்று உருவிய வளை உறையிலிட்டு முகத்தில் படிந்த உமிழ்நீரை துடைத்துக்கொண்டார்கள். இந்தச் சம்பவம் எதிரிக்கு வியப்பையூட்டியது.

வீரர் (அலி) அவர்களிடமிருந்து தப்புவெதன்பது இலேசான காரியமல்ல. எனவே அவன் கலீபா அவர்களை நோக்கி நான் கடும் போர் புரிந்தும், தங்கள் முகத்தில் உமிழ்ந்தும் எனக்கு தாங்கள் தண்டனை அளிக்கவில்லை. காரணம் என்ன? என வினவினான். கலீபா அவர்கள் பதில் கூறினார்கள்.

நான் உன்னோடு சன்மார்க்கத்திற்கான புனித போர்தான் செய்தேன். உன்னை எளிதாகக் கொல்வதற்கு எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. எனினும் என் முகத்தில் உமிழ்ந்ததால் நான் உன்னைக் கொன்றால் என்னை இழிவு படுத்தியதற்காக நான் உன்னைக் கொன்றதாக ஆகிவிடும். அதனால் புனிதப் போரின் நோக்கமே மாசுபடும் எனவே உன்னை மன்னித்தேன். என்றார் கலீபா அவர்கள்.

அசுத்தம் செய்தவனை மன்னித்து தாமே சுத்தம் செய்த அன்பு நபி

பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு முறை தமது தோழர்களோடு மஸ்ஜிதுன் நபவியில் உரையாடிக் கொண்டிருந்தார்கள். அவ்வேளை அங்கு திடீரென வந்த காட்டரபி ஒருவன் மஸ்ஜிதில் சிறுநீர்கழித்துக் கொண்டிருந்தான்.

இதனைக் கண்ட நபித்தோழர்களுக்கு ஆத்திரம் தாளவில்லை. புனித ஸ்தலத்தில் சிறுநீர் கழிப்பதா? என ஆவேசங்கொண்டு அந்தக் காட்டரபியை தாக்க முற்பட்டார்கள்..

பெருமானார் (ஸல்) அவர்களோ அமைதியாக இருக்குமாறு தனது அன்பர்களை வேண்டினார்கள்.

காட்டரபி சாவதானமாக சிறுநீர் கழித்து முடிந்ததும். பெருமானார் அவர்கள் அவனைக் கூப்பிட்டு நண்பரே! இது மலசலம் கழிக்கும் இடமல்ல. இது அல்லா(ஹ்)வின் வீடு. இனிமேல் அவ்வாறு செய்ய வேண்டாம். என அன்புடன் கூறி அந்தக் காட்டரபி சிறுநீர் கழித்த இடத்தை தண்ணீர் ஊற்றி சுத்தம் செய்தார்கள்.

இவ்வாறே மதீனாவில் பள்ளியில் பெருமானாரிடம் இரவு விருந்துண்டு உறங்கிய ஒருவர் இரவு பள்ளியில் மலம் கழித்துச் செல்ல பெருமானார் அவர்கள் ஒன்றும் பேசாது தாமே அதனை அப்புறப்படுத்தி சுத்தம் செய்தார்கள். பாவம் அந்த விருந்தாளிக்கு இரவில் வயிற்றுக் கோளாறு ஏறபட்டிருக்கலாம். அதனால்தான் இந்நிலை ஏற்பட்டிருக்கிறது. என அனுதாபப் பட்டார்கள் அன்பு நபியவர்கள்.

தவறுக்கு பிராயச்சித்தமாக தன்னைத் தானே சாட்டையால் அடித்துக் கொண்ட மன்னர்

மன்னர் கலீபா ஹஸரத் உமர் (ரலி) அவர்கள் ஒருமுறை ஏதோ முக்கியமான வேலையொன்றில் ஈடுபட்டிருந்தார்கள். அவ்வேளை ஒருவர் வந்து கலீபா அவர்களே! எனக்கு ஒருவர் அநீதி இழைத்துவிட்டார். அதனை விசாரித்து தாங்கள் எனக்கு நீதி வழங்க வேண்டும். என வேண்டி நின்றார்.

அதனைக் கேட்ட கலீபா அவர்கள் கோபமுற்றவராக நான் அதற்கென ஒதுக்கியிருக்கும் நேரத்தை தவிர்த்து இந்த நேரத்தில் வந்து எனக்கு இடைஞ்சல் கொடுக்கிறீரே என்று கூறி தனது கையிலிருந்த சாட்டையால் அந்த மனிதரை அடித்து விரட்டி விட்டார்.

சிறிது நேரத்தில் அவர்களின் கோபம் தணிந்து, ஐயோ! நான் என்ன காரியம் செய்து விட்டேன். நீதி கேட்டு வந்தவருக்கு நானே அநீதி இழைத்து விட்டேன் என மன வேதனைப்பட்டு அந்த நபரை மீண்டும் அழைத்து வரும்படி ஒரு ஆளை அனுப்பிவைத்தார்கள்.

அம்மனிதர் வந்ததும் கலீபா அவர்கள் தம் கையிலிருந்த சாட்டையை அவரிடம் கொடுத்து நான் உம்மை அடித்தது போன்று சாட்டையால் என்னையும் அடி என்று வேண்டி நின்றார்கள்.

வந்தவர் அல்லா(ஹ்)வுக்காக நான் தங்களை மன்னித்து விட்டேன். என்று கூறி சாட்டையை மீண்டும் கலீபா அவர்களிடம் ஒப்படைத்தார். எனினும் கலீபா அவர்களின் உள்ளம் அமைதியுறவில்லை. அல்லா(ஹ்)வைத் தொழுது விட்டு தான் அவசரப்பட்டுச் செய்த தவறுக்காக தன்னைத் தானே சாட்டையால் பல முறை அடித்துக் கொண்டார்கள்.

கல்லால் அடித்து இழிவு செயதவர்களையும் அழிவில் இருந்து காத்த காருண்ய நபி

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் சன்மார்க்கப் போதனைக்காக தாயிப் நகருக்குச் சென்ற போது தாயிப் நகரவாசிகள் அன்னாரின் போதனையை ஏற்காது இழிவாகப் பேசியதோடு சிறுவர்களை கல்லால் அடிக்கும் படியும் ஏவினார்கள். இதனால் அந்தப் புனிதரின் பொன்மேனி காயப்பட்டு இரத்தமும் வழிந்தோடியது.

இதனால் மனம் நொந்து மாநபி அவர்கள் மலையடிவாரமொன்றில் நின்றபோது வானவர் கோமான் ஜிப்ரில் (அலை) அவர்கள் முன்தோன்றி தங்களுக்கு இத்தனை இன்னல்களை விளைவித்து அவமானப்படுத்திய இந் நகரவாசிகளுக்கு தகுந்த தண்டனை கொடுக்க வேண்டாமா? அல்லா(ஹ்)வின் வல்லமையால் இந்த ஊர் மக்கள் அனைவரையும் நசுக்கி அழித்து இந்த ஊரையும் நாசமாக்கி விடவா? என்று வினவினார்கள்.

அதற்கு நபியவர்கள், இவர்கள் எனது போதனையை ஏற்று இஸ்லாத்தை தழுவாவிட்டாலும் இவர்களினது சந்ததிகளாவது சத்தியத்தை உணர்ந்து இஸ்லாத்தில் இணைவார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. என்றார்கள்.

கருணையே உருவான காருண்ய நபியவர்கள் எத்தனை கொடிய துன்பங்கள் தம்மை அண்டியபோதும் எவரையும் சபிக்கவுமில்லை பழிவாங்க எண்ணவுமில்லை.

அந்த தாயிப் நகரவாசியொருவர்தான் இறுதியாக இந்தியாவிலும் இலங்கையிலும் இஸ்லாம் மதம் பரவ உறுதுணையாக இருந்தவர் என சரித்திர ஆய்வாளர்கள் சான்று பகர்கின்றனர்.

மன்னரிடம் இருந்த ஒரேயொரு மேலாடை

இஸ்லாத்தின் இரண்டாவது கலீபா உமர் (ரலி) அவர்களின் ஆட்சிக்காலம். அன்று வெள்ளிக்கிழமை ஜும்ஆ தினம். மஸ்ஜிதுன் நபவியில் தொழுகைக்காக மக்கள் கூட்டம் திரண்டிருந்தது. தொழுகைக்கான நேரமும் நெருங்கி விட்டது. எனினும் தொழுகையை தலைமை தாங்கி நடத்தும் கலீபா அவர்களை இன்னும் காணவில்லை.

மக்கள் மனதில் சந்தேகம் கலீபா அவர்களுக்கு சுகயீனமோ? ஒரு சிலர் இவ்வாறு முணு முணுக்கின்றனர். "ஒரு கலீபா இவ்வாறு தானா பொறுப்பில்லாமல் நடந்து கொள்வது?"

அவ்வேளை அவசரமாக, வியர்த்தவராக கலீபா உமர் (ரலி) அவர்கள் பள்ளிக்குள் நுழைகிறார்கள். ஒருவர் தைரியமாக கலீபா அவர்களிடம் "கலீபா அவர்களே! இன்று ஜும்ஆ நாள். மக்களெல்லாம் தொழுகைக்காக வெகு நேரமாக காத்திருக்கிறார்கள். நீங்களோ காலம் தாழ்த்தி வருகிறீர்களே? விசுவாசிகளின் தலைவரான தாங்கள் இப்படி நடந்து கொள்வது நியாயமில்லையே......" என கூறினார்.

"என் அன்புத் தோழர்களே! முதலில் என்னை மன்னியுங்கள். என்னிடம் இருப்பதோ ஒரேயொரு மேலாடை, அது அழுக்காக இருந்ததால் அதைத் துவைத்து உலரவைத்து அணிந்து வருவதற்கு இத்தனை நேரமாகி விட்டது. உங்களை சிரமத்திலாழ்த்தியது குறித்து மனச்சஞ்சலம் அடைகிறேன். இனியும் இவ்வாறு ஏற்படாதவாறு நான் கவனமாக நடந்து கொள்வேன்." இவ்வாறு கூறிய கலிபா அவர்கள் ஜும்ஆ பிரசங்கத்தை ஆரம்பித்தார்கள். கலீபா அவர்களின் எளிய வாழ்வு அங்கு குழுமியிருந்த மக்களின் இதயத்தை நெகிழச் செய்தது.

பாவத் தொழிலுக்கு அனுமதியா?
தவறை உணர்த்திய அண்ணலார்

அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் ஒருவர் வந்து, அல்லா(ஹ்)வின் தூதரே! எனக்கு விபச்சாரம் புரிவதற்கு அனுமதி தாருங்கள் என்று கேட்டார். பக்கத்திலிருந்த தோழர்களுக்கு அவரின் கேள்வி கடுஞ்சினத்தை ஏற்படுத்தியது. சீறிப்பாய்ந்தார்கள் அந்நபர் மீது. அண்ணலாரோ அமைதி பேணும்படி தமது அன்புத் தோழர்களை ஏவி, அந்நபரை தன்னருகில் அழைத்து பின் வருமாரு கூறினார்கள்:-

நண்பரே! உமது தாயாரோடு எவராவது விபசாரம் புரிவதை நீர் விரும்புவீரா? எனக்கேட்டார்.

அது எப்படி முடியும் அதை அனுமதிக்க மாட்டேன் என்றார் அந்நபர். பெருமானார் மீண்டும் அப்படியானால் உனது சிறிய தாயாரோடு அல்லது உனது சகோதரியோடு எவராவது விபசாரம் புரிவதை நீர் அனுமதிப்பீரா? என அந்நபரை கேட்டார்.

அவரோ கோபத்தோடு இத்தகைய செயலை என்னால் என்றுமே அனுமதிக்க முடியாது. என்றார்.

பெருமானார் கூறினார்கள் அன்பரே இவ்வாறு தான் மற்றவர்களும் தனது தாயாரோடு சிறிய தாயாரோடு அல்லது சகோதரியோடு எவரும் விபசாரம் புரிவதை விரும்ப மாட்டார்கள். எனவே அந்நிய பெண்களை உனது உடன் பிறப்புக்களாக, அன்னையாக மதித்து நடக்கக்கடவீர். என அருளினார்கள் அண்ணலார்கள்.

பின்னர் அந்நபரின் நெஞ்சில் தனது திருக்கரத்தை அண்ணலவர்கள் வைத்து பின்வருமாறு இறைஞ்சினார்கள். யா அல்லா(ஹ்) இவரின் இதயத்தை தூய்மைப்படுத்துவாயாக. மானக்கேடான செயல்களை விட்டும் பாதுகாப்பாயாக.

அந்த மனிதனும் தன் தவறுணர்ந்து நல்லவராக மாறினார்.

அந்தத் தோழருக்கு காலை வேளைகளில் ஏன் அத்தனை அவசரம்

பெருமானார் (ஸல்) அவர்கள் அதிகாலை தொழுகை முடிந்த பின்னர் தமது தோழர்களுக்கு தினமும் நல்லுபதேசமும், ஆலோசனையும் வழங்குவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். அவசரத் தேவையுள்ளவர்கள் அண்ணலாரிடம் அனுமதி பெற்று வெளியேற, ஏனையோர் மஸ்ஜிதுன்னபவியில் தங்கி விடுவர்.

எனினும் ஒரு நபித்தோழர் காலைத்தொழுகை முடிந்ததும் அவசரமாக வெளியேறுவதை வழக்கமாக கொண்டிருந்தார். இதனை அவதானித்த அண்ணலவர்கள் ஒரு நாள் அவரை அணுகி வினவியபோது அவர் சொன்ன பதிலைக் கேட்டு அண்ணலார் ஆனந்தமடைந்தார்கள். தன் அன்புத் தோழரின் பண்பு குறித்து பரவசமடைந்தார்கள். அத்தோழர் கூறினார்

அல்லாஹ்வின் தூதரே! எனது வீட்டிற்கு முன்பக்கத்து தோட்டத்துச் சொந்தக் காரருக்கு உரித்தான பேரீச்சம் மரமொன்று என் வீட்டுப்பக்கம் வளைந்திருக்கிறது. இதனால் அதில் பழுத்த பேரீச்சங்கனிகள் இரவில் என் வீட்டு முற்றத்தில் விழுந்திருக்கும் எனது சிறு பிள்ளைகள் காலையில் எழுந்ததும் தெரியாத்தனமாக அப்பழங்களை உண்டு விடுவார்கள். இன்னொருவருக்கு சொந்தமான பொருளை அவரின் அனுமதியின்றி எடுத்தல் இஸ்லாத்தில் தடுக்கப்பட்டிருக்கிறதே.

எனவே, நான் இங்கு காலைத் தொழுகை முடிந்ததும் அவசரமாக எழுந்து சென்று என் குழந்தைகள் துயிலெழுமுன் வீட்டு முற்றத்தில் விழுந்திருக்கும் கனிகளை எடுத்து அடுத்த தோட்டத்தில் போட்டு விடுவேன் இதனால் என் பிள்ளைகள் ஹராமான உணவை உண்பதில் நின்றும் எனக்குத் தடுக்க முடிகிறது. என்றார். பெருமானாரின் தோழர்.

இதன்பின்னர் அந்த மரத்தை இந்த அன்புத் தோழருக்கே அந்தத் தோட்டத்து சொந்தக்காரர் கொடுத்ததாகச் சொல்லப்படுகிறது.

பிறரிடம் குறை காணாதே

ஒரு முறை இமாம் ஸஅதி (ரஹ்) அவர்கள் சிறுவராயிருந்த போது தனது தகப்பனாருடன் பிரயாணமொன்றை மேற்கொள்ள வேண்டியிருந்தது. பிரயாணத்தின் போது இரவாகி விட்டதால் ஒரு ஊரில் பள்ளியொன்றில் இரவு தங்கி அடுத்தநாள் காலையில் பிரயாணத்தைத் தொடர அவர்கள் திட்டமிட்டார்கள்.

அதிகாலையில் இமாமவர்களும் தகப்பனாரும் எழும்பி தஹஜ்ஜுத் தொழ ஆயத்தமானார்கள். அவர்களுடன் வந்த மற்றவர்களோ ஆழ்ந்த நித்திரையிலிருந்தார்கள். இதனைக்கண்ட இமாமாவர்கள் தனது தகப்பனாரிடம் கோபமாக இவர்கள் தஹஜ்ஜுத் தொழாமல் பிணம் போல் தூங்குகிறார்களே, என முறையிட்டார்கள்.

இதனைக் கேட்ட தகப்பனார் மகனே! பிறரின் குறைகளை துருவிப் பார்க்கவா நீர் அதிகாலையில் எழுந்தீர். நீர் தொழுவதைவிட அவர்களுடன் சேர்ந்து உறங்கியிருந்தால் இதனைவிட மேலானதாக இருந்திருக்கும். பிறரின் குறைகளை மறைப்பவன் தான் உண்மையான முஸ்லிம் என தன் அன்பு மகனுக்கு உபதேசம் செய்தார்கள்.

கொடிய தேள் கொட்டிய நிலையிலும் ஹதீஸ் போதனையை நிறுத்தாத அன்பாளர்!

மாலிக் மத்ஹபின் ஸ்தாபகர் இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள் எப்போதும் மதினா முனவ்வராவில் ம:.ரிபிலிருந்து இஷா வரை தனது மாணவர்களுக்கு ஹதீஸ் கலை போதிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். ஹதீஸ் கலையில் பாண்டித்தியம் பெற்ற அவர்களிடம் பல்நாட்டு மாணவர்களும் வந்து பெருமானாரின் பொன் மொழிகளைக் கற்று கொண்டிருந்தனர்.

ஒரு முறை இமாமவர்கள் ஹதீஸ் கலையை போதித்துக் கொண்டிருந்த போது ஏதோ அவர்களின் மேலங்கிக்குள் புகுந்து அன்னாரின் முதுகைக் கடித்துக் கொண்டிருந்ததை உணர்ந்தும் அவர்கள் ஆடாமல் அசையாமல் ஹதீஸ் கலையைப் போதிப்பதிலேயே கவனமாக இருந்தார்கள். இதனால் அன்னாரின் முகமும் வெளிறயது. இஷா தொழுகைக்கான அதானும் சொல்லப்பட்டது. அப்போது அவர்கள் தனது மாணவர் ஒருவரை அழைத்து தனது மேலங்கிக்குள் என்ன புகுந்திருக்கிறது என்று பார்க்கச் சொன்னார்கள். மாணவரும் இமாம் அவர்களின் மேலங்கியை உயர்த்திப்பார்த்த போது கொடிய தேளொன்று அன்னாரின் முதுகில் பல இடங்களை பதம் பார்த்திருந்ததை கண்டு ஆச்சரியமுற்று இமாமவர்களே, ஆரம்பத்திலே சொல்லியிருந்தால் இத்தனைத் தொல்லை ஏற்பட்டிருக்காதே என்றார்.

அதற்கு இமாமவர்கள் மகனே! நாம் படித்துக் கொண்டிருந்ததோ அண்ணல் நபி (ஸல்) அவர்களின் பொன் மொழிகள் பொதிந்த ஹதீஸ்கள். அதிலிருந்து என் கவனத்தைத் திருப்பி இந்த சிறிய விடயத்திற்காக அதை இடை நிறுத்தி இருந்தால் அது பெருமானார் மீது நான் கொண்டிருக்கும் அன்புக்கு இடையூறாக அமையும். அன்னாரின் பொன் மொழிகளைக் கற்று கொடுப்பதில் எனக்கிருந்த ஆசையில் ஆர்வத்தில். இந்த தேள்க்கடி பெரிதாக எதுவும் என்னை செய்துவிடவில்லை என்றார்கள். அன்னாரின் பொறுமையையும் பெருமானார் மீது அன்னார் கொண்டிருந்த மாசற்ற அன்பையும் கண்டு மாணவர்கள் வாயடைத்து நின்றனர்.

மமதை கொண்ட ஆட்சியாளருக்கு கலீபா அவர்கள் தந்த அதிரடி

அம்ர் இப்னு ஆஸ் (ரலி) அவர்கள் எகிப்து நாட்டின் ஆளுநராக இருந்தவேளை அவரது மகன் எகிப்தியர் ஒருவரை சாட்டையால் அடித்து விட்டார். அடிபட்ட மனிதர் மதீனா சென்று மன்னரான கலீபா உமர் (ரலி) அவர்களிடம் இதுபற்றி முறையிட்டார்.

உடனே கலீபா அவர்கள் ஆளுநரையும் அவர் மகனையும் உடன் மதீனாவுக்கு வரவழைத்தார்கள். அவர்கள் இருவரும் கலீபா அவர்கள் முன் பிரசன்னமானபோது கலீபா அவர்கள் தனது கையிலிருந்த சாட்டையை அந்த எகிப்தியரின் கையில் கொடுத்து ஆளுநரின் மகனை அவர்களின் முன்னிலையிலே சாட்டையால் அடிக்கும்படி கட்டளையிட்டார்.

எகிப்தியர் அடித்துவிட்டு சாட்டையைத் திருப்பிக் கொடுத்த போது உமர் (ரலி) அவர்கள் சாட்டையடி ஒன்றை மாண்புமிகு ஆளுநருக்கும் கொடுங்கள் என அந்த எகிப்தியரை வேண்டினார்கள். தனது தந்தை ஆளுநர் என்ற கர்வத்தாலேயே அவரது மகன் இவ்வாறு நடந்துள்ளார் என்றார்கள்.

அந்த எகிப்தியரோ எனக்கு யார் அடித்தார்களோ அவருக்கு நான் பதலடி கொடுத்துவிட்டேன் எனக்கு இது போதும் என்றார்.
உமர் (ரலி) அவர்கள் அல்லாஹ்வின் மீது ஆணையாக நீர் ஆளுநரை அடித்திருந்தாலும் நீர் அவ்வாறு செய்வதிலிருந்து உன்னைத் தடுத்திருக்க மாட்டேன். உமது சொந்த விருப்பத்தின் பேரிலேயே அவரை நீர் விட்டு விட்டீர் என்றார்கள்.

பின்பு உமர் (ரலி) அவர்கள் ஆளுநரைப் பார்த்து கோபமாக ஏ அமீரே! மனிதர்கள் தமது தாயின் வயிற்றிலிருந்து சுதந்திர மனிதராகவே பிறக்கிறார்கள். அவர்களை நீர் எப்போது அடிமைப் படுத்த ஆரம்பித்தீர்? என்று கூறி எச்சரித்தார்கள். ஆட்சியாளர்களும் சட்டத்திற்கு அப்பாற் பட்டவர்கள் அல்லர் என்ற உண்மையை இஸ்லாம் ஆயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன்னரே உலகுக்கு உணர்த்தி மனித உரிமைக்கு மதிப்பளித்தது.

அன்னைக்கு நீர் அருந்தக் கொடுக்க விடியும் வரை காத்து நின்ற அன்பு மகன்।

ஹஸரத் பீஸ்தாமி (ரஹ்) அவர்கள் சிறு வயதினராயிருந்த வேளை நோய் வாய்ப்பட்டு படுக்கையிலிருந்த அவரின் அன்பு அன்னை மகனை அழைத்து குடிப்பதற்கு நீர் கொண்டு வரும்படி வேண்டினார்கள். அவரும் குவளையில் நீர் கொண்டு வந்த போது தாயார் உறக்கத்திலிருப்பதைக் கண்டு அவர்களின் நித்திரையை கலைக்காது தாயார் விழிக்கும் வரை இரு கைகளிலும் குவளையை ஏந்தியவாறு நின்றிருந்த தனது அருமை மகனைக் கண்டதும் ஆச்சரியமுற்று மகனே! இவ்வளவு நேரமாக தண்ணீர்க் குவளையை ஏந்தியவாறு நிற்கிறீரே? நீர் உறங்கவில்லையா என்று கேட்டார்கள்.

அதற்கு அந்த அன்பு மகன்:
அன்னையே! நீங்கள் எந்த நேரத்தில் விழித்து தண்ணீர் கேட்பீர்களோ என்று தெரியாதிருந்தது. தாங்கள் திடீரென்று விழித்து தண்ணீர் கேட்டால் ஒரு கணமும் தாமதியாது தங்களுக்கு நீர் அருந்தத் தர வேண்டுமே என்ற நோக்கில் கண் விழித்துச் காத்திருந்தேன். என்றார்கள்.

தனது மகனுக்கு தன்மேல் உள்ள பாசத்தை உணர்ந்த அந்த அன்னை அவரைக் கட்டி ஆரத்தழுவி முத்தமிட்டார்கள். அத்தோடு என் மீது என் மகன் கொண்டுள்ள அன்பைவிட பன் மடங்கு அன்பை அவன் மீது சொரிவாயாக யா அல்லா(ஹ்) என்று இறைவனையும் வேண்டினார்கள். இவர்கள் வளர்ந்து பெரியாரானதும் ஞாலம் போற்றும் ஞானியாகி அகிலமெங்கும் அறிவவொளி பரப்பினார்கள். ஒவ்வொருவரும் தனது பெற்றோர்களுக்கு மனம் சுழிக்காது புஜம் தாழ்த்தி அவர்களுக்கு பணிவிடை புரிய வேண்டும் என புனித இஸ்லாம் வலியுறுத்துகிறது.

வாளை உருவியவரை நோக்கி ஆட்சித் தலைவர் வாஞ்சையுடன் மொழிந்த அருள் வார்த்தை

ஹஸரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாமிய கிலாபத்தின் இரண்டாவது ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டதும் நாட்டு மக்களை அழைத்து மதினா நகரில் சொற்பொழிவொன்றை நிகழ்த்தினார்கள் அப்போது அவர்கள் கூறினார்கள்.

என் அன்புத் தோழர்களே, நான் இஸ்லாமிய உலகின் ஜனாதிபதியாக இருப்பினும் முஸ்லிம்களாகிய உங்களின் உதவியை அல்லா(ஹ்)வுக்கு அடுத்தபடியாக நான் எதிர்பார்க்கின்றேன் எனது ஆட்சியில் ஏதும் தவறுகள், ஊழல்கள் ஏற்படின் அதைத்தட்டிக் கேட்க ஒவ்வொரு குடிமகனுக்கும் உரிமையுண்டு. இது எனக்கு நல்லாட்சி நடத்த உறுதுணையாக அமையும்.

உமர் (ரலி) அவர்கள்இவ்வாறு சொற்பொழிவு நிகழ்த்திய வேளை திடீரென்று கூட்டத்திலிருந்த ஒருவர் முன்வந்து உமர் (ரலி) அவர்களின் மேலங்கியைப் பிடித்திழுத்து உமது ஆட்சியில் தவறிழைப்பின் இந்த வாள் தான் அதற்கு பதில் சொல்லும் என தனது உறையிலிருந்த வாளை உருவி உமர் (ரலி) அவர்களை எச்சரித்தார்கள். உமர் (ரலி) அவர்கள் கோபப்பட வில்லை தன்னை எச்சரித்த அன்பரின் நெஞ்சைத் தொட்டுப் பார்த்தார்கள். அவரின் நெஞ்சம் படபடக்கவில்லை பயமற்ற நிலையில் இருந்தது.

உடனே உமர் (ரலி) அவர்கள் அன்பரே! உங்களைப் போன்ற தைரியசாலிகள் இருக்கும் போது எனது ஆட்சியில் தவறுக்கு இடமேயில்லை என்று அந்நபரிடம் சொன்னார்கள்.

உமர் (ரலி) அவர்களின் ஆட்சி காலத்தில் உலகில் மூன்றிலொரு பகுதி தனி இஸ்லாமிய ராஜ்யமாக இருந்தது. தனக்கென ஒரு பாதுகாவலர் கூட இல்லாமல் எளிமையான ஆட்சி நடாத்திய உமர் (ரலி) அவர்களின் ஜனநாயக முறையை இன்று கூட உலகம் போற்றுகிறது. அன்னாரின் அருமையான ஆட்சிமுறை இன்றைய ஆட்சியாளர்களுக்கு பாடமாக அமையட்டும்.

குழந்தையிடம் இருந்து பழத்தை பிடுங்கியது நியாயமா? மனைவி கேள்விக்கு மன்னர் பதில்

ஹஸரத் உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்களின் ஆட்சிக்காலத்தில் ஒரு முறை அரச களஞ்சியசாலைக்கு அப்பிள் பழங்கள் அன்பளிப்பாக வந்தன. அதை அவர்கள் பங்கு வைத்து மக்களுக்கு பகிர்ந்து கொடுக்க முனைந்த போது அன்னாரின் சிறு குழந்தை அவற்றில் ஒரு பழத்தை எடுத்து உண்ண முயற்சித்தது. உடனே கலீபா அவர்கள் அதைத் தடுத்து பழத்தை குழந்தையின் கையில் இருந்து எடுத்து விட்டார்கள்.

குழந்தை அழுது கொண்டே இது பற்றி தனது தாயிடம் சென்று முறையிட்டது. கலீபா அவர்கள் வீடு வந்த போது மனைவி ஆத்திரமடைந்து குழந்தையின் கையில் இருந்த பழத்தை ஈவிரக்கமில்லாமல் பிடுங்கினீர்களே இது நியாயமாகுமா? என கலீபாவான தனது கணவரை வினவினார்கள்.

கலீபா மனைவியைப் பார்த்து நான் குழந்தையின் கையிலிருந்த அப்பிள் பழத்தை பிடுங்க வில்லை. என் இதயத்தில் இருந்து தான் பிடுங்கினேன். கலீபாவாகிய நான் பழங்களை ஊர் மக்களுக்கு பங்கு வைத்து எஞ்சினால் மாத்திரமே என் குடும்பத்திற்கு எடுப்பது என்ற எனது வழக்கத்தை என்னால் மாற்றிக்கொள்ள முடியாது என்பதை நீர் அறியாதவளல்லவே. ஒரு பழத்திற்காக எனது ஆத்மாவை நான் பாழ்படுத்திக் கொள்ள விரும்பவில்லை, என்றார்கள்.

பின்னர் கலீபாவின் மனைவி கடையில் பழமொன்றை விலை கொடுத்து வாங்கி குழந்தைக்குக் கொடுத்தார்கள். இவர்கள் இஸ்லாத்தின் இரண்டாது கலீபா ஹஸரத் உமர் (ரலி) அவர்களின் வழித்தோன்றலாவார்கள்.

அண்ணலாரின் உடலைத்தாக்க வந்த அம்பை தன்னுடலில் ஏந்திய அன்புத் தோழர்!

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் தோழர்களில் ஹஸரத் அபூதல்ஹா (ரலி) அவர்களும் ஒருவர். இவர்கள் பெருமானார் கலந்து கொண்ட அத்தனை போர்களிலும் கலந்து கொண்டார்கள்

ஒரு முறை உஹத் போரின் போது எதிரிகள் பெருமானார் இருக்கும் இடத்தை கண்டறிந்து அவர்கள் மீது அம்பு மாரி பொழியத் தொடங்கினர். அவ்வேளை அபூதல்ஹா (ரலி) அவர்கள் அண்ணலாரின் முன் நின்று அரண்போல அவர்களை காத்து நின்றார்கள் அல்லா(ஹ்)வின் தூதரே தங்களின் உயிரைக்காக்க என்னுயிர் இருக்கிறது. என்று கூறிக்கொண்டே எதிரிகளுடன் போராடினார்கள்.

அவ்வேளை அண்ணலாரை நோக்கி வந்த அம்பொன்றை அவர்கள் தம் கையால் தடுத்து நிறுத்த, அதனால் அவர்கள் கையும் படுகாயமடைந்தது. இப்போரினால் அந்த நபித்தோழரின் மேனியில் எழுபது காயங்கள் ஏற்பட்டன. பெருமானார் இவர்களைப் பற்றி குறிப்பிடுகையில் நீங்கள் சுவர்க்க வாசியை இவ்வுலகில் காண விரும்பின் அபூ தல்ஹாவை கண்டு கொள்ளுங்கள். என்று புகழ்ந்து கூறினார்கள்.

இறைவனிடமிருந்து நீங்கள் அதிகமாக விரும்புவதை செலவு செய்யாதவரை நற்பலனை பெறமாட்டீர்கள். என்ற திருக்குர்ஆனின் வசனம் அண்ணலவர்களுக்கு அருளப்பட்டதை அறிந்த அபூ தல்ஹா (ரலி) அவர்கள் உடனே தன் வசமிருந்த பைரஹா என்ற தோட்டத்தை அல்லா(ஹ்)வின் பாதையில் தர்மம் செய்து விட நாடி அண்ணலாரை அனுகினார்கள். அதற்கு நபி அவர்கள் அந்தத் தோட்டத்தை அவரது உறவினர்களுக்கு பகிர்ந்து கொடுக்கும்படி கூறினார்கள். இறுதியில் அவர்களும் அவ்வாறே செய்தார்கள்.

பகிர்ந்தளிக்கப்பட்ட அந்தத் தோட்டத்தில் நீர் ஊற்று ஒன்று இருந்தது. அந்த நீரூற்றில் அண்ணலவர்கள் அடிக்கடி சென்று நீர் அருந்துவார்கள். இது சுவர்க்கத்து நீர் ஊற்று போன்றது என அண்ணலவர்கள் புகழ்ந்துரைத்தனர்.

வீதியில் நின்ற சிறுவனின் வியப்பூட்டும் கேள்வியும், பதிலும்!

மார்க்க மேதை பஹ்லூல் (ரஹ்) அவர்கள் அறிவிக்கறார்கள். நான் ஒருமுறை பஸ்ரா நகர் வீதியொன்றில சென்று கொண்டிருந்தேன். வீதியில் சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தனர். அவர்கள் தம் கையில் இருந்த இனிப்புப் பதார்த்தங்களைச் சுவைத்தவாறே பலவிதமான விளையாட்டுக்களில ஈடுபட்டிருந்தனர். ஆனால் ஒரு பையனோ ஓர் ஓரமாக நின்று இவைகளைப் பார்த்துக் கொண்டிருந்தான. அவன் கையில் இனிப்புப் பண்டம் எதுவும் இருக்க வில்லை.

அவன்மீது அனுதாபப்பட்டு நான், மகனே! நீவிளையாடவில்லையா? உன் கையில் இனிப்புப் பண்டங்களும் இல்லையே. உனக்கு நான் இனிப்புப் பண்டங்கள் வாங்கித் தரவா? என்று வினவினேன். அதற்கு அச்சிறுவன் பெரியவரே! நாம் விளையாடுவதற்காகவா பிறந்தோம். என்று என்னைப் பார்த்துக் கேட்டான். எனக்கு அவன் பதில் ஆச்சரியமாக இருந்தது. பிறகு எதற்காக நாம் பிறந்துள்ளோம் மகனே? என அவனை வினவினேன்.

அதற்கு அவன் அறிவைக் கற்கவும் அல்லா(ஹ்)வை வணங்குவதற்குமே நாம் படைக்கப்பட்டுள்ளோம். என்று கூறினான். அதற்கு ஆதாரமாக நாம் உங்களை சிருஷ்டித்ததெல்லாம் நிச்சயமாக வீணுக்காக என்றும் நீங்கள் நம்மிடம் மீண்டும் கொண்டுவரப்பட மாட்டீர்கள் என்றும் உறுதியாக எண்ணிக்கொண்டீர்களா? (23:115) என்ற புனித அல் குர்ஆன் வசனத்தையும் ஓதிக் காட்டினான்.

அவனின் அறிவுத் திறனைக் கண்டு அதிர்ந்துபோன நான் அப்பிள்ளையின் நீடித்த ஆயுளுக்காக அல்லா(ஹ்) விடம் பிரார்த்தித்தேன். பிற்காலத்தில் இந்த இளைஞன் இஸ்லாமிய கலைஞானத்தில் சிறந்து விளங்கினார்.

யாசகனாக வேடம் போட்டு ஏமாற்றிய நபருக்கு கிடைத்த பாடம்

கலீபா ஹஸரத் உமர் (ரலி) அவர்கள் ஒரு மனிதர் பள்ளிவாயலின் முன் நின்று யாசிப்பதைக் கண்டு அந்த மனிதருக்கு ஏதும் உதவி செய்து அனுப்பும்படி தன் தோழர் ஒருவரை பணித்தார்கள். அவரும் அம்மனிதருக்கு உணவளித்தார்கள்.

ஆனால் சற்று நேரத்தின் பின்னர் மீண்டும் அம்மனிதர் யாசிப்பதைக் கண்ட கலீபா அவர்கள் தனது தோழரிடம், நீர் அந்த யாசகனுக்கு உதவவில்லையா? என்று வினவ, தோழர் அவர் உணவு கேட்டார். அதை அப்போதே வழங்கிவிட்டேன் என்றார்.

கலீபா அவர்களுக்கு கோபம் தாளவில்லை. நீ பசிக்கு உணவு கேட்டாய் அதை கொடுத்தாகிவிட்டது. மேலும் நீ என்ன யாசிக் கிறாய்? நீ உண்மையிலே யாசகனல்ல வியாபாரி. என்று கூறி அவன் கையில் இருந்த பொட்டலத்தை எடுத்து பார்த்தார்கள்.

அந்தப் பொட்டலத்தில் நிறைய ரொட்டிகள் இருக்கக்கண்ட கலீபா அவர்கள் அவற்றை பக்கத்திலிருந்த ஒட்டகங்களுக்குத் தீனியாகப் போட்டுவிட்டார்கள். அத்தோடு அவனுக்கு கசையடி கொடுத்து இனி இவ்வாறு மற்றவர்களை ஏமாற்றாதே என்று எச்சரித்தார்கள்.

இந்த விடயம் குறித்து சிலர் கலீபா அவர்களை குறை கூறினாலும், உண்மையில் அவன தேவையில்லாமல் யாசகம் கேட்டான். கொடுப்பவர்கள் அவன் யாசகன் என நினைத்து பிச்சையிட்டார்கள். அவன் இவ்வாறு மக்களை ஏமாற்றி தனது தேவைக்கு மேலாக பொருளை பெற்றதாலே அந்தத் தண்டனையை கலீபா அவர்கள் வழங்கினார்கள் என எடுத்துரைக்கப்பபட்டது.

இஸ்லாத்தில் யாசகம் கேடபது தடை செய்யப்பட்டுள்ளது. அது உழைத்து உண்பதையே வலியுறுத்துகிறது. இதனாலே அண்ணல் நபி (ஸல்) அவர்கள் யாசகம் கேட்பதை தவிர்த்துக் கொள்ளுங்கள், ஜனங்களை விட்டும் தேவையற்றவனாக இருங்கள் உங்கள் தேவைகளை அல்லா(ஹ்)விடமே கேளுங்கள் என்று நவின்றுள்ளார்கள்.

ஹஸரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் நபிமொழி பலவற்றை ரிவாயத்துச் செய்த பிரபலமான நபித்தோழர்களின் ஒருவராவார். அத்தோடு இஸ்லாத்தை நன்கு விளங்கி இவர் ஏற்றுக் கொண் டிருந்தார். தான் பெற்ற சத்தியமார்க்கத்தின் விளக்கத்தை மற்றவர்களும் பெறவேண்டும் என்பது அவரது தணியாத தாகமாகும்.

குறிப்பாக தனது தாயார் அப்பாக்கியத்தை அடையவேண்டு மென்பது அவரின் எதிர்பார்ப்பாகும் இதற்காக அவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் பிரார்த்தனைகள் பல, எனினும் அவரின் அன்னையோ இஸ்லாத்ததை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்.

ஆனாலும் நபித்தோழர் அபூஹுரைரா (ரலி) அவர்களோ தனது முயற்சியில் தவறவில்லை. ஒரு முறை தனது தாயாருக்கு அவர் இஸ்லாம் பற்றிய விளக்கத்தை கூறிக் கொண்டிருந்த போது கோபமுற்ற அவரின் தாயார் இஸ்லாத்தை ஏற்க மறுத்ததோடு நபி (ஸல்) அவர்களை நிந்திக்கவும் ஆரம்பித்தார்.

இதனால் பெரிதும் மனவேதனையுற்ற அபூ ஹுரைரா (ரலி) அவர் கள் நபிகளாரைச் சந்தித்து விபரங்களைக் கூறி தனது தாயாருக் காக அல்லாஹ்விடம் பிரார்த்திக்குமாறு வேண்டிக் கொண்டார்கள்.

யா அல்லாஹ் அபூ ஹுரைராவின் அன்னைக்கு நேரான வழியைக் காட்டி அருள்வாயாக. என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் பிரார்த்தனை புரிந்தார்கள். நபி (ஸல்) அவர்களின் பிரார்த்தனை அல்லாஹ்வினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதை அபுஹுரைரா (ரலி) அவர்கள் திடமாக நம்பினார்கள். அந்த மன உறுதியுடன் அவர் தன் வீடு நோக்கிச் சென்றார்.

வீடு பூட்டிக் கிடந்தது. அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் தனது தாயாரை அன்போடு அழைத்தார்கள்.

தனது மகனின் குரலைக் கேட்ட அவரது தாயார் தான் குளித்துக் கொண்டிருப்பதாகவும் சற்று நேரம் வெளியே தாமதிக்கும்படியும் தமது மகனை வேண்டிக்கொண்டார்.

சிறது நேரத்தில் வீட்டின் கதவு திறக்கப்பட்டது. அத்தோடு அன்னையின் இதயக்கவும் திறந்து கொண்டதைக்கண்ட அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் மகிழ்வுற்றார்கள். அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தினார்கள். அந்த அம்மையார் புனித கலிமாவை மொழிந்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்.

அபூ ஹுரைரா (ரலி) அவர்களுக்கு இருப்புக் கொள்ளவில்லை. தமது தாயாரை ஆரத்தழுவி ஆனந்தக்கண்ணீர் சொரிந்தார்கள். அந்த நல்ல செய்தியை ஓடோடிச் சென்று அல்லாஹ்வின் தூதரிடம் எடுத்துரைத்தார்கள்.

இந்த நல்ல செய்தியைக் கேட்ட அண்ணல் நபி (ஸல்) அவர்களும் அல்லாஹ்வைப் புகழ்ந்தார்கள்.

அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் எப்போதும் மற்றவர்களின் தாய்மார் களுக்கும் அடிக்கடி பிரார்த்தனை புரியும் உயரிய பண்புடைய வர்களாக திகழ்ந்தார்கள்.

கேள்வி ஒன்று பதில் பத்து

இஸ்லாத்தின் நான்காவது கலிபா ஸஸரத் அலி (ரலி) அவர்கள் சிறந்த வீரர் போலவே தலைசிறந்த அறிஞருமாவார்.

ஒரு முறை பத்து நபர்களைக்கொண்ட அறிஞர் குழுவொன்று அன்னாரைக் காணவந்தது. அவர்களில் ஒருவர் ஹஸரத் அலி (ரலி) அவர்களை நோக்கி நாங்கள் உங்களிடம் ஒரேயொரு கேள்வியைத்தான் கேட்க வந்தோம். எனினும் எங்கள் அனைவருக்கும் தனித்தனியாக தங்களால பதில் தர முடியுமா? என வினவினர். அதற்கு அலி (ரலி) அவர்கள் தாராளமாகக் கேளுங்கள். கேள்விதான் என்ன? என வினவினார்கள்.

இதற்கு அந்த அறிஞர்களில் ஒருவர் அறிவு, செல்வம் இவற்றில் எது அதி சிறந்தது? என்பதுதான் கேள்வி என்றார். ஹஸரத் அலி (ரலி) அவர்கள் முதலாமவரைப் பார்த்து அறிவு திர்க்கதரிசிகள், ஞானிகள் மகான்களின் பரம்பரைச் சொத்து. ஆனால் செல்வமோ கொடுங்கோலரின் ஆயுதம். ஆகவே அறிவுதான் சிறந்தது. பின்னர் இரண்டமவரை பார்த்து உங்களிடம் செல்வமிருந்தால் நீங்கள் தான் அதைக் காப்பற்ற வேண்டும், ஆனால் அறிவோ உங்களை எப்போதும் காப்பபாற்றும். எனவே, அறிவுதான் சிறந்தது.

அடுத்து மூன்றாமவரைப் பார்த்து செல்வந்தனுக்கு எப்போதும் விரோதிகள் அதிகம். ஆனால் அறிஞருக்கோ நண்பர்கள் அதிகம். ஆகவே அறிவு தான் சிறந்தது.
நான்காமவரைப் பார்த்து செல்வம் கொடுக்கக் கொடுக்க குறைந்து கொண்டே போகும். ஆனால் கல்வியோ அதற்கு மாறாக அதிகரித்துக் கொண்டே போகும் ஆகவே அறிவுதான் சிறந்தது.

பிறகு ஐந்தாமவரைப் பார்த்து அறிவுள்ளவன் எப்போதும் தன் அறிவை மற்றவர்களுக்கும் வாரி வழங்கிக் கொண்டிருப்பார். அவரிடம் தாராள மனப்பான்மை இருக்கும். ஆனால் செல்வந்தரிடமோ கஞ்சத் தனமே அதிகமாக இருக்கும் ஆகவே அறிவுதான் சிறந்தது.

அடுத்து ஆறாமவரைப் பார்த்து செல்வத்தைக் கள்வர்களால் அபகரித்துச்செல்ல முடியும். ஆனால் அறிவை எவராலும் அபகரிக்க முடியாது. ஆகவே அறிவுதான் சிறந்தது.

ஏழாமவரைப் பார்த்து செல்வம் கால ஓட்டத்தில் அழிந்துவிடும். அல்லது கூடும் குறையும் ஆனால் அறிவு எப்போதும் வளர்ந்து கொண்டே போகும். எனவே அறிவுதான் சிறந்தது. பின்னர் எட்டாமவரிடம் செல்வத்திற்கு எப்போதும் எல்லையுண்டு, நிறையுண்டு, அளவுண்டு, கணக்கு உண்டு, அறிவுக்கோ எல்லைகள் எதுவும் கிடையா ஆகவே அறிவுதான் சிறந்தது.

பிறகு ஒன்பதாமவரைப் பார்த்து செல்வம் உள்ளத்தின் ஒளியைப் போக்கி அதனை இருளடையச் செய்கிறது. ஆனால் அறிவோ இருண்ட உள்ளத்தில் ஒளிபாய்ச்சி அதனை தூய்மையாக்குகிறது. ஆகவே அறிவுதான் சிறந்தது. இறுதியாக பத்தாவது நபரைப் பார்த்து செல்வம் உள்ளத்தில் செருக்கையும் ஆணவத்தையும் ஏற்படுத்துகிறது. அதனால் தானே இறைவன் என உரிமை கொண்டாடும் நிலைக்கு மனிதனைக் கீழ் மட்டத்திற்கு தள்ளிவிடுகிறது.

ஆனால், அறிவோ இறைவனை நான் உனது அடிமை எனும் உயரிய ஏகத்துவப் பண்பாட்டை வளர்த்து அல்லாஹ்வின் நல்லடியானாக மனிதனை மாற்றி அவனுக்கு இம்மை, மறுமை இரண்டிலும் ஈடேற்றத்தைக் கொடுக்கிறது.

அறிஞர் அலி (ரலி) அவர்களின் வியத்தகு பதிலைக் கண்டு அறிஞர்கள் பதின்மரும் வாயடைத்துப் போனார்கள்.

பினனர் கலீபா அவர்களின் அறிவைப் போற்றிப் புகழ்ந்து விடை பெற்றனர். அறிஞர் (ரலி) அவர்களோ தனக்கு இத்தகு பதிலைக் கூறுவதற்கு ஆற்றல் தந்த அல்லாஹ்வைப் புகழ்ந்தார்கள்.

இதனாலன்றோ அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நான் அறிவின் கோட்டை எனில் அதன் வாசல் அலியாவார் என குறிப்பிட்டுள்ளார்கள்.

தனயனின் சொத்துக்குச் சொந்தக்காரர் தந்தை

ஒரு முறை ஒரு மனிதர் அண்ணல் நபி (ஸல்) அவர்களைச் சந்தித்து யாரஸூலல்லாஹ்! என் தந்தை நினைக்கும் பொழுதெல்லாம் வந்து என் செல்வத்திலிருந்து எடுத்துச் செல்கிறார் என முறையிட்டார். இதனைக் கேட்ட நபி (ஸல்) அவர்கள் அவரது தந்தையை தன்னிடம் அழைத்துவரும்படி பணித்தார்கள். அவ்வாறே சிறிது நேரத்தில் அவரது தந்தை அழைத்து வரப்பட்டார். ஊன்றுகோலின் உதவியுடன் வந்த அவர் வயது முதிர்ந்தவர். நபியவர்கள் அம்முதியவரிடம் அவரது மகனின் முறையீடு பற்றி விசாரித்தார்கள்.

அப்போது அம்முதியாவர் யாரசூலல்லாஹ்! முன்னர் எனது இம்மகன் எத்தகைய உதவிக்கும் வழியின்றி அனாதரவாக இருந்தார். அப்பொழுது நான் நல்ல சரீர சுகத்துடனும் செல்வத்துடனும் இருந்தேன். என் செல்வத்திலிருந்து இவருக்கு உதவி ஒத்தாசை புரிவதை நான் தடுத்துக் கொள்ளவில்லை.

இன்று இவர் ஒரு செல்வந்தர். எனினும் இவர் தனது செல்வத்தின் மூலம் எனக்கு உதவுவதிலிருந்து என்னை ஒதுக்கிவைத்துள்ளார். என்று மனவேதனையுடன் தனது பரிதாப நிலையை விவரித்தார்.

இதனைச் செவிமடுத்த பெருமானாரின் கண்கள் கலங்கின. அவர்கள் அந்த வயோதிபரின் மகனை விளித்து. நீங்களும் நீங்கள் பெற்றுள்ள செல்வங்களனைத்தும் உங்கள் தந்தைக்குரியன என்று தீர்ப்பளித்தார்கள். உண்மையில் மனிதனின் சொத்து செல்வம் திறமைகள் அனைத்தும் பெற்றோரின் பெரும் தியாகத்தின் பிரதிபலன்களே என்பதனை பிள்ளைகள் மறந்து விடக் கூடாது. இதன்படி பிள்ளைகளும் அவர்களது செல்வங்களும் அவர்களது தந்தைக்குரியன. எனவே தந்தையின் சொற்படியே அவர்கள் செயற்பட வேண்டும்.

அவர்களது செல்வத்தை தந்தை அனுபவிப்பதை ஒரு போதும் தடுத்துவிடக்கூடாது. அது தகாத செயலாகும். இதுவே இஸ்லாமிய வழிமுறையுமாகும்.

அண்ணலாரின் வாழ்வும், வாக்கும் என்றும் பின்பற்றத்தக்கவை

இற்றைக்கு சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்னர் பெய்ருத் நகரத்தின் பிரிட்டிஷ் தூதரகத்தின் இரண்டாவது மாடியில் இருந்தவாறு கிறிஸ்தவ இளைஞர் ஒருவர் வீதியைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அவ்வேளை யூத முதியவர் ஒருவர் அரபு முஸ்லிம் இளைஞர் ஒருவரிடம் ஏதோ வாக்குவாதம் செய்துகொண்டிருப்பதை கண்டார். திடீரென வயோதிப யூதர் முஸ்லிம் இளைஞனின் கன்னத்தில் ஓங்கி அறைந்துவிட்டார்.

அந்த முஸ்லிம் இளைஞனோ எதுவும் பேசாமல் கன்னத்தைத் தடவியவாறே நடக்கலானான். இதனை அவதானித்துக் கொண்டிருந்த பிரிட்டிஷ் அதிகாரிக்கு இச்சம்பவம் வியப்பை அளித்தது.

பெய்ருத் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் நாடு. யூதர்களோ அங்கு சிறுபான்மையினர். எனினும் அந்த இளைஞன் கூட்டத்தைக் கூட்டாமல், ஆர்ப்பாட்டம் செய்யாது ஏன் பதிலுக்கு ஒரு வார்த்தையேனும் கூறாது போகும் இளைஞனை அந்த ஆங்கில அதிகாரி கீழே இறங்கி வந்து விசாரித்தார்.

நான் அந்த யூதரிடம் கடன் வாங்கியிருந்தேன். எனினும், உரியகாலத்தில் அதனை அவருக்கு திருப்பிக்கொடுக்க முடியவில்லை. அதனால் ஆத்திரத்தில் அவர் என்னை அறைந்து விட்டார். அப்போதும் அந்த அரபு இளைஞன் அமைதியாகவே பதிலளித்தார்.

அதற்காக அவர் உன்னை அடிக்கலாமா? நீர் ஏன் பதிலுக்கு எதுவும் செய்யவில்லை என மேலும் வினவினார். அந்த ஆங்கில அதிகாரி.

வாங்கிய கடனை உரிய நேரத்தில திருப்பி ஒப்படைக்குமாறு எங்களுக்கு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அறிவுவுறுத்தி யுள்ளார்கள். திருப்பிக் கொடுக்காமல் இருந்தது எனது தவறுதானே என அம்முஸ்லிம் இளைஞன் பதிலளித்தான்.

அதற்காக அவர் உன்னை அடித்தது தவறு. வேறு யாராக இருந்தாலும் திருப்பி அடித்திருப்பார்கள். என அந்த அதிகாரி கூறினார்.

முதியவர்களுக்கு மரியாதை செய். சிறுவர்கள் மீது அன்பு செலுத்து என பெருமானார் (ஸல்) அவர்கள் எமக்குப் போதித்துள்ளார்கள்.

இதனை மீறி நான் அப்பெரியவர் மீது கை வைத்திருந்தால் நான் பெரும்பாவியாகியிருப்பேன் என உணர்ச்சியுடன் பதிலளித்தான் அந்த இளைஞன்.

இதனைக் கேட்ட அந்த ஆங்கிலேயரின் மெய் சிலிர்த்துவிட்டது. சிந்தனை சுழன்றது. ஆயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன்னர் முஹம்மது நபி (ஸல்) அறிவுறுத்திய போதனை இன்றும் மேற்கோளாக எடுத்துக் காண்பிக்கப்பட்டு ஒரு முன்மாதிரியாகக் கருதப்படுகின்றது என்றால் அந்த மாமனிதரின் வாழ்க்கை முறை எத்தகைய மகத்துவமுடையதாக இருக்க வேண்டும் என அந்த ஆங்கிலேயர் சிந்திக்கலானார்.

இவரின் தகப்பனார் சார்ள்ஸ் ஜி. பிக்தால் என்ற கிறிஸ்தவ பாதிரியாவார்.

இந்நிகழ்ச்சிக்குப் பின்னர் அந்த ஆங்கில அதிகாரியான மார்மடியுக் பிக்தால் தமது வேலையைத் துறந்தார். அரபு மொழியை முறையாகக் கற்றார். புனித இஸ்லாத்தைத் தழுவினார். புனித குர்ஆனை ஆங்கில மொழியில் மொழி பெயர்த்தார். எகிப்து அல் அஸ்ஹர் சர்வகலாசாலையின் இஸ்லாமிய மத அறிஞர்களின் சிபார்சுடன் அதனை வெளியிட்டார்.

அத்தோடு நிற்காமல் இந்தியா உட்பட பல நாடுகளுக்கும் பிரயாணம் செய்து, இஸ்லாமியக் கலைப்பண்பு, ஒழுக்க விழுமியங்கள் குறித்து உரையாற்றி த∴வா பணி புரிந்தார்.

நபிகள் பெருமானாரின் வாழ்வும், வாக்கும் அன்றும் இன்றும் என்றும் செல்வாக்குடையவை, சிறப்பானவை, பயன்மிக்கவை என்பது இந்தச் சம்பவம் உலகிற்கு எடுத்துக் காட்டுகிறது. இஸ்லாமிய ஒழுக்க விழுமியங்களை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.